பிற நாடுகளில் ஸ்தல ஸ்தாபனங்கள்



ஏ.என். சிவராமன்



பிற நாடுகளில் ஸ்தல ஸ்தாபனங்கள்

ஏ. என். சிவராமன்

குமரி மலர் காரியாலயம்
100 மௌபரீஸ் ரோட் : சென்னை-18

முதற்பதிப்பு பிப்ரவரி 1948

விலை ரூபாய் 2-8-0

குமரி மலர் அச்சகம் - சென்னை -18
P. I. C. No. MS 438 : 1000 C.

நன்றி

1945–46-ம் ஆண்டில் நான் 6 மாதம் அமெரிக்காவில் தங்கின போது, அந்நாட்டுடன் சிறிது "பரிச்சயமும் அறிமுகமும்" செய்துகொள்ளத்தான் முடிந்ததே யொழிய எவ்வித நுணுக்கமான ஆராய்ச்சியும் சாத்திய மாகவில்லை.

1946—47-ம் ஆண்டில், இரண்டாம் முறையாக அமெரிக்காவுக்குச் சென்றபோது அங்கு ஸ்தலஸ்தாப னங்கள், தொழிற்சங்கங்கள், பொருளாதாரவாழ்வு ஆகிய மூன்று விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டேன். நியூயார்க்கையும், ஸான்பிரான்ஸிஸ்கோவையும் பார்த்துவிட்டு, அவை தாம் அமெரிக்கா என்று முடிவுகட்டி விடமுடியாது என்பதை நான் என் முதல் பிரயாணத்திலேயே தெரிந்து கொண்டதால், அந்தத் தேசத்தில் குறைந்தது 10 மாகாணங்களிலாவது சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தேன்.

எனது உத்தேசத்தை நான், கோலியர்ஸ் பத்திரிகை யின் பிரதம நிர்வாகியான ஸ்ரீ தாமஸ் பெக் (Thomas Beck) என்பவரிடம் அறிவித்து, "அமெரிக்காவில் எந்த ஊர்களை யெல்லாம் பார்த்தால் அமெரிக்கா பற்றி தெரிந்து கொள்ளமுடியும்" என்று கேட்டேன். அவரது ஆராய்ச்சி இலாகாவில் அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு பிரதேசத்தையும் பற்றி, ஜனத்தொகை, செல்வநிலை, பத்திரிகை படிப்போரின் தொகை, சமூகச் சிக்கல்கள் பற்றிய நிலைமை ஆகிய இவற்றை ஆராய்ந்து தகவல்கள் வைத்திருக்கிறார்கள். இவற்றை ஆதாரமாகக் கொண்டு எனக்கு யோசனை கூறிய ஸ்ரீ தாமஸ் பெக்குக்கும்

அவரது காரியாலயத்துக்கும் நான் மிக்வும் கடமைப் பட்டவன்.

நான் சென்ற ஒவ்வொரு ஊரிலும் நகர நிர்வாகிகள் எனக்குத் தகவல்கள் தருவதிலும், சந்தேகங்களை விளக்குவதிலும் மிகவும் உதவி செய்தார்கள். முன்னெச்சரிக்கையில்லாமல், நான் திடீரென்று சென்ற போதும் சிலர், ஸ்டாம்போர்ட் டவுன் நிர்வாகியான ஸ்ரீ ஜார்ஜ் கிளோஸ் (George R. Close) போன்றவர்கள், தமது வேலைநேரத்துக்குப் பின்னரும் காரியாலயத்தில் தங்கி எனக்கு விஷயங்களை விளக்கினார்கள். டேய்ட்டன் நகருக்கு நான் சென்றபோது, அந்த நகர சபையின் நிதி நிர்வாகி ஸ்ரீ ஹேகர்மன் (Carl C. Hagerman) எல்லா இலாகா தலைவர்களையும் எனக்காகக் கூட்டி வைத்து, எனது கேள்விகளுக்குப் பதிலளிக்க ஏற்பாடு செய்தார். டேய்ட்டன் நகரிலுள்ள நேஷனல் காஷ் ரெஜிஸ்டர் கம்பெனியார், தமது ஸ்தாபனத்தில் "பொது நலத்தொடர்பு இலாகா" என்று ஓர் இலாகா வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இலாகாவின் தலைவர் ஸ்ரீ காட்டன் (W. M. Cotton), மாண்ட்கோமரி கௌன்டியிலுள்ள ஸ்தல ஸ்தாபன ஆராய்ச்சி வேலையில் அதிகமாகப் பங்கு எடுத்துக் கொண்டவர். ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தின் பல ரகங்களையும் புரிந்து கொள்ள, அவருடன் நடத்தின சம்பாஷணை மிகவும் பயன்பட்டது. அவருக்கும் நான் நன்றி செலுத்துவது அவசியம். பிரிட்ஜ்போர்ட் நகரசபையின் சட்டநிபுணர் ஸ்ரீ ஹாரி ஷ்வார்ட்ஷ் (Harry Schwartz.)க்கும் எனது நன்றி உரியது.

ஒவ்வொரு ஊரிலும் நகர சர்க்கார் அல்லது கிராம சர்க்காரால் நடத்தப்படும் வாசகசாலை அதிகாரிகள் எனக்கு மிகவும் ஒத்தாசை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கும் இன்னும் பலருக்கும் எனது நன்றி.

பல நகர சபைகளின் பிரசுரங்கள் இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு உதவின. அவற்றை எனக்குத் தந்த நண்பர்களுக்குத் தனித்தனியாக நன்றி கூறுவது சாத்தியமில்லை.

இப் புத்தகம் தோன்றிய வரலாறுபற்றியும் இரண்டொரு விஷயங்களை அறிவிப்பது அவசியம். சென்ற வருஷம் ஜூன் மாதத்தில் சென்னைச் சர்க்காரின் ஸ்தல ஸ்தாபன மந்திரி, இம் மாகாணத்திலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களை மாற்றியமைக்க ஒரு மசோதா கொண்டு வரப்போவதாக அறிவித்தார். இந்த முக்கியமான பிரச்னையில் சர்க்கார் மசோதா பிரசுரிக்கும்போது அதன் நன்மை தீமைகளைப் பொது ஜனங்கள் சரியாக அறிவது அவசியம் என்று கருதி தினமணியில் பிற நாடுகளில் ஸ்தல சுயாட்சி என்ற தலைப்பின் கீழ் "கணக்கன்" என்ற பெயருடன் சில கட்டுரைகள் எழுதி வந்தேன். அந்தக் கட்டுரைகள் சில மாறுதல்களுடன் இப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தினமணி ஆபீஸ்
30—1—48

ஏ. என். சிவராமன்

உள்ளுறை

பிற நாடுகளில் ஸ்தல ஸ்தாபனங்கள்

முன்னுரை

பசு என்பதற்கு இலக்கணம் கூறுவது கஷ்டம்; ஆனால் பசு என்ற சொல்லால் குறிக்கப்படுவது எது என்பதை யாருக்கும் காட்டி விடமுடியும். அதுபோல உதாரணம் எதுவுமில்லாமல் "ஸ்தல சுயாட்சி ஸ்தாபனம் என்றால் என்ன?" என்று இலக்கணம் கூறுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் ஸ்தல சுயாட்சி ஸ்தாபனம் என்ற சொற்றொடர் எதைக் குறிக்கிறது என்று கேட்டால் ஜில்லா போர்டு, நகரசபை, பஞ்சாயத்து போர்டு முதலியவற்றைக் குறிக்கிறது என்று பதில் சொல்லிவிடலாம்.

"ஸ்தல ஸ்தாபனத்துக்கு" இலக்கணம்

ஒரு சர்க்காரின் ஆதிக்கத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு (ஊருக்கு அல்லது பிரதேசத்துக்கு) மட்டும் பொறுப்பேற்றுக் கொண்டு வேலை செய்யும் ஸ்தாபனத்தை ஸ்தல ஸ்தாபனம் என்று சொல்லலாம். அதாவது அந்த ஸ்தாபனம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுமே வேலை செய்யும்.

அப்படியானால் "தஞ்சை மிராசுதார்கள் சங்கம்" என்ற ஸ்தாபனத்தை ஒரு ஸ்தலஸ்தாபனம் என்று

சொல்லலாமா? முடியாது. ஏனென்றால் சர்க்காரால் ஒப்புக் கொள்ளப்பட்ட அதிகாரம் எதுவும் அதற்கு இல்லை; அந்த ஸ்தாபனத்தின் பேரால் யாரையும் எதுவும் செய்யும்படி கட்டாயப்படுத்த முடியாது.

அதோடு, அதிகார ஸ்தாபனமாகவுமிருந்தால்தான் "ஸ்தல ஸ்தாபனம்" என்று சொல்லுகிறோம்.

அப்படியானால் கலெக்டரின் காரியாலயத்தை ஸ்தல ஸ்தாபனம் என்று சொல்லுகிறோமா? இல்லை. ஏன்? ஜில்லா கலெக்டரின் நிர்வாகக் கொள்கைகள் ஜில்லாவிலுள்ள சமூகத்தினரால் நிர்ணயிக்கப் படுவதில்லை. அவர் மாகாண சர்க்காரின் ஏவலுக்கு உட்பட்டவர். ஜனங்களை நோக்குமிடத்து அவர் ஓர் அதிகாரி; சர்க்காரை நோக்குமிடத்து அவர் ஓர் ஊழியர். "இறுதியான" அதிகாரம் எதுவும் அவருக்கு இல்லை. கலெக்டராபீஸின் வேலைப் பொறுப்பில் ஜனங்கள் பங்கு கொள்வதில்லை.

பொது ஜனங்கள் பங்கு கொண்டு நிர்வகிக்கும் ஸ்தாபனமாக இருந்தால்தான் "ஸ்தல ஸ்தாபனம்" என்று மதிக்க முடியும். அதுமட்டுமல்ல. சிற்சில விஷயங்களில் அந்த ஸ்தாபனத்தின் தீர்ப்பே இறுதி முடிவாக இருக்கவேண்டும்; வெளி அதிகாரிகள் தலையிட இடமிருக்கக் கூடாது. அதாவது ஓரளவு "சுயாட்சி" இருக்க வேண்டும்.

அப்படியானால் ஒரு "கூட்டுறவுச் சங்கத்தை" ஸ்தல ஸ்தாபனம் என்று சொல்லமுடியுமா? முடியாது. ஏனென்றால் ஒரு "ஜில்லா கூட்டுறவுச் சங்கம்" அந்தச் சங்கத்தில் அங்கத்தினராக சேர்ந்தவர்களைத்தான் கட்டுப்படுத்த முடியும். ஸ்தல ஸ்தாபனம் அப்படியல்ல; குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் எல்லா மக்களின்

வாழ்க்கையிலும் சில அம்சங்களில் அதிகாரத்துடன் தலையிடக்கூடிய உரிமையுள்ள ஸ்தாபனத்தையே 'ஸ்தல ஸ்தாபனம்' எனலாம். அதுமட்டுமல்ல.

ஜனங்கள் வாழாத சில காட்டுப் பிரதேசங்கள் இருக்கின்றன. அங்குள்ள மரம், செடி, புதர்களைப் பக்கத்து கிராமத்தார் கண்டபடி தாறுமாருக வெட்டிப் பாழ்படுத்தி விடாதபடி பாதுகாப்பதற்கும், அந்தக் காட்டை நன்கு பேணி வைத்துக்கொள்வதற்கும் "காட்டு பஞ்சாயத்துக்கள்" இருக்கின்றன. நாம் இப் புத்தகத்தில் உபயோகிக்கும், "ஸ்தல ஸ்தாபனங்கள்" என்ற சொல் அவற்றைக் குறிக்காது.

ஆகவே, ஜனங்கள் வீடுகட்டி வசிக்கின்ற ஊர்களிலும் பிரதேசங்களிலும் இயங்கும் ஸ்தாபனத்தைத் தான் "ஸ்தல ஸ்தாபனம்" என்று குறித்திருக்கிரும்.

மேலே குறிப்பிட்ட "இடம்" "பொருள்" "ஏவல்" பற்றிய அடையாளங்களால் "ஸ்தல ஸ்தாபனம்" என்ற சொல்லுக்கு இலக்கணம் கூறவேண்டும்.

குறிப்பிட்ட எல்லையுள்ளதாகவும், ஜனங்கள் வசிப்பதாகவுமுள்ள ஒரு பிரதேசம்; அந்தப் பிரதேசத்தின் நிர்வாகத்தில் அதிகார உரிமை; வரி விதிக்கும் அதிகாரம்; நிர்வாகத்தில் ஓரளவு சுதந்திரம்; அதிகாரத்தில் பொது ஜனங்கள் பங்கு கொள்வது; ஆகிய அம்சங்கள் உள்ள ஒரு ஸ்தாபனத்தையே "ஸ்தல ஸ்தாபனம்" என்று குறிப்பிடுகிரும்.

சென்னைமாகாணத்து ஸ்தல ஸ்தாபன அமைப்பு

"ஸ்தல ஸ்தாபனம்" என்ற வார்த்தையையும் "ஸ்தல சுயாட்சி ஸ்தாபனம்" என்பதையும் இப்புத்தகத்தில் ஒரே பொருளுடன்தான் உபயோகிக்கிரும்.

இந்தியாவில் 1920-ம் வருஷத்துக்குப் பிறகுதான் ஸ்தல ஸ்தாபனங்கள் ஸ்தல சுயாட்சி ஸ்தாபனம் என்ற பெயருக்குத் தகுதியாயின. அதற்குமுன் ஸ்தல ஸ்தாபனங்கள் கலெக்டர்களின் கண்காணிப்பிலேயே இருந்து வந்தன. உண்மையில் அப்போதிருந்த ஸ்தல ஸ்தாபனங்களை "ஸ்தல ஆலோசனை ஸ்தாபனங்கள்" என்றுதான் மதிக்கமுடியும்.

சுமார் 70 வருடங்களுக்கு முன்னர், லார்ட் ரிப்பன் என்ற வைசிராயின் (ராஜப்பிரதிநிதியின்) யோசனையின் படி ஸ்தல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டபோது, அவை உண்மையான அதிகாரமுள்ள சுயாட்சி ஸ்தாபனங்களாக ஏற்படுத்தப்படவில்லை. ஸ்தல சுயாட்சிக்கு "மக்களை தயார் செய்வதே" முக்கிய நோக்கமாக இருந்தது.

ஆனால் அந்தக் காலத்தில் கிராமப் பிரதேசங்களில், மக்களின் வாழ்க்கைக்கும் சர்க்காரின் நிர்வாகத்துக்கும் சம்பந்தமோ தொடர்போ இருக்கவில்லை. நிலவரி நிர்ணயம், நிலவரி வசூல், சில கோர்ட்டுகள் இவற்றைத்தவிர கிராமவாசிகளுக்குச் "சர்க்கார்" ஒன்று இருப்பதாக எண்ணுவதற்கே இடம் இருந்ததில்லை. அப்படியானல் கிராமங்களில் பொதுக் காரியங்கள் எதுவும் நடக்கவில்லையா? நடந்து கொண்டுதான் இருந்தன. ஊர்க்கட்டுப்பாடு, கிராம பஞ்சாயத்து, ஜாதிக்கட்டுப்பாடு என்ற முறைகளுடன் நாட்டாண்மைக்காரர்களும் "பெரிய பரம்பரை"க்காரர்களும் "தர்மகர்த்தாக்களும்" இருந்து, தம ஊருக்கு வேண்டிய பொதுக் காரியங்களைக் கவனித்து வந்தார்கள். இவ்வாறு "கிராம சுயாட்சி" காரியாம்சத்தில் இருந்ததாயினும், அந்தக் கிராம சுயாட்சிக்குச் "சட்டபூர்வமான அந்தஸ்து" எதுவும் இருக்கவில்லை.

அப்போது இருந்த நிலைமை மிகவும் விசித்திரமானது. தற்காலத்து ஜனநாயக தத்துவங்களுக்கு முரணாக, ஆனால் அக்காலத்து சமூக கருத்துக்களுக்குப் பொருத்தமாக, ஒருவகையான "கிராம சுயாட்சி" காரியாம்சத்தில் திறமையுடன் நடந்து வந்தது. அதற்குச் சர்க்காரின் தொடர்பும் சட்டபூர்வமான அந்தஸ்துமில்லை. அதே சமயத்தில் சர்க்காரின் தொடர்புடன் சில ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப் பட்டன; அவற்றில் உண்மையான "சுயாட்சி" இல்லை!

சட்டபூர்வமாக அமையாத கிராம சுயாட்சி, நீதி யோக்கியப் பொறுப்பு, திறமை முதலிய அம்சங்களில் குறைந்ததாக இருக்கவில்லை. ஜாதிபற்றிய உயர்வு தாழ்வு நிமித்தமாக அது இப்போதுள்ள ஜனநாயகக் கொள்கைக்குப் பொருத்தமாக இருக்கவில்லை யென்று மட்டும் குறைகூற முடியும்.

இங்கிலாந்தில் கிராமாந்தரங்களில் (பாரிஷ்களில்) இந்நூற்றாண்டிலும் ஜனநாயக தத்துவத்துக்கு முரண்பட்டக்கூடிய முறைகள் இருப்பதை இப்புத்தகத்தில் 32, 33-ம் பக்கங்களில் காணலாம்.

சரித்திர வரலாறு

இந்நாட்டில் சட்ட பூர்வமான ஸ்தல ஸ்தாபனங்கள் புகுத்தப்பட்ட வரலாறுகளை மூன்று கட்டமாக பிரிக்கலாம். (1) 1882-ம் வருஷத்துக்கு முன்னர். (2) 1882 வருஷத்திலிருந்து 1920-ம் வருஷம் வரை. (3) 1920-ம் வருஷத்துக்குப்பின்னர்.

1882-ம் வருஷத்துக்கு முன்னர் கிராமாந்தரப் பிரதேசத்தில் ஸ்தல ஸ்தாபனமே கிடையாது. முதலில் வெள்ளையர்கள் வசித்த தலைநகரங்களான கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற இடங்களில் கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. பிறகு 1842-ம்

வருஷத்துக்கும் 1862-ம் வருஷத்துக்கு மிடையே சில நகரங்களில் மட்டும் நகர சபைகள் (முனிசிபாலிட்டிகள்) ஏற்படுத்தினார்கள். அந்தக் காலத்தில் ஜில்லா போர்டு, தாலுகா போர்டு போன்ற "பிரதேச" ஸ்தல ஸ்தாபனங்களோ, பெரிய ஊர்களில் "யூனியன்" என்ற "ஊர் ஸ்தாபனங்களோ" ஏற்படவில்லை.

1882ம் வருத்துக்குப் பிறகு கிராமாந்தரப் பிரதேசங்களில் அதாவது பெரிய நகரங்களில்லாத பிரதேசத்தில் ஸ்தல சுயாட்சி புகுத்தப்பட்டது. யூனியன் போர்டு, தாலுகா போர்டு, ஜில்லா போர்டு ஆகிய ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. முதலில் சுமார் 5000 ஜனத் தொகைக்கு மேற்பட்ட ஊர்களில் மட்டும் தான் "யூனியன் போர்டுகள்" ஏற்படுத்தினார்கள். பிறகு ஜனத்தொகை குறைவாகவுள்ள சில கிராமங்களிலும் "யூனியன் போர்டு" ஏற்படுத்தினார்கள். பெரிய ஊர்களிலுள்ள யூனியன் போர்டுகளுக்கு "மேஜர் யூனியன்" என்றும் சிறிய ஊர்களிலுள்ள யூனியன் போர்டுக்கு "மைனர் யூனியன்" என்றும் பெயர் கொடுத்தார்கள். இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் யாவற்றின் மீதும் கலெக்டருக்கோ, சப்கலெக்டருக்கோ, மேற்பார்வை அதிகாரமும் நிர்வாக அதிகாரமும் சில மெம்பர்களை நியமனம் செய்யும் அதிகாரமும் இருந்து வந்தன. இவ்வாறு 1918-ம் வருஷத்துக்கு முன்னர் இம் மாகாணத்தில் 6 வகையான ஸ்தல ஸ்தாபனங்கள் இருந்தன. (1) சென்னை கார்ப்பரேஷன் (2) நகர முனிசிபாலிட்டிகள். (3) மேஜர் யூனியன் போர்டுகள். (4) மைனர் யூனியன் போர்டுகள். (5) தாலுகா போர்டுகள். (6) ஜில்லா போர்டுகள். பெரும்பாலான கிராமங்களில் சட்ட பூர்வமான ஸ்தல ஸ்தாபனம் எதுவுமிருக்கவில்லை. அந்தக் கிராமங்களின்

சேவையைத் தாலுகா போர்டுகளும் ஜில்லா போர்டு களும் கவனித்துக்கொள்ளும் என்று கருதப்பட்டது.

பஞ்சாயத்துகளுக்குத் தனிச்சட்டம்

1920-ம் வருஷத்தில் "மாண்டேகு—செம்ஸ்போர்ட் திட்டம்" என்று சொல்லப்படும் புது அரசியலமைப்பு ஏற்பட்ட பிறகு மாகாண சட்ட சபையில் நியமன அங்கத்தினர்கள் இல்லாமல், சில இலாகாக்கள் மந்திரிகளிடம் ஒப்படைக்கப் பட்டன. ஸ்தல ஸ்தாபன இலாகா பொது ஜன மந்திரிகளிடம் விடப்பட்டது. பிறகு ஸ்தல ஸ்தாபனச் சட்டங்களை மாற்றியமைத்து நியமன ஸ்தாபனங்கள் ரத்து செய்யப்பட்டு அந்த ஸ்தாபனங்களுக்குச் சுயாட்சி கொடுக்கப் பட்டது. 1920-ம் வருஷம் வரையில் இம்மாகாணத்தில் ஸ்தல ஸ்தாபனங்கள் விஷயமாக மூன்று சட்டங்கள் இருந்தன. (1) சென்னை நகரம் "மதருஸ் ஸிட்டி முனிசிபாலிட்டி சட்டத்தின்" கீழும் (2) மற்ற நகரங்கள் "மதராஸ் டிஸ்டிரிக்ட் முனிசிபாலிட்டி சட்டத்தின்" கீழும், (3) ஜில்லா போர்டு, தாலுகா போர்டு, மேஜர் யூனியன் போர்டு, மைனர் யூனியன் போர்டு ஆகியவை "மதராஸ் லோகல் போர்டு" சட்டத்தின் கீழும் நிர்வகிக்கப்பட்டன. 1920-ம் வருஷத்தில் இந்த மூன்று சட்டங்களும் மாற்றப்பட்டதோடு புதிதாக "பஞ்சாயத்து சட்டம்" ஒன்று இயற்றப்பட்டது. அது வரையில் "யூனியன் போர்டு" ஏற்படாத பல சிறு கிராமங்களில் பஞ்சாயத்து போர்டுகள் ஏற்படுத்தப் பட்டன. ஆகவே ஸ்தல ஸ்தாபனங்கள் விஷயமாக 4 சட்டங்கள் அமுலில் இருந்தன.

1930-ம் வருஷத்தில் இந்த அமைப்பை மாற்றி "பஞ்சாயத்து சட்டத்தை" ரத்து செய்து, பழைய யூனியன்களின் பெயரையும் பஞ்சாயத்து என்று மாற்றி அந்த "மைனர் யூனியன்" களையும், பஞ்சாயத்துச் சட்டத்தின்படி ஏற்படுத்திய பஞ்சாயத்துகளையும் "ஸ்தல ஸ்தாபன

சட்டத்தின்" கீழ் கொண்டு வந்தார்கள். அதோடு ஒரு மாறுதலும் செய்தார்கள். இதுவரையில் "தாலுகா போர்டு" என்பது ஒரு தாலுக்காவுக்கு ஒரு போர்டு என்றில்லாமல் இரண்டு தாலுக்காகள் கொண்ட ஒரு "டிவிஷனுக்கு" ஒரு தாலுகா போர்டாக இருந்தது. 1930-ம் வருஷத்து சட்டத்தில் ஒரு தாலுகாவுக்கு ஒரு போர்டு என்று ஏற்படுத்தினார்கள்.

இது சம்பந்தமாக குறிப்பிடவேண்டிய விஷயங்கள் சில உள. யூனியன்கள் பெரும்பாலும் அதிக ஜனத்தொகையுள்ள பட்டணங்கள். பல "யூனியன்" கிராமங்கள் தாலுகாவின் தலைநகருக்குச் சமமான ஜனத்தொகையும் முக்கியத்துவமும் வாய்ந்தவை. ஆனால் 1920-ம் வருஷ பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்திய பஞ்சாயத்துக் கிராமங்கள் மிகவும் சிறியவை. இவற்றைத் தனிச் சட்டங்கள் மூலம் சிருஷ்டித்ததன் நோக்கம் இவற்றுக்கு அதிகமான சலுகையளித்துப் பராமரித்துப் பேணி வளர்க்கவேண்டும் என்பதுதான். இந்தப் பராமரிப்பு 1930-ம் வருஷத்து மாறுதலால் பாதிக்கப்பட்டது.

பஞ்சாயத்துகள் வளருவதில் ஜில்லா போர்டுகளுக்கு அக்கரை யில்லாது போகும்படி பண விஷயத்தில் ஓர் ஏற்பாடு செய்தார்கள். அதாவது நிலவரி செஸ்ஸில் ஒரு பாகம் ஜில்லா போர்டு, தாலுகா போர்டு ஆகியவற்றுக்கும் ஒரு பாகம் பஞ்சாயத்துக்கும் ஒதுக்கப்பட்டது. ஒரு கிராமத்தில் பஞ்சாயத்து இல்லை யென்றால் அந்தப் பணம் ஜில்லா போர்டுக்கே போகும். ஆகையால் கிராமங்களில் பஞ்சாயத்து ஏற்படாமலிருப்பதில் தான் ஜில்லா போர்டு அக்கரை கொள்ளும்!

அப்போது நடந்த சர்ச்சைகள்

1930-ம் வருஷத்து ஸ்தல ஸ்தாபன சட்டம் (லோகல் போர்டுகள் சட்டம்) பற்றி குறிப்பிடத்தக்க மற்றொரு

ஷியும் தாலுகா போர்டுகளைப்பற்றியது. தாலுகா போர்டுகளை ரத்து செய்து "கிராமவட்ட போர்டுகள்" (ஸர்க்கில் போர்டுகள்) ஏற்படுத்த வேண்டுமென்று மசோதாவில் சொன்னார்கள். ஆனால் மசோதாவைப் பரிசீலனை செய்த பொறுக்குக்கமிட்டியார், ஸர்க்கில் போர்டுகள் வேண்டாமென்றும், தாலுகா போர்டுகளே வேண்டுமென்றும் கூறினார்கள். அதுதான் சட்டமாக நிறைவேறியது. ஆனால் 1934-ம் வருஷத்தில் தாலுகா போர்டுகளையும் ரத்து செய்தார்கள்! கிராம வட்ட போர்டுகள் ஏற்படுத்தலாம் என்று இந்தப் புத்தகத்தில் 175-176ம் பக்கங்களில் சொல்லியுள்ள யோசனை ஏற்கனவே ஒரு தடவை பிரேரித்து நிராகரிக்கப்பட்டதுதான். கிராம வட்ட போர்டுகளைப் பிர்க்கா போர்டுகள் என்றும் சொல்லலாம்.

இப்போதுள்ள நிலைமை

1930-ம் வருஷத்துக்குப் பிறகு ஸ்தல ஸ்தாபனச் சட்டத்தில் பல மாறுதல்கள் நடந்திருக்கின்றன. அதில் முக்கியமானது 1934-ம்வருஷத்தில் தாலுகாபோர்டுகளை ரத்து செய்ததுதான். மற்ற மாறுதல்கள் அவ்வளவு முக்கியமல்ல. சட்டத்தின்படி போடப்பட்ட சில நிர்வாக உத்தரவுகள் மூலம் பஞ்சாயத்துகள், "மேஜர் பஞ்சாயத்துகள்" (பெரிய பஞ்சாயத்துகள்)என்றும், "மைனர் பஞ்சாயத்துகள்" (சிறிய பஞ்சாயத்துகள்) என்றும் இரண்டு வகையாக மதிக்கப்படுகின்றன. வருஷம் ரூ. 3000-க்கு அதிகமானவருமானம் இருந்தால் அதைப் பெரியபஞ்சாயத்து எனவும், வருமானம் ரூ. 3000-க்கு குறைவாக இருந்தால் சிறிய பஞ்சாயத்து எனவும் மதிக்கிறார்கள். இப்போது அமுலிலுள்ள உத்தரவுகளின்படி, ஒரு கிராமத்தில் 1000-க்கு மேற்பட்ட ஜனத்தொகையும் சுமார் ரூ. 6400-க்கு மேற்பட்ட நிலவரியும் இருந்தால் அந்தக் கிராமத்தார் தமது ஊருக்கு ஒரு பஞ்சாயத்து

வேண்டுமென "பஞ்சாயத்து இன்ஸ்பெக்டர்" என்ற அதி காரிக்கு மனுசெய்து கொள்ளலாம். அந்த அதிகாரி வந்து கிராமத்தைப் பார்வையிட்ட பின்னர், சர்க்கார், அதை ஒரு பஞ்சாயத்து கிராமம் என்று அறிவித்து, பஞ்சாயத்துக்குத் தேர்தல் முதலிய ஏற்பாடுகள் நடத்தி, பிறகு அந்த ஊர் நிலவரிமீது ஜில்லாபோர்டு சார்பில் வசூலிக்கப்பட்ட 2 அணு செஸ்ஸில் அரை அணு வீதம் கிராம பஞ்சாயத்துக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யும்.

பஞ்சாயத்தின் ஸ்திரமான வருமானம் இந்த செஸ் தான். ஆனால் வீட்டுவரி, வண்டிகள் கடைகள் முதலிய வற்றுக்கு லைசென்ஸ் வரி, கிராமத்தில் சந்தை இருந் தால் (அது ஜில்லா போர்டுச் சந்தையாக இல்லா விடில்) சந்தை வரி, கிராமப் பொதுவில் ஏற்படுத்தி யுள்ள வண்டிப் பேட்டைகளில் விதிக்கும் கட்டணத் தொகை, கிராம சமுதாயத்தைச் சேர்ந்த இதர வருமானங்கள் இவையெல்லாம் பஞ்சாயத்தின் நிதியாக மதிக்கப்படும்.

பஞ்சாயத்துகள் எந்த விஷயங்களில் எவ்வளவு செலவு செய்யலாமென்பது பற்றி பஞ்சாயத்து இன்ஸ்பெக்டர் அவ்வப்போது யோசனைகளும் உத்தரவு களும் போடலாம். பஞ்சாயத்தின் வரவு செலவு பட்ஜெட் ஊர்ஜிதமாகுமுன் பஞ்சாயத்து இன்ஸ் பெக்டரின் சம்மதமும் தேவை. எந்த விஷயங்களில் எவ்வளவு செலவிடலாமென்று அறிவித்து அவ்வப் போது எல்லா பஞ்சாயத்துகளுக்கும் பொதுவான சில சுற்றறிக்கைகள் பஞ்சாயத்து இன்ஸ்பெக்டரிடமிருந்து அனுப்பப்படும்.

சாதாரணமாக ஒழுங்காக நடக்கும் ஒரு பஞ்சா யத்து தன் வருமானத்தில்,

குமாஸ்தா, வரி வசூல், செலவுகளில் 13 சத விகிதம்
ரஸ்தாக்களைச் செம்மை படுத்தி
வைத்துக்கொள்வதில் 35 ,,
கல்வியில் 2 ,,
தெருக்கள், குடி தண்ணீர் முதலிய
வற்றின் சுத்தத்துக்காக் 40 ,,
செலவிடலாம் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள்.

பஞ்சாயத்து போர்டுக்கு எவ்வளவு வருமானமிருந்தால் குமாஸ்தா வைத்துக் கொள்ளலாம், அவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கலாம் என்பது போன்ற விவரங்களைப் பற்றிக்கூட பஞ்சாயத்து இன்ஸ்பெக்டரும் அவருக்குக் கீழேயுள்ள ஜில்லா பஞ்சாயத்து ஆபிஸர் போன்ற அதிகாரிகளும் பஞ்சாயத்துகளுக்கு உத்தரவுகளும் சிபார்சுகளும் அனுப்பமுடியும். மாகாண சர்க்காரின்சார்பிலேயே இன்ஸ்பெக்டர்கள் இவ்வாறு உத்தரவுகள் போடுகிறார்கள். மொத்தத்தில் சிறிய பஞ்சாயத்துகளில் பெரும்பாலானவை சுயாட்சிக்கு லாயக்கில்லாத ஸ்தாபனங்களாகவே பாவிக்கப்பட்டு வருவதாகச் சொல்லலாம். திறமையாக நடக்கும் பஞ்சாயத்துகள், சர்க்காரின் தலையீட்டை ஓர் இம்சை என்று மதித்து வெறுக்கின்றன. சுமார் 22000 கிராமங்கள் இருக்கும் இம் மாகாணத்தில் சுமார் 7000 கிராமங்களில்தான் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. ஜில்லா போர்டுகள் கிராமங்களின் தேவைகளைக் கவனிக்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகையால் பெருவாரியான கிராமங்கள் ஸ்தல சுயாட்சியின் பயன் எதையும் அனுபவிக்காமல் இருக்கின்றன. நகர சபைகள் (முனிஸிபாலிட்டிகள்) தமது பொறுப்புக்கும், அவசியம் கவனிக்கவேண்டிய பல புதிய தேவைகளுக்கும் வேண்டிய பண வசதிகள் இல்லாமல் தவிக்கின்றன. புதிய வசதிகள் அதிகரிக்க வேண்டு

மென்று நினைப்பவர்களும் அதற்காக பணம் செலவிட வேண்டியதே என்று நினைப்பவர்களும் மிகவும் குறைவாகவே இருக்கிறார்கள். யுத்தகாலத்தில் ஏற்பட்ட விலைவாசி உயர்வுக்குத் தக்கபடி வரி வருமானம் உயரவில்லை. இவ்வாறு நகரசபைகள் திணறிக்கொண்டிருக்கின்றன. இதுதான் இப்போதுள்ள நிலைமை.

1930-ம்வருஷத்துக்கு முன்னால் இருந்தது போலே பஞ்சாயத்துகளைப்பற்றி தனியாக சட்டம் இயற்றி "லோகல் போர்டு சட்டத்தின்" (ஸ்தல ஸ்தாபன சட்டத்தின) ஆளுகையிலிருந்து பஞ்சாயத்துகளை வேருக்ப் பிரிப்பதற்கு 1946-ம் வருஷத்தில் "கவர்னர் சர்க்கார்" ஒரு சட்டம் இயற்றியது. அது அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை.

லக்ஷியங்கள்

ஸ்தல ஸ்தாபனங்கள் திறமையாக நடந்து, மக்களின் அன்றாட வாழ்க்கை பற்றிய பொதுவசதிகளை ஆங்காங்கு கவனித்துக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டாலொழிய மாகாண சர்க்கார்கள் மாகாண முழுதுக்குமான பிரச்னைகளில் கவனம் செலுத்துவது சாத்தியமல்ல. ஆகையால் எத்தனை விஷயங்களை ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்க முடியுமோ அத்தனையையும் ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்படைத்து விடவேண்டும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், பெரிய மின்சாரத் திட்டங்கள், பல ஜில்லாக்கள் சேர்ந்து செய்யவேண்டிய காரியங்கள், தொழிலாளர் பிரச்னை, அமைதியைச் சீர்குலைக்கக்கூடிய சமூகப் பிரச்னைகள், போலீஸ், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் இவற்றைத்தவிர வேறு விஷயங்களில் முக்கிய பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களிடமே இருக்கவேண்டும்.

கல்வி, சுத்தம், சுகாதாரம், வைத்தியம், அந்தந்த ஊர்களில் சாதாரணமாக இருக்கக்கூடிய க்ஷேம நிவாரணப் பொறுப்புக்கள் இவை யாவற்றிலும் மாகாண சர்க்கார் பண உதவி செய்வதாயிருந்தாலும் முக்கியமான பணப் பொறுப்பும் நிர்வாகப் பொறுப்பும் அந்தந்த ஜில்லாவில், தாலுகாவில், அல்லது ஊரில் தான் இருக்க வேண்டும்.

கல்வித்துறையில், எஞ்சினியரிங் கல்லூரி, வைத்தியக் கல்லூரி, சட்டக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி போன்று மாகாணம் முழுதுக்கும் பொதுவான பெரிய கல்லூரிகள் மட்டுமே மாகாண சர்க்காரின் பொறுப்பில் இருக்கவேண்டும்.

மாகாண சர்க்காரின் வேலை குறையவேண்டும்

ஸ்தல ஸ்தாபனங்களின் வேலைக்கு உதவியான தகவல்கள் திரட்டி, ஆராய்ச்சிகள் செய்து, பரஸ்பரம் தொடர்பு ஏற்படுத்தி உதவி செய்யும் பொறுப்பு மட்டுமே மாகாண சர்க்காருக்கு இருக்கலாம். ஒவ்வொரு ஜில்லாவிலும் "உள்ளூர்" விஷயங்களில் அந்தந்த ஜில்லாவுக்குள்ளேயே இறுதியாக முடிவு கட்டப்பட வேண்டும். மாகாண சர்க்கார்களுக்கு அப்பீல் செய்வது என்பதே இருக்கக்கூடாது. பெரிய விபத்துகள் அல்லது பெரும் கலவரங்கள் ஏற்பட்டு ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் தகர்ந்து போகும் நிலைமை ஏற்பட்டால்தான் மாகாண சர்க்கார் "ஸ்தல" விஷயங்களில் தலையிடலாம். ஏதேனும் ஒரு ஸ்தல ஸ்தாபனத்தில் ஊழலோ, சீர்கேடோ ஏற்பட்டதென்றால் அதன் பலனை அனுபவிக்கும் ஜனங்கள் தமது வோட்டின் மூலம் நிர்வாகத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று எண்ணி மாகாண சர்க்கார் தலையிடாமல் விட்டுவிட வேண்டியதுதான். சட்ட விரோதமான காரியங்கள்

நடந்தால் அது நீதிமன்றங்கள் கவனித்துக்கொள்ள வேண்டிய விஷயம். மாகாண சர்க்கார் தம் நிர்வாக அதிகாரத்தைப் பிரயோகித்துத் தலையிடும் முறை கூடாது.

ஊழல்கள் மிகவும் விகாரமான தோற்றத்தில் சீறும் போது ஜனங்கள் தாமாகவே அதைத் திருத்திவிடுகிறார்கள். அவ்வாறு திருத்திக்கொள்வதற்குள்ள சுதந்திரம் மட்டும் அந்தந்த ஊர்களில் ஜனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். இதுதான் அமெரிக்காவின் அனுபவம். அங்கு சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் எந்த நகர சபைகளில் சுயநலக் கும்பல்களின் ஆதிக்கமும் ஊழல்களும் மலிந்து கிடந்தனவோ அந்த நகரங்களில்தான் இப்போது மிகவும் திறமையான நிர்வாகம் நடக்கிறது! அரசியல் கட்சிகளின் பூசல்களால் நிர்வாகம் திறமையற்று ஊழல் மலிந்த பல நகரங்களில் ஜனங்களிடையே புது உணர்ச்சி தோன்றி, நகரசபையில் கட்சிவாதமே கூடாது என்ற அடிப்படையில் "நகர சீர்திருத்த சங்கங்கள்" தோன்றி, பதவிவேட்டைக் கும்பல்களை ஒடுக்கியிருக்கிறார்கள். ஆகையால் மாகாண சர்க்கார் நகரங்களின் நிர்வாகத்துக்குப் "பாதுகாப்பாளராக" தலையிடுவது அவசியம் என்று நினைப்பது தவறாகும். "அரசனெப்படியோ, அப்படியே குடிகளும்" என்பது பழமொழி. "குடிகளெப்படியோ, அரசும் அப்படி" என்பது ஜனநாயக யுகத்தின் புதுமொழி. ஜனங்கள் யோக்கியர்களாகவும், புத்திசாலிகளாகவுமிருந்தால் அவர்களது ஊர்களை ஆளும் ஸ்தல ஸ்தாபனமும் யோக்கியமாகவும் புத்திசாலித்தனமாகவும் நடந்துகொள்ளும். தவறாக நடந்தால் அதை மாற்றும் உரிமை ஜனங்களுடையது. மேலிடத்திலிருந்து தலையீடு இருக்காது என்று நினைத்தால்தான் ஜனங்கள் தமது இந்தப் பொறுப்பை உணருவார்கள். இந்த அடிப்படை மீதுதான் ஸ்தல ஸ்தாபனங்களைப்பற்றி யோசிக்க

வேண்டும். ஜனநாயகம் என்றாலே சிறிது திறமைக் குறைவு இருக்கத்தான் செய்யும். திறமைக்குறைவையும் ஊழலையும் தடுப்பதற்காக மாகாண சர்க்கார் முன்வர வேண்டுமென்று சொல்வதாயின், அந்த மாகாண சர்க்காரின் திறமையின்மையை அல்லது ஊழலைத் தடுப்பதற்கு அதற்குமேல் ஒரு சர்க்கார் வேண்டும் என்று ஏற்படும்! இப்படியே போனால் எல்லையே தெரியாது போய் ஜனநாயகமே கூடாது என்று முடிவுகட்டும்படி ஏற்படும். ஒரு ஸ்தல ஸ்தாபனத்தின் ஊழல் அதன் எல்லைக்குப் புறம்பான இடங்களைப்பாதிப்பதாக புகார் இருந்தால் மட்டுமே, அல்லது மாகாண சர்க்காரின் வேலையைக் கெடுப்பதாக இருந்தால் மட்டுமே மாகாண சர்க்கார் தலையிடலாம்.

"சர்க்கார் இலாகாக்களின் வேலை வருஷா வருஷம் அதிகமாகி வருகிறது. நாகரிகம் அதிகரிக்க அதிகரிக்க, தேசத்தின் வளம் அதிகரிக்க அதிகரிக்க, சர்க்காரின் வேலைப் பளுவும் அதிகரித்து வருகிறது. எந்த இலாகாவின் வருஷாந்தர அறிக்கையைப் பார்த்தாலும் "அதிகாரிகளுக்கு வேலைச் சுமை மிகவும் அதிகரித்து வருகிறது" என்ற புகாரே காணப்படுகிறது. "எங்கள் இலாகாவில் சிப்பந்திகளின் தொகையை அதிகப்படுத்த வேண்டும்" என்று ஒவ்வொரு இலாகாவும் கதறுகிறது. இந்த நிலைமைக்கு என்ன பரிகாரம்? தங்களுடைய விவகாரங்களை சாத்தியமானவரையில் தாங்களே பார்த்துக் கொள்ளும்படி கிராமத்தார்களைத் தூண்டுவதுதான் வழி. அரசாங்கத் தேவையை உத்தேசித்து அதிகாரிகள் கையில் வைத்துக்கொள்வது அத்தியாவசியம் என்று நாம் கருதுவதைத் தவிர, மற்றெல்லா விஷயங்களையும் ஆங்காங்கு பொது ஜனங்களிடம் விட்டு விட்டு, அவர்கள் தன்னம்பிக்கையுடன் நடந்து கொள்ளும் படி தூண்டுவதே சர்க்காரின் கஷ்டம் குறைவதற்கு வழி"

என்ற கருத்துடன், 1882-ம் வருஷத்தில் வைசிராய் லார்ட் ரிப்பன் கூறியது இன்றைக்கும் பொருந்தும்.

இப்போது மாகாண சர்க்கார் துணிகரமாக, தம் பொறுப்புக்களில் பெரும்பகுதியை இன்னும் நாலைந்து வருஷத்துக்குள் ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்க வில்லையானால், மாகாண சர்க்கார் தன் சுமையைத் தாங்கமுடியாமல் திணறிப்போகும் என்பதில் சந்தேகமே யில்லை. அதிகாரத்தை ஓர் இடத்தில் கொண்டுவந்து "குவிப்பது" தனி அதிகாரவர்க்க ஆட்சியிலோ, எதேச்சாதிகார ஆட்சியிலோதான் சாத்தியம். அதி காரத்தைப் "பரவலாக" ஆங்காங்கு பங்கிட்டால்தான் ஜனநாயக அரசாங்கத்துக்குச் சிறிது நிலைத்துக் காரியம் செய்வதற்குள்ள அவகாசமும் மன அமைதியும் இருக்க முடியும்.

"ஸ்தல ஸ்தாபனங்களிடம் எவ்வளவு அதிகாரங் களை ஒப்படைக்கலாம்?" என்று யோசிப்பதை விட்டு விட்டு, "மாகாண சர்க்கார்கள் எந்த விஷயங்களைத் தம் கையில் வைத்துக் கொள்ளவேண்டும்?" என்று யோசிக்க வேண்டும். இந்த லக்ஷியங்கள் பிறநாடுகளில், பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் எவ்வளவு தூரம், என்ன முறையில் செயல்படுகின்றன என்பதைப் பின் வரும் அத்தியாயங்களில் காணலாம்.

இங்கிலாந்து

ஸ்தல சுயாட்சியின் பொது அமைப்பு

"ஸ்தல சுயாட்சி" என்ற தத்துவமே இங்கிலாந்தில்தான் பிறந்தது என்று ஆங்கிலேயர்கள் சொல்லிக் கொள்வதுண்டு. இதை ஒப்புக்கொள்வது சாத்தியமல்ல. ஏனென்றால், இங்கிலாந்தில் நாகரிக ஆட்சி ஏற்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, சந்திரகுப்தன் அசோகன் ஆகிய மௌரிய வம்சத்தினர் காலத்தில், இன்றும் கூட எந்த நாட்டிலும் காணமுடியாத உயர்ந்த ரகமான ஸ்தல சுயாட்சி, இந்தியாவில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் ஒரு விஷயத்தில் இங்கிலாந்து பெருமை கொள்ள முடியும். அதாவது இந்தியாவில் ஸ்தல சுயாட்சி அழிந்துபோனது போல, இங்கிலாந்தில் ஸ்தல சுயாட்சி அழிந்து போகவில்லை. அங்கு அவ்வப்போதுள்ள நிலைமைக்கேற்ற மாறுதல்களுடன், ஸ்தல சுயாட்சி பல நூற்றாண்டுகளாகத் தொடர்ச்சி விட்டுப் போகாமல் இருந்து வந்திருக்கிறது. நிரந்தரமாக அங்குள்ள ஜனங்களுக்கு ஸ்தல சுயாட்சியில் பற்றுதல் இருந்து வந்திருக்கிறது. பிரபுக்களின் ஆட்சியும் ஆதிக்கமும் மாறிய பிறகு, ஜன நாயகத்துக்கேற்ற முறையில் ஸ்தல ஸ்தாபனங்களின் அமைப்பு மாற்றப்பட்டிருக்கிறது. பிறகு 18, 19-ம் நூற்றாண்டுகளில் யந்திர உற்பத்தி பெருகியபோது, அதற்கு ஏற்றவாறு ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்களில் மாறுதல்கள் ஏற்பட்டன. ஆயினும் சிறிதளவாவது ஸ்தல

சுயாட்சி இல்லாத கிராமமோ, குக்கிராமமோ இங்கிலாந்தில் இல்லை. இந் நாட்டிலும் இதுவே லக்ஷியமாகக் கொள்ளப்படுவதால், இங்கிலாந்திலுள்ள ஸ்தல சுயாட்சி அம்சங்களைப்பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

ஆறு வகையான ஸ்தாபனங்கள்

இந் நாட்டில் சில வருஷங்களுக்கு முன் ஜில்லா போர்டுகள், தாலுகா போர்டுகள், நகர சபைகள், யூனியன் (பஞ்சாயத்து போர்டுகள்) என்று நாலு வகையான ஸ்தாபனங்கள் இருந்தன. இங்கிலாந்தில் 6 விதமான ஸ்தாபனங்கள் இருந்து வருகின்றன.

1. கௌன்டி கவுன்ஸில்கள்.
2. கௌன்டிபரோ கவுன்ஸில்கள்.
3. பரோ கவுன்ஸில்கள்.
4. அர்பன் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்கள்.
5. ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்கள்.
6. பாரிஷ் கவுன்ஸில்கள்.

அங்கு தேச முழுவதையும் 62 கௌன்டிகளாகப் பிரித்திருக்கிறார்கள். லண்டனும் ஒரு கௌன்டியாகப் பாவிக்கப் படுகிறது. ஆனால் லண்டனின் நிர்வாகம் தனி ரகமானது. லண்டனை நீக்கி 61 கௌன்டிகள் இருக்கின்றன. இவற்றை நிர்வகிப்பது கௌன்டி கவுன்ஸில்கள். இவற்றை ஜில்லா போர்டுகளுக்குச் சமமாக மதிக்கலாம்.

50,000 ஜனத் தொகையுள்ள பெரிய நகரங்கள் "கௌன்டி" பரோக்களாகத் தனித்து இலங்கும். இந்தப் பெரிய நகரங்கள் கௌன்டி கவுன்ஸிலுக்குச் சமமான அதிகாரத்துடன் விளங்கும். அவற்றின் நிர்வாக ஸ்தாபனத்துக்கு, 'கௌன்டி பரோ கவுன்ஸில்' என்று பெயர். இவ்வாறு 83 கௌன்டி பரோக்கள்

இருக்கின்றன. (இவற்றைச் சென்னை நகரசபை போல மதிக்கலாம்.) இவற்றின் மீது கௌன்டி கவுன்ஸிலுக்கு அதிகாரமும் கிடையாது; வேலையும் கிடையாது.

கௌன்டிக்குள் இருக்கும் முக்கியமான பட்டணங்களுக்குப் "பரோ"க்கள் என்று பெயர். அவற்றை நிர்வகிப்பவை பரோ கவுன்ஸில்கள். இங்கிலாந்தில் 307 பரோ கவுன்ஸில்கள் இருக்கின்றன. (இவற்றை முனிசிபாலிட்டிகளுக்குச் சமமாகக் கருதலாம்.)

பரோக்கள் நீங்கலாக மீதமுள்ள பிரதேசத்தை, சர்க்காரின் சுகாதார இலாகாக்காரர்கள் இரண்டு வகையான பிரதேசங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அங்கு "பிரதேசங்கள்" என்பதைக் குறிப்பதற்கு "டிஸ்ட்ரிக்ட்" என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்கள். சில பிரதேசங்களை "அர்பன்" டிஸ்ட்ரிக்டுகள் என்றும், மற்றவற்றை "ரூரல்" டிஸ்ட்ரிக்டுகள் என்றும் சொல்லுகிறார்கள். "அர்பன்" என்பதைப் "பட்டண வாசம்" என்றும், ரூரல் என்பதைக் "கிராமாந்தரம்" என்றும் நாம் கருதுவது வழக்கம். ஆனால் இங்கிலாந்தில் இந்த வார்த்தைகளின் கருத்து வேறு விதம். வீடுகள் ஒன்றோடொன்று அடுத்திராமல் விவசாய நிலத்தின் மத்தியில் தனித்தனியாக, ஒரு பர்லாங் அரைப் பர்லாங், தூரத்தில் பிரிந்து சிதறிக் கிடக்கும் பிரதேசத்தையே அங்கு "ரூரல்" பிரதேசம் என்பார்கள். (அதுமாதிரி ரூரல் பிரதேசத்தை இங்கு மலையாளத்தில்தான் அதிகமாகக் காணமுடியும்) வீடுகள் ஒன்றுக்கொன்று சமீபமாக வீதி, தெரு, சந்து முதலியவற்றுடன் ஜனங்கள் நெருங்கி வாழும் இடங்களையே அங்கு அர்பன் என்பார்கள்.

சில "அர்பன் டிஸ்ட்ரிக்டு"களைப் பட்டணங்களாகவே கருதலாம். பட்டணத்தை விட "அர்பன் டிஸ்ட்ரிக்டு"களின் விஸ்தீர்ணம் சற்று அதிகமாக இருக்கும்.


ஒவ்வொரு கௌன்டியிலும் சில இடங்கள் "ரூரல்" பிரதேசமாகவும், சில இடங்கள் "அர்பன்" பிரதேசமாகவும் மதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கௌன்டியிலும் நாலைந்து "ரூரல்" பிரதேசங்களும், நாலைந்து "அர்பன்" பிரதேசங்களும் இருக்கும். அந்தத் தேசம் முழுதிலும் மொத்தம் 572 அர்பன் டிஸ்ட்ரிக்டு களும், 475 ரூரல் டிஸ்ட்ரிக்டுகளும் இருக்கின்றன. (ரூரல் என்பதை விவசாயப் பிரதேசமாகவும், அர்பன் என் பதைக் கைத்தொழில் வர்த்தகப் பிரதேசமாகவும் மதிக் கலாம்)

ஒவ்வொரு அர்பன் பிரதேசத்துக்கும் ஓர் "அர்பன் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்" இருக்கிறது. ஒவ்வொரு ரூரல் பிரதேசத்திலும் ஒரு "ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன் ஸில்" இருக்கிறது.

"ரூரல் டிஸ்ட்ரிக்டு"களிலும் சரி "அர்பன் டிஸ்ட்ரிக்டு" களிலும் சரி, ஒவ்வொன்றிலும் பல "பாரிஷ்"கள் (குக்கிராமங்கள்) இருக்கும். அர்பன் டிஸ்ட்ரிக்டிலுள்ள "பாரிஷ்" களுக்கு விசேஷமான "சுயாட்சி உரிமை" கள் இருக்காது. அந்தப் "பாரிஷ்"களை அர்பன் டிஸ்ட் ரிக்ட் கவுன்ஸிலே நேரில் கவனித்துக் கொள்ள முடியும். ரூரல் டிஸ்டிரிக்டில் பாரிஷ்களுக்கு ஓரளவு "சுயாட்சி" உண்டு. எல்லா இடங்களிலுமாக மொத்தம் சுமார் 11,000 பாரிஷ்கள் இருக்கின்றன. பாரிஷ்களில் "பாரிஷ் கவுன்ஸில்கள்" அல்லது "பாரிஷ் கூட்டங் கள்" இருக்கும்.

இந்தப் பாகுபாட்டை இங்கு பிரசுரித்துள்ள படத்தி லிருந்து ஒருவாறு புரிந்து கொள்ளலாம். கௌன்டி கௌன்ஸிலும் கௌன்டிபரோவும் கிட்டத்தட்டச் சம மான அதிகாரங்கள் உள்ளவை. பரோ கவுன்ஸிலும் அர்பன் டிஸ்டிரிக்ட் கவுன்ஸிலும் கிட்டத்தட்டச் சமமான அதிகாரங்கள் உள்ளவை.

பிரிட்டனில் ஸ்தல ஸ்தாபனங்கள்



சென்னை மாகாணத்துடன் ஒப்பிட்டால்

இங்கிலாந்திலுள்ள 6 வகையான ஸ்தல ஸ்தாபனங்களையும், சில வருஷங்களுக்கு முன் இம் மாகாணத்தில் இருந்த ஏற்பாடுடன் ஒப்பிட்டால் (1) 'கௌன்டி கவுன்ஸிலை' ஜில்லா போர்டுடனும் (2) 'கௌன்டிபரோ'க்களைச் சென்னைக் கார்ப்பரேஷனுடனும் (3) 'பரோ'க்களை முனிசிபாலிட்டிகளுடனும் (நகரசபைகளுடனும்) (4) அர்பன் டிஸ்ட்ரிக்டைப் பழைய யூனியன் பஞ்சாயத்துக்களுடனும் (5) ரூரல் டிஸ்ட்ரிக்டைப் பழைய தாலுக்கா போர்டுடனும் ஒருவாறு ஒப்பிடலாம். (6) பாரிஷ்களுக்கு உவமை

யாக இங்கு ஒரு ஸ்தாபனம் இல்லை என்றே சொல்ல வேண்டும். சில மைனர் யூனியன்களை வேண்டுமானால் சொல்லலாம்.

கௌன்டி கவுன்ஸிலை ஜில்லா போர்டுடன் ஒப்பிடும்போது ஒரு விஷயத்தை மறந்துவிடக் கூடாது. இங்கிலாந்தில் ஒரு கௌன்டியின் சராசரி விஸ்தீரணம் 800 சதுரமைல் ஆகும். இங்கு ஒரு ஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 4000 சதுரமைல். ஜனத்தொகையை எடுத்துக் கொண்டால் ஒரு கௌன்டியின் சராசரி ஜனத்தொகை சுமார் 6 லக்ஷம். இங்கு ஒரு ஜில்லாவில் ஜனத்தொகை சராசரி 20 லக்ஷம். ஆகவே விஸ்தீரணம் ஜனத்தொகை இவற்றால் கௌன்டிகளை, சென்னை மாகாணத்திலுள்ள தாலுக்காக்களுக்குச் சமமாகப் பாவிப்பதே பொருத்தமாக இருக்கும்.

கௌன்டி, பாரிஷ் சரித்திர வரலாறு

பிரிட்டனில் பார்லிமெண்டில் சட்ட மியற்றும் பல விஷயங்களில் நிர்வாகம் ஸ்தல ஸ்தாபனங்களிடமே விடப்படுகிறது. ஸ்தல ஸ்தாபனங்களிடம் மிகவும் முக்கியமான விஷயங்கள் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன.

அங்கு, கிராமந்தோறும் "பாரிஷ்" கூட்டம் அல்லது "பாரிஷ்" கவுன்ஸில் இருக்கிறது. ஆயினும் ஸ்தல சுயாட்சியிலுள்ள விஷயங்களுள் மிகவும் சில்லரை விஷயங்கள் மட்டுமே அவற்றிடம் விடப்படுகின்றன. வெளியூரிலிருப்பவர்கள் நிர்வகிக்க முடியாத சிறிய விஷயங்கள் மட்டுமே இந்தக் கிராமங்களின் ஆளுகையில் விடப்படுகின்றன.

முக்கியமான விஷயங்கள், அதாவது சற்று "பெரிய விஷயங்கள்" என்று மதிக்கத் தக்கவை கௌண்டி கவுன்ஸில்களிடமே விடப்படுகின்றன என முன்பு கூறினோம்.

கிராமத்திலுள்ள பாரிஷ் கவுன்ஸில்களும், நூற்றுக் கணக்கான கிராமங்களுக்குப் பொதுவாக இருக்கும் கௌண்டி கவுன்ஸிலும், அவற்றின் அதிகாரங்களும் எவ்வாறு எப்பொழுது ஆரம்பமாயின என்ற சரித்திர வரலாறுகளை இனிக் கவனிப்போம்.

இங்கிலாந்தில் சர்க்காருடன் நேரடியான தொடர்புள்ளது கௌண்டி கவுன்ஸில். கிராம ஜனங்களுடன் அன்றாடத் தொடர்பு கொண்டது பாரிஷ் கவுன்ஸில். ஆகையால் ஸ்தல சுயாட்சியின் வரலாற்றைக் கவனிக்கும்போது கௌன்டி கவுன்ஸிலும், பாரிஷ் கவுன்ஸிலும்

எவ்வாறு பிறந்தன என்பதைக் கவனிக்கவேண்டும். அவற்றின் சரித்திரத்தைத் தெரிந்து கொண்டால் ஸ்தல சுயாட்சியின் தன்மை நன்கு புலனாகும்.

கிராமக் கோயிலிலிருந்து ஆரம்பம்

முதல் முதலில் "பாரிஷ்"களைக் கவனிப்போம். பண்டைக்காலங்களில் அரசாங்கம் வேறு, மதம் வேறு என்ற வேற்றுமை கிடையாது. மத போதகர்களே அன்றாட வாழ்விலும் வழிகாட்டிகளாக இருந்தனர். பொது விவகாரம் முழுவதும் கோயிலைச் சூழ்ந்த தாகவே இருந்தது. கிராமங்களில் மிகவும் முக்கியமான பொது விஷயம் கோயில் விஷயம்தான். 10-வது நூற்றாண்டுக்கு முன் உலகம் முழுதிலும் இப்படித்தான் இருந்தது. ஏழைகளுக்கு உதவி செய்வது, அனாதை களுக்கு உதவி செய்வது போன்ற "தர்ம"ங்கள் யாவும் கோயில் மூலமே நடந்து வந்தன. கோயிலின் தர்ம கர்த்தாக்களே ஊருக்கும் தர்மகர்த்தாக்கள். அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் எல்லோரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஆகையால் இது சுலப மாக இருந்தது.

ஒரு "சர்ச்" சில் (கிறிஸ்தவ கோயிலில்) தொழு பவர்கள் எல்லோரும் ஏதேனும் ஒருநாள் சர்ச்சில் கூடி தர்ம கர்த்தாக்களைப் பொறுக்குவார்கள். கோயில் நிர்வாகமும் தொழுகை ஏற்பாடும் நடப்பதற்கு அந்த வருஷம் எவ்வளவு பணம் வேண்டுமென்பதை நிர்ண யிப்பார்கள். அந்தப் பணத்தை அந்த ஊரில் வீடு வாசல் வைத்துக் கொண்டுள்ளோரிடையே எவ்வளவு வீதம் வசூலிப்பது என்று "வரி" நிர்ணயிப்பார்கள். இதை வசூலித்துச் "சர்ச்" சுகளின் செலவை நடத்து வது தர்மகர்த்தாக்களின் வேலை.

இதுதான் கிராமங்களில் இன்றுள்ள ஸ்தல ஸ்தாபன முறைக்கு ஆரம்பம் என்று சொல்லலாம்.

ஏழைகளுக்கு அன்னதானம் செய்வது முதலிய காரியங்கள் அப்போது பாரிஷ்களின் பொறுப்பில் நடந்துவரவில்லை. இங்கிலாந்தில் ஆங்காங்குக் கிறிஸ்தவ சந்நியாசி மடங்கள் இருந்து வந்தன. அன்னதானம், அனாதைகளுக்கு உதவி முதலிய காரியங்களை அந்த மடங்கள் நடத்திவந்தன.

உழைப்புக்குப் பதிலாக—வரி

அந்தக் காலத்தில் கிராமத்தில் ரஸ்தாக்களைப் பழுதுபார்த்து வைத்துக்கொள்வது கிராமவாசிகளின் பொறுப்பாக மதிக்கப்பட்டது. ஆனால் பல கிராமங்கள் ரோடுகளை நன்கு பேணிப் பராமரிப்பது வழக்கமில்லை. ஆகையால் 1555-ம் ஆண்டில் பார்லிமென்ட் ஒரு சட்டம் இயற்றியது. ஒவ்வொரு கிராமத்து தர்மகர்த்தாக்களும் கிராமவாசிகளைக் கூட்டிவைத்து ரோடுகளை மேற்பார்ப்பதற்கென்று இரண்டு ரோட்டு மேஸ்திரிகளை (ஸர்வேயர்களை) தேர்ந்தெடுக்க வேண்டும்; வருஷத்தில் நான்கு நாட்களைக் குறிப்பிட்டு, கிராமவாசிகள் எல்லோரும் ஊதியமில்லாமல் வேலை செய்து ரோடுகளைப் பழுதுபார்க்கும்படி செய்வது இந்த மேஸ்திரிகளின் கடமை. மேஸ்திரிகளுக்கும் ஊதியம் கிடையாது. யாரேனும் வேலைக்கு வராவிட்டால் கோர்ட்டில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

ரோடுகள் பழுதுபார்க்கப் படாதிருந்தால் கிராமம் முழுதின் மீதும் கூட்டு அபராதம் விதிக்கமுடியும். இந்தச் சட்டம் வந்த பிறகு, சிலர் சாலையில் போய் வேலை செய்வதைவிட அபராதம் கொடுப்பதே மேல் என்று கருதினர்.

இதுதான் பிற்காலத்தில் பாரிஷ்களின் ரோட் வரியாக ஆயிற்று. வரி விதித்துச் சம்பளம் கொடுத்து ரோடுகளைப் பழுதுபார்ப்பது என்ற முறை ஏற்பட்டது.

பிறகு 1600-ம் ஆண்டில் பாரிஷ்கள் மீது மற்றொரு பொறுப்பும் விழுந்தது. ஏழைகளுக்கு அன்னதானம் செய்யும் தர்மத்தை, சன்னியாசி மடங்கள் நடத்தி வந்தன என்று கூறினோமல்லவா? ட்யூடர் (Tudor) மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் சன்னியாசி மடங்கள் அழிக்கப் பட்டன. பிறகு அந்தத் தர்மங்கள் நின்றுபோயின. ஒவ்வொரு ஊரிலும் பலர் (நல்ல தேக வலிமையுள்ள வர்கள்) உண்ண உணவின்றித் தவிக்கும் நிலைமை இருந்தது. ஆகையால் 1601-ம் ஆண்டில் பார்லிமென்ட் ஒரு சட்டம் இயற்றியது. ஒவ்வொரு கிராமத்திலும் இந்த ஏழைகளை ஏதேனும் ஒரு வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தி, அவர்களிடம் வேலைவாங்கி, சாப்பாடு போடவேண்டும் என்று கிராம தர்மகர்த்தாக்கள்மீது பொறுப்புச் சுமத்தப்பட்டது. "ஏழைவரி" ஏற்பட்டது.

வெகு காலம் வரையில் "பாரிஷ்"கள் (1) கோவில் நிர்வாகம் (2) ரோடு பாராமரிப்பு (3) ஏழைகள் சாவடி ஆகிய மூன்று விஷயங்களையே கவனித்து வந்தன.

சுகாதாரம், வாசகசாலை முதலிய பொறுப்புக்கள் பிற்காலத்தில் ஏற்பட்ட பொறுப்புக்களே. இதுதான் பாரிஷ்களின் ஆரம்ப வரலாறு.

உண்மையான பொறுப்புணர்ச்சி

இதில் கவனிக்க வேண்டிய அம்சம் ஒன்று உளது. "பாரிஷ்" என்ற ஸ்தல ஸ்தாபனம் சர்க்கா ரால் புகுத்தப்பட்டதல்ல. அந்த ஸ்தாபனத்தினிடம் சில புதிய பொறுப்புக்களும் அதிகாரங்களும் ஒப்படைக்கப் பட்டன.

அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான பணத்தை, சர்க்கார் மானியமாகக் கொடுக்கவில்லை. கிராம வாசிகள் தம்மீது தாமே வரி விதித்து அந்தப்

பொறுப்புக்களை நிர்வகிக்க வேண்டியிருந்தது. அதனால் தான் பாரிஷ்களில் உண்மையான பொறுப்புணர்ச்சி ஏற்பட்டது.

நாளாவட்டத்தில் இந்தப் பாரிஷ்களே ஸ்தல சுயாட்சிக்கு உண்மையான வழிகாட்டிகளாக வளர்ந்தன.

கௌன்டிகளின் ஆரம்பம்

அடுத்தபடியாக, கௌன்டிகளை எடுத்துக் கொள்வோம். பாரிஷ்கள் "சேவை"யை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமானவை. "கௌன்டி"கள் அப்படியல்ல; "அதிகாரத்தை" அடிப்படையாகக் கொண்டே கௌன்டிகள் ஆரம்பமாயின என்று சொல்லலாம். சர்க்கார் தனது அதிகாரத்தை ஆங்காங்கு சில பணக்காரர்களிடம் ஒப்படைத்தது. அவ்வாறு ஒப்படைத்த அதிகாரம் பொது ஜனங்களின் சுகாதாரம், அல்லது வாழ்க்கை வசதிகள் பற்றியதல்ல. சர்க்காரின் போலீஸ் அதிகாரத்தையும், தண்டனை விதிக்கும் அதிகாரத்தையும் நிர்வகிக்கும் ஏஜெண்டுகளாகவே கௌன்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. வைத்தியம், சுகாதாரம், கல்வி வசதி முதலியவற்றில் அந்தக் காலத்தில் சர்க்கார் கவனம் செலுத்தவேயில்லை. கல்விபரப்பும் வேலையை மத ஸ்தாபனங்களும் தனி நபர்களுமே நடத்தி வந்தனர். பணக்காரர்களுக்கு மட்டும்தான் படிப்பு வசதிகள் இருந்தன.

ஆனால் இன்றோ கல்வி, சுகாதாரம், போலீஸ் இவையாவும் கௌன்டிகளின் பொறுப்பில், கௌன்டிகளின் அதிகாரத்தில் இருக்கின்றன. எல்லாக் கௌன்டிகளுக்கும் பொதுவாகச் சர்க்கார் சில கொள்கைகளை மட்டும், அவ்வப்போது நிர்ணயிக்கிறது. அந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து, அதற்கதிகமாகவும் கௌன்டிகள் பொறுப்பேற்றுக் காரியங்கள் செய்கின்றன.

சர்க்காரின் ஏஜெண்டாக ஆரம்பமான "கௌண்டி" ஸ்தாபனம் இப்போது ஜனங்களின் சுயாட்சி ஸ்தாபனமாக இருந்து வருகிறது. இது சம்பந்தமான சரித்திர வரலாறுகள் மிகவும் ருசிகரமானவை.

19-ம் நூற்றாண்டின் இறுதிவரையில், பொதுஜன வசதி சம்பந்தமான பல காரியங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல், பல பலவிதங்களாக வெவ்வேறு தற்காலிக ஸ்தாபனங்கள் மூலம் நடந்து வந்தன (1) "ஏழைகள் விடுதி" போர்டுகள் (2) சுகாதார போர்டுகள் (3) நகர சீரமைப்புக்கமிஷன்கள் (4) ரோடு மேற்பார்வை போர்டுகள் (5) கல்வி போர்டுகள் என்று ஒரே குழப்பமாக இருந்தது.

1888-ம் ஆண்டில் தான் இதில் ஓர் ஒழுங்குமுறையும் கட்டுப்பாடான ஸ்தாபன அமைப்பும் ஏற்பட்டது. அந்த வருஷத்தில் ஒரு சட்டம் இயற்றி, கௌண்டிகள் தோறும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கௌண்டி கவுன்ஸில்களை நிறுவினார்கள். கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளிடம் இருந்து வந்த நிர்வாகப் பொறுப்புக்கள் கௌண்டி கவுன்ஸில்களிடம் மாற்றப்பட்டன. 1894-ம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றி "அர்பன்" "ரூரல்" (சுகாதார) டிஸ்ட்ரிக்டுகளுக்கும் கௌண்டி கவுன்ஸிலுக்கும் தொடர்பு ஏற்படுத்தினார்கள். "அர்பன்" "ரூரல்" டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டன. அதே வருஷத்தில் 300-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள "பாரிஷ்" களுக்குத் தேர்தல் மூலம் பாரிஷ் கவுன்ஸில்கள் ஏற்படுத்தி அவற்றையும் கௌண்டி கவுன்ஸிலுடனும், "ரூரல் டிஸ்ட்ரிக்ட்" கவுன்ஸில்களுடனும் இணைத்தார்கள். 1902-ம் ஆண்டில் கல்விப் பொறுப்பும் ஸ்தல ஸ்தாபனங்களிடம் விடப்பட்டது. 1929-ம் ஆண்டில் "ஏழைகள்

விடுதி "கார்டியன்கள்" பதவி ரத்துச் செய்யப்பட்டு, ஏழைகள் கஷ்ட நிவாரண வேலையும் கௌன்டி கவுன்ஸி லிடம் ஒப்படைக்கப் பட்டது.

போலீஸ் நிர்வாகத்தை மட்டும் கௌன்டி கவுன் ஸிலின் முழுப் பொறுப்பில் விடாமல், கௌரவ நீதிபதிகளும் கௌன்டி கவுன்ஸிலும் சேர்ந்த ஒரு கலப்புக் கமிட்டி யிடம் ஒப்படைத்தார்கள். நீதி பரிபாலனம் ஸ்தல ஸ்தா பனத்துக்குச் சம்பந்தமில்லாமல் தனியாக ஒதுக்கப் பட்டது. ஆனால் கோர்ட்டுகள் கூடுவதற்குள்ள வசதி களை மட்டும் கௌன்டி கவுன்ஸில்கள் செய்து கொடுக்கும்.

இவ்வாறாக, பழைய பிரபுக்கள் ஆட்சிக் காலத்தில் போலீஸ், நீதி நிர்வாகத்துக்கு ஏஜெண்டுகளாக இருந்த கௌரவ நீதிபதி அமைப்பு, பிற்காலத்தில் பூர்ண ஜன நாயக முறைப்படி, முக்கியமான ஸ்தல சுயாட்சி ஸ்தாபனமாக ஆகிவிட்டது.

கௌன்டி கவுன்ஸிலுக்கு, சில காரியங்களுக்காகச் சர்க்கார் பண உதவி செய்யும்; சில காரியங்களைத் தணிக்கை செய்யும். ஆனால் பொதுவாக இந்த ஸ்தா பனங்கள் தம் இஷ்டம்போல் வரவு செலவுகளையும் வரியையும் நிர்ணயித்துக்கொண்டு, பொது ஜனங் களின் வாழ்க்கை வசதிகளைக் கவனிப்பதற்கு வேண்டிய அதிகாரத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களாக இருந்து வருகின்றன.

சில அடிப்படைத் தத்துவங்கள்

இங்கிலாந்தில் ஸ்தல சுயாட்சியின் அதிகாரம், வசதி, பொறுப்பு இவற்றை விநியோகிப்பதில் அனுபவத்தின் பயனைக் இடையிடையே பற்பல சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள்.

அவர்கள் செய்த தவறுகளையெல்லாம் நாமும் செய்துதான் அனுபவம் பெறவேண்டும் என்று கருதுவது அறிவீனமாகும். அனுபவத்தின் மூலம் அவர்கள் செய்த சீர்திருத்தங்களை நாம் ஏற்றுக்கொண்டு அவர்களது தவறுகளை நாம் தவிர்க்கவேண்டும்.

ஸ்தலஸ்தாபனங்களின் வேலைகளை நிர்ணயிப்பதில் பல தத்துவங்கள் அடங்கியிருக்கும். (1) கடமை (2) அதிகாரம் (3) சுதந்திரம் (4) நிபந்தனை (5) பணப் பொறுப்பு.

கடமையும் அதிகாரமும் ஒரே அளவில் இருந்தால் "சுதந்திரம்" என்ற அம்சத்துக்கு இடமில்லாது போய்விடும். செய்வது, செய்யாதிருப்பது, நன்றாகச் செய்வது, மட்டரகமாகச் செய்வது இந்த நான்கிற்கும் இடமிருந்தால்தான் சுதந்திரம் இருப்பதாகச் சொல்ல முடியும். செய்து தீரவேண்டுமென்று விதிக்கப் பட்டுள்ளதை மட்டும் செய்வதாயின் அதில் சுதந்திரம் என்ற அம்சம் கிடையாது. ஆகையால் கடமையின் அளவுக்குச் சிறிது அதிகமாகவே அதிகாரம் இருக்க வேண்டும்.

ஆனால் இந்த அதிகாரம் வேறொரு ஸ்தாபனத்தின் அதிகாரத்துடன் முரண்படலாகாது. அந்த அளவில்

மட்டும் இந்தச் சுதந்திரத்துக்கு நிபந்தனை இருப்பது அவசியம். இது சர்க்கார் போடவேண்டிய நிபந்தனை.

அதிகாரம் அமலுக்கு வரவேண்டுமானல் பண வசதி தேவையிருக்கும். இந்தப் பண வசதி அதிகமிருந்தால்தான் கடமையை நிறைவேற்றுவதோடு நிற்காமல், கடமைக்கதிகமாகவும் சேவை புரிய முடியும். ஆனல் இதில் மற்றொரு விஷயமும் கவனிக்கப்பட வேண்டும்.

ஒரு ஸ்தாபனம் தன் கடமைக்கு அதிகமாகவும் சில காரியங்களை நடத்த விரும்பினல், அதற்கான பணத்தைக் கொடுப்பதற்கு ஜனங்கள் தயாராயிருக்கவேண்டும். ஆகையால் ஜனங்கள் எவ்வளவு தூரம் பணம் கொடுக்கத் தயாராயிருக்கிருர்களோ, அவ்வளவு தூரம் தான் அந்த ஸ்தாபனம் தன் சுதந்திரத்தை உபயோகிக்க முடியும். ஆகையால் ஸ்தாபனங்களின் சுதந்திரத்துக்கு ஜனங்களும் நிபந்தனை போடமுடியும்.

ஜனங்களுடைய சம்மதத்தின் பேரில்தான் வரி விதிக்க முடியும் என்ற கொள்கை இதற்காகவே ஏற்பட்டிருக்கிறது.

"கடமை" "சுதந்திரம்" என்ற இரண்டில் கடமை சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதில் சர்க்காருக்குப் பொறுப்பு உண்டு.

சுதந்திரம் நன்கு பயன்படும்படி அக்கறை கொள்வது ஜனங்களின் பொறுப்பு. பொது ஜனங்கள் காட்டும் சிரத்தையும் ஊக்கமும் தான் ஒரு ஸ்தல ஸ்தாபனத்தின் திறமையையும் திறமைக் குறைவையும் நிர்ணயிப்பது. இவ் விஷயத்தில் ஒரு ஸ்தல ஸ்தாபனத்தில் ஊழல் இருந்தால், அதற்குப் பொது ஜனங்கள் தம்மைத்தாமே நொந்துகொள்ள வேண்டுமே யொழிய, சர்க்காரைக் குறை சொல்ல முடியாது. "சுதந்திரத்தில்" சர்க்கார்

தலையிடாது. "கடமைகள்" விஷயத்தில்தான் சர்க்காருக்குப் பொறுப்பு.

கடமைகளை நிர்ணயிக்கும்போது அதற்கான பண வசதி அந்த ஸ்தாபனத்தினிடம் இருக்கிறதா, என்பதைக் கவனிப்பது அவசியம். ஆனால் பண வசதியை மட்டும் கவனித்தால் போதாது. திறமை இருக்குமா என்பதையும் பார்க்கவேண்டும். "குருவி தலையில் பனங்காயை" ஏற்றுவதுபோல, திறமையில்லாத ஒரு ஸ்தாபனத்தில் பெரிய கடமையைச் சுமத்துவது கூடாது.

சமூக நிலையும், ஸ்தல ஸ்தாபனமும்

பொது விஷயங்களில், பிறப்புச் சம்பந்தமான ஏற்றத் தாழ்வோ, சொத்துச் சம்பந்தமான ஏற்றத் தாழ்வோ, தொழில் சம்பந்தமான ஏற்றத் தாழ்வோ அதிகமாகப் பாராட்டாதிருப்பது தற்காலத்து ஜன நாயக மனப்பான்மைக்கு மிகவும் அவசியம். அந்த ஏற்றத் தாழ்வுகளை அதிகமாகப் பாவிக்காதவர்கள் தான் ஒரு ஸ்தாபனமாக இருந்து வேலை செய்ய முடியும்.

இந் நாட்டில் கிராமப் பிரதேசங்களில் கல்வி விஷயமாகவும், பிறப்புச் சம்பந்தமான ஏற்றத் தாழ்வுகள் விஷயமாகவும் இப்போதுள்ள நிலைமையை 19-ம் நூற்றுண்டில் இங்கிலாந்திலிருந்த நிலைமைக்குச் சமமாகச் சொல்லலாம். ஆகையால் அந்தக் காலத்தில் பிரிட்டனில் கிராம சுயாட்சி அதாவது "பாரிஷ்" சுயாட்சி எவ்வாறு அமல் நடந்தது என்பதைப்பற்றி, 15 வருஷங்களுக்கு முன் ஸ்ரீ டி. பி. ரஸ்ஸல் என்ற ஓர் ஐ. ஸி. எஸ். காரர் தந்த சித்திரத்தைப் பார்ப்போம்:—

சட்டப்படி பார்த்தால் பாரிஷில் வசிப்பவர்கள் எல்லோரும் "பாரிஷ் கூட்டத்தில்" கலந்துகொள்ள

உரிமையுமுண்டு. ஆனால் காரியாம்சத்தில் "எல்லோரும்" கலந்துகொள்வது என்பதே கிடையாது. "கண்ணியமுள்ள கனவான்கள்," "கிராமத்தில் பெரிய மனிதர்கள்," "சொத்துக்காரர்கள்" தான் கூட்டத்தில் அனுமதிக்கப் படுவார்கள்! "வெறும் பேர்வழிகள்" அனுமதிக்கப்படுவதில்லை யென்று சம்பிரதாயத்தின் மூலம் தடுக்கப்பட்டுவிடும். "தாழ்ந்த அந்தஸ்திலுள்ள வகுப்பினர்" அனுமதிக்கப்படுவதில்லை. அதாவது பணக்காரர்களும் பெரிய நிலச்சுவான்களும்தான் "கிராமத்தார்" என்று மதிக்கப்படுவார்கள். இப்படித் தம்மை ஒதுக்கித் தள்ளுவதைப்பற்றிச் "சாதாரண ஜனங்கள்" கவலைப்படுவதுமில்லை; புகார் செய்வதுமில்லை!

ஆகவே, கிராமத்தின் மதபோதகர், மிராசுதார்கள், நாலைந்து பணக்காரர்கள், கடைக்காரர்கள் இவர்கள் தான் வரி செலுத்துபவர்கள்; இவர்கள்தான் பாரிஷ் கூட்டத்தில் செல்வாக்குடன் கலந்து கொள்ள முடியும். இவர்கள் வருஷத்துக் கொருதடவை கூடி வரியை நிர்ணயிப்பார்கள். பிறகு ஏதேனும் செய்ய வேண்டியிருந்தால், எங்காவது கோயிலிலோ குளத்திலோ ஆகஸ்மாத்தாகச் சந்திக்கும்போது பேசிக் கொள்வார்கள். கூட்டமும் கிடையாது, தீர்மானமும் கிடையாது; நாலைந்து பேர் கலந்து பேசி என்ன செய்யலாமென்று முடிவு செய்து விடுவார்கள். இதைச் சமூகமும் ஏற்றுக் கொண்டு விடும். இவ்வாறு செய்வதில் காரியங்கள் திறமையாக நடைபெறுமா என்று விவாதித்துப் பயனில்லை. கிராமத்தில் பெரியவர்கள் எது செய்கிறார்களோ, அது சரிதான் என்று ஜனங்கள் நினைத்துத் திருப்தியுடன் இருந்துவிடுவது வழக்கம்.

இதுவே இங்கிலாந்தில் கிராமாந்தரத்தில் இருந்த ஜனநாயகம். இந்தியாவில் கிராமாந்தரங்களில், சர்க்காரின் சட்டம் குறுக்கிடாத எல்லாப் பொதுக் காரியங்களும் இப்படித்தான் நடக்கின்றன. ஆனால் இந்த நிலைமையைத் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளத் தற்கால இந்திய கிராமங்களில் பலர் தயாராயிருக்க மாட்டார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

பொறுப்பைப் பங்கிடும் முறை

பல விஷயங்களை ஸ்தல ஸ்தாபனங்களிடமே விட்டு விட வேண்டும். ஆனால் ஒவ்வொரு விஷயத்தையும் அதன் முக்கியத்துவம், சிக்கனமான நிர்வாகம் இரண்டுக்கும் தக்கவாறு பலவகையான ஸ்தல ஸ்தாபனங்களிடையே பங்கிட வேண்டும். பிரிட்டனில் இதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள், ஸ்தல ஸ்தாபனங்களிடம் விடப்படும் விஷயங்கள் என்ன, அதிகாரத்தை எவ்வாறு பங்கிடுகிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

தொட்டிலிலிருந்து சுடுகாடு வரையில்

பிரிட்டனில் ஸ்தல ஸ்தாபனங்களிடம் எத்தனை பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்தால், அநேகமாக, கர்ப்பவாசத்திலிருந்து மரணம்வரை ஒருவனது வாழ்க்கையில் ஒவ்வொரு பருவத்திலும் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பு இருப்பது தெரிய வரும்.

ஒரு பெண் கர்ப்பமானவுடனேயே ஸ்தல ஸ்தாபனத்தின் "சிசு சம்ரக்ஷணை" இலாக்காவின் சேவை ஆரம்பமாகி விடுகிறது. கர்ப்பகாலத்தில் தாய் நடந்து கொள்ள வேண்டிய விஷயங்களைக் குறித்த புத்திமதிகள் சொல்லப்பட்டு, சில சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. பிறகு ஸ்தல ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு "மருத்துவச்சி" பிரசவத்துக்கு ஒத்தாசையளிக்கிறாள். பிறந்த குழந்தையை வளர்க்கும் போதும் அடிக்கடி சிசு பரிபாலன இலாகாக்காரர்கள் யோசனை கூறி உதவி செய்கிறார்கள். அந்தக் குழந்தை

ஓடி விளையாடும்போது தெருக்கள் சுத்தமாக இல்லா விட்டால் நோய் வரும்; அம்மாதிரி நோய்கள் வராமல் தடுப்பதற்கான சுகாதார வசதிகள் செய்வதும் ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்பாகும். ரோடு வசதிகள், சாக் கடை, தண்ணீர் சப்ளை, தெருக்களுக்கு வெளிச்சம் முதலிய வசதிகளும் ஸ்தலஸ்தாபனங்கள் மூலம் கிடைக் கின்றன. 6 வயதானதும் குழந்தை ஸ்தல ஸ்தாபனத் தார் நடத்தும் பள்ளிக்கூடத்துக்குச் செல்லுகிறது. அங்கு இலவசமாகக் கல்வி பெறமுடியும். தொழிலுக்கும் பயிற்சி யளிக்கப்படுகிறது. விவசாயத் தொழிலில் ஈடு பட்டால் அதற்கான உரம் முதலியன ஸ்தல ஸ்தா பனங்களின் உதவியால் கிடைக்கிறது. விலைக்குப் பால் வாங்கினுல் ஸ்தல ஸ்தாபனத்தின் சார்பில் ஒருவர் அது நல்ல பால்தானு என்று சோதித்து உறுதி யளிக்கிருர். தொத்து வியாதிகள் பரவாமல் தடுப்பதும் ஸ்தல ஸ்தாபனத்தின் வேலையே. நோயாளி களுக்கு ஆஸ்பத்திரிகள் நடத்துவதும் ஸ்தல ஸ்தா பனங்களின் வேலையே. குடும்பம் அதிகமாகப் பெருகி விட்டாலும், வேலை செய்யச் சக்தியற்றுப் போனுலும் ஸ்தல ஸ்தாபனங்கள் உதவி செய்கின்றன. விவசாயத் தொழிலில் வேலை யில்லாக் கஷ்ட நிவாரண இன்ஷூ ரன்ஸ் முறையில்லை. தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்குத் தான் இன்ஷூரன்ஸ் முறைகள் இருக்கின்றன. விவசாயத் தொழிலில் இருப்போ ருக்குக் கஷ்டம் வந்தால் கஷ்ட நிவாரண வேலை ஸ்தல ஸ்தாபனங்களுக்குத்தான். குருடர்கள், அவய வக் குறைபாடுள்ளவர்கள் முதலியோருக்கு உதவி செய் வதும் ஸ்தல ஸ்தாபனங்களே. தனிப்பட்ட முறை யில் வைத்தியத் தொழில் நடத்துவோர், ரத்தச் சோதனை, கிருமிச் சோதனை, முதலிய பரீக்ஷைகள் நடத்திப் பார்ப்பதற்கான ஆராய்ச்சிச் சாலைகளும்

ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப் படுகின்றன. குற்ற வாளிகளின் அக்கிரமங்களிலிருந்து பாதுகாப்பளிக்கும் போலீஸும் ஸ்தல ஸ்தாபன முறையிலேயே நடக்கிறது. தம் கடமையை உணராமல் பெற்றோர்கள் தமது குழந்தைகளை இளமைப் பருவத்தில் தறுதலைகளாகவும் தத்தாரிகளாகவும் போகும்படி விட்டுவிடவே, அந்தக் குழந்தைகள் இளமையில் போக்கிரிகளாகச் சிறு குற்றங் களில் இறங்கிவிடுவதுண்டு; அப்படிப்பட்ட குழந்தை களைச் சீர்திருத்தி நல்ல பிரஜைகளாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பும் ஸ்தல ஸ்தாபனத் தினிடம் இருக்கிறது.

இவற்றுள் சில காரியங்கள் கிராமப் பிரதேசங் களில் கௌன்டி கவுன்ஸில் மூலமும், சில காரியங்கள் ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில் மூலமும், சில காரியங்கள் பாரிஷ் மூலமும் நடக்கின்றன. சிறிய நகரங்களில் கௌன்டி கவுன்ஸில் மூலமும், பரோ கவுன்ஸில் அல்லது "அர்பன்" டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில் மூலமும் நடக்கின்றன. பெரிய நகரங்களில் இவையாவும் கௌன்டி பரோ கவுன்ஸில் மூலம் நடக்கிறது. ஒவ்வொரு இனமாக எந்த வேலைகள் எந்த ஸ்தாபனத்தினிடம் விடப்படுகின்றன என்று பார்ப்போம்.

வசதிக்கேற்ற பொறுப்புக்கள்

இங்கிலாந்தில் 6 விதமான ஸ்தல ஸ்தாபனங்கள் இருப்பதாக ஏற்கெனவே கூறியுள்ளோம்.

அவற்றுள் "கௌன்டிகள்" ஸ்தல சுயாட்சியின் சிகரம்; பாரிஷ்கள் ஸ்தல சுயாட்சியின் அடிப்படை. இவற்றிடையே அதிகாரங்கள் எவ்விதம் பங்கிடப் படுகின்றன, ஏன் அவ்வாறு பங்கிடப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம். அதாவது என்னென்ன வேலைகள் எந்த ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப் படுகின்றன?

பாரிஷ் கவுன்ஸிலுக்கு மிக்வும் சொற்பமான அதிகாரங்களே இருக்கின்றன. உண்மையான அதிகாரம் ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலிடமே இருக்கிறது. அதிகாரத்தைஸ்தல நிலைமைக்குத் தக்கபடி அமல் நடத்துவதற்குப் பாரிஷ் கவுன்ஸில்கள் உதவியாக இருக்கின்றன. நடைபாதைகளைச் சீராக வைத்துக் கொள்வது, தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, வாசகசாலைகள் நடத்துவது, கிராம எல்லைக்குள் ரோடில் விளக்குப் போடுவது முதலிய சிறுகாரியங்கள் மட்டுமே, பாரிஷ் கவுன்ஸில்களின் ஆதிக்கத்தில் அல்லது மேற்பார்வையில் நடக்கின்றன.

அடுத்தபடியாக, பரோ கவுன்ஸில்களின் அதிகாரங்களைக் கவனிப்போம். பரோ கவுன்ஸிலின் கீழ் எத்தனை முக்கிய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்பதைக்கொண்டு அதன் அதிகாரங்களை ஊகிக்கமுடியும். ஒவ்வொரு பரோவிலும் ஒரு நிர்வாக அதிகாரி இருப்பார். ஓர் எஞ்சினீயர், ஒரு பொக்கிஷதார், ஒரு சுகாதார அதிகாரி (டாக்டர்), ஒரு சுகாதார இன்ஸ்பெக்டர் ஆகியவர்களும் இருப்பார்கள். சில பரோக்கள் ஆஸ்பத்திரிகள் வைத்து நடத்துகின்றன. சில பெரிய பரோக்களில் 20,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகை இருந்தால் பரோ கவுன்ஸிலின் ஆதிக்கத்திலேயே போலீஸ் படையும் இருக்கும்.

பாரிஷ் கவுன்ஸிலுக்கும் சர்க்காருக்குமிடையே இரண்டு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. 1. "ரூரல்" டிஸ்டிரிக்ட் கவுன்ஸில்கள். 2. கௌண்டி கவுன்ஸில்கள்.

இவ்விரண்டினுள் கௌண்டி கவுன்ஸிலின் அதிகாரங்கள் என்னவென்பதைத் தெரிந்துகொண்டால், இங்கிலாந்தில் என்னென்ன விஷயங்கள் ஸ்தல சுயாட்சியில் ஒப்படைக்கப்படுகின்றன என்பது தெரியவரும்.

கல்வி, சுகாதாரம், விவசாயம், ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் உதவி, ரஸ்தாக்கள் பாலங்கள் முதலியன, போலீஸ் ஆகியவை கௌன்டி கவுன்ஸிலின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. சில கௌன்டிகளில் குற்றவாளிகள்மீது வழக்கு நடத்துவதற்காக ஒரு "பிராசிக்யூட்டிங்" இலாகாவும் இருக்கும்.

சில விஷயங்களைக் கௌன்டி கவுன்ஸில் நேரில் நிர்வகிக்கிறது. சில விஷயங்களில் ரூரல், அர்பன் டிஸ்டிரிக்டுகளுக்கு அல்லது பரோக்களுக்கு அதிகாரம் கொடுத்து, அவற்றுக்குக் கௌன்டி கவுன்ஸிலிலிருந்து மானியம் கொடுக்கிறார்கள்.

தந்தி, தபால், ஏற்றுமதி—இறக்குமதி வர்த்தகம், கைத்தொழில் கட்டுப்பாடு, தொழிலாளர் சட்டங்கள் இவை தவிர மற்றெல்லா விஷயங்களும் அங்கு ஸ்தல சுயாட்சியில் விடப்பட்டிருப்பதாகக் கருதலாம்.

கல்வி, சுகாதாரம் முதலிய விஷயங்களில் சர்க்கார் எல்லாக் கௌன்டிகளுக்கும் பொதுவான கடமைகள் பற்றி, அவ்வப்போது சட்டங்கள் இயற்றிப் பொறுப்புக்களை ஏற்படுத்தும். அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது ஸ்தல ஸ்தாபனங்களின் கடமை.

இன்ன காரியங்கள் செய்து தீரவேண்டும்; அதோடு இன்ன காரியங்களும் செய்ய அதிகாரம் உண்டு—என்று பார்லிமென்ட் சட்டம் இயற்றும்.

சிக்கனமும் நிர்வாகத்திறமையும்

இவ்வாறு பல முக்கியமான பொறுப்புக்களும் அதிகாரங்களும் கௌன்டி கவுன்ஸிலிடம் விடப்படுகின்றன. இவற்றில் பல அதிகாரங்களும் பொறுப்புக்களும் "ரூரல்" டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களிடமும் விடப்படுகின்றன. டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்கள் சில பொறுப்புக்

களைப் பாரிஷ்களிடம் விட்டுவிடுகின்றனர். சிலவற்றில் கௌன்டி கவுன்ஸிலுக்கு மட்டுமே பொறுப்பு: உதாரணமாக, கல்வி விஷயத்தில் முழுப் பொறுப்பும் கௌன்டி கவுன்ஸிலுக்குத்தான். பரோவுக்கோ, டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களுக்கோ, பாரிஷ்களுக்கோ நேர்முகமான பொறுப்புக் கிடையாது. சுகாதாரத்தை எடுத்துக் கொண்டால், நோயைத் தவிர்ப்பது சம்பந்தமான பொறுப்புத்தான் சிறு ஸ்தாபனங்களுக்கு உண்டு. நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான ஆஸ்பத்திரிகள் அமைப்பதில், கௌன்டி கவுன்ஸிலுக்குத்தான் பொறுப்பு. ரோடுகள் விஷயத்தில் பரோக்களுக்கும் அர்பன் டிஸ்ட்ரிக்டுகளுக்கும் சிறிது பொறுப்பு உண்டு; ஆனல் ரூரல் டிஸ்ட்ரிக்டுகளுக்குப் பொறுப்புக் கிடையாது.

இவ்வாறு அதிகாரத்தையும் பொறுப்பையும் பங்கிடுவதற்குக் காரணம், சில காரியங்களை ஒரு தனிக் கிராமமோ அதிக ஜனசாரமில்லாத பிரதேசங்களோ சிக்கனமாக நிர்வகிக்க முடியாது என்பதுதான்.

உதாரணமாக 1000 ஜனத்தொகையுள்ள ஓர் ஊர், அல்லது ஏழு எட்டு மஜராக்களாக சுமார் 25 சதுர மைலில்சிதறிக்கிடக்கும் 1500 ஜனங்கள் உள்ள ஒருபிரதேசத்தினர், தம் செலவில் ஒரு நல்ல ஆஸ்பத்திரியை அமைத்துக் கொள்வதாயின், வரிச்சுமை மிகவும் அதிகமாகிவிடும். 2 டாக்டர், 2 கம்பவுண்டர், 2 நர்ஸ், 2 பிரசவ மருத்துவச்சி, 2 தோட்டி, இவ்வளவும் இருந்தால்தான் இரவும் பகலும் வைத்தியம் செய்யமுடியும். இவ்வளவு செலவை ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களும் பாரிஷ்களும் தாங்க முடியாது என்பதால்தான் இவை போன்ற பெரிய இனங்களைக் கௌன்டி கவுன்ஸிலிடம் ஒப்படைக்கிறார்கள்.

நிர்வாகப் பாகுபாடு விவரங்கள்

இப்போது ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள பல வேலைகளில் ஒவ்வொன்றும் எந்த ஸ்தாபனத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது என்று ஆராய்வோம்.

1. ரஸ்தாக்கள்

ஸ்தல ஸ்தாபன சேவைகளில் முதல் முதலாக ஆரம்பமானது "ரோடு வசதிகள்". ஆகையால் அதை முதலில் கவனிப்போம்.

ரோடுகள் சம்பந்தமான பொறுப்புக்களேதான் ஸ்தலஸ்தாபனங்களுக்கு ஆரம்பம் என்று கூடச்சொல்ல லாம். ஆனாலும் இப்போது முக்கியமான ரோடுகள் முழுதும் சர்க்காரின் பொறுப்பிலேயே வந்து விட்டன. மோட்டார்கள் பெருகியது இதற்கு ஒரு காரணம். இங்கிலாந்தில் பெரிய ரோடுகள் (டிரங்க் ரோடுகள்) முழுதும் சர்க்கார் பொறுப்பில் வந்து விட்டன. அடுத்த படியாக (டிரங்க் ரோடுகள் தவிர மற்றவை விஷயமாக) கௌன்டிகளிலுள்ள ரோடுகள் முழுதும் அநேகமாக கௌன்டி கவுன்ஸிலின் பொறுப்பில் வந்து விட்டன. ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களுக்கு ரோடு விஷயமான பொறுப்பு மிகவும் குறைந்து விட்டது. ஒவ்வொரு ரூரல் டிஸ்ட்ரிக்டிலும் கௌன்டி கவுன்ஸிலிலும் பாரிஷ் களுக்குப் பிரதிநிதித்துவம் இருப்பதால், ரோடு நிர்வாகம் பெரும்பாலும் கௌன்டி கவுன்ஸிலிடமே விடப்படு கிறது. ஆனால் ஊருக்குள் இருக்கும் வீதிகள் சந்துகள்

முதலியவை அந்தந்த ஊரின் பொறுப்பில் இருக்கின்றன.

2. வைத்தியம், சுகாதாரம்

இதை 3 முக்கியமான பகுதிகளாகப் பிரிக்கலாம். (அ) நோயாளிச் சிகிச்சை (ஆ) ஜனங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்: அல்லது நோயைத் தவிர்த்தல் (இ) ஊர்களையும், குடி தண்ணீரையும் சுத்தமாக வைத்துக்கொள்ளல்.

(அ) நோயாளிச் சிகிச்சை: நோயாளிகள் தங்கி வைத்தியம் செய்து கொள்வதற்குள்ள வசதிகள் அளிக்கும் ஆஸ்பத்திரிகள், பெரும்பாலும் கௌன்டி கவுன்ஸில்களாலேயே நிர்வகிக்கப்படும். சில கடுமையான வியாதிகள், க்ஷயரோகம், மேஹரோகங்கள் முதலியவற்றிற்குத் தனி ஆஸ்பத்திரிகள், பிரசவ ஆஸ்பத்திரிகள், இவையெல்லாம் கௌன்டியின் பொறுப்பு.

பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர் ஒவ்வொருவரையும் வைத்திய முறையில் சோதித்துப் பார்த்து ஆரோக்கிய யோசனைகளும், சிகிச்சையும் அளிக்கும் பொறுப்பு கௌன்டிகளிடம் ஒப்படைக்கப் படுகிறது.

படுக்கை வசதிகள் இல்லாமல், அன்றாடம் வருகிற நோயாளிகளைக் கவனித்து மருந்து கொடுத்து அனுப்புவதற்குள்ள மருந்துச் சாலைகளை ரூரல் டிஸ்ட்ரிக்டுகள் நடத்தும். இரண்டு மூன்று ரூரல் டிஸ்ட்ரிக்டுகள் சேர்ந்து தம்மிடையே பொதுக் கூட்டுறவாக ஆஸ்பத்திரிகள் வைத்துக் கொள்ளலாம். அது ஜனத்தொகை, வரி செலுத்தும் சக்தி முதலியவற்றைப் பொறுத்தது. கௌன்டி தோறும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளும் இருக்கும்.

ஊர்தோறும் பிரசவ ஆஸ்பத்திரிகள் இருக்க முடியாதாயினும், இரண்டு மூன்று பாரிஷ்கள் சேர்ந்து பொதுவில் சில மருத்துவச்சிகளை நியமித்துக் கொள்வதுண்டு.

பாரிஷ்களுக்கு இவ்விஷயத்தில் கட்டாயமான பொறுப்புக்கிடையாது. பாரிஷ்களின் தேவையைக் கவனிப்பதும், நோய்வாய்ப்பட்டோரை ஆஸ்பத்திரிகளில் கொண்டுவந்து சேர்ப்பதற்கான மோட்டார் வசதிகள் செய்து கொடுப்பதும், ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களின் கடமையாகும்.

(ஆ) ஆரோக்கியப் பாதுகாப்பு, சிசு பரிபாலனத்துக்காகத் தாய்மார்களுக்கு யோசனை சொல்வது, கர்ப்பமாக இருக்கும் சமயத்தில் ஆரஞ்சுப் பழரசம் முதலிய "பாதுகாப்பு உணவுகள்" விநியோகிப்பது; சிறு சிசுக்களின் போஷணையைக் கண்காணிப்பது முதலியவற்றில் கௌன்டி கவுன்ஸில் உதவி செய்யும். ஆனால் நேரில் பொறுப்பை வகிக்காது. இந்தப் பொறுப்பு ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலிடமே இருக்கும். பல பாரிஷ்களில் ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்கள் இந்த வசதிகளை அமைக்கும்.

சுகாதாரம் சம்பந்தமாகச் சர்க்கார் பலமான கண்காணிப்பு வைத்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கௌன்டியிலும் ஆரோக்கிய அதிகாரியொருவர் நியமிக்கப் படுவார். இந்த அதிகாரி தமது கௌன்டியிலுள்ள நிலைமையைப்பற்றிச் சர்க்காருக்கு யாதாஸ்து எழுதி அதன் நகலை ஸ்தல ஸ்தாபனத்துக்கும் அனுப்புவார்.

(இ) சுத்தம்: அசுத்தப் பொருள்களைத் திரட்டி, ஏதேனும் ஓர் இடத்தில் போட்டு எரிப்பதன் மூலமோ,

வேறு முறைகளாலோ அசுத்தத்தை மாற்றுவது டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களின் முக்கிய பொறுப்பு. பாரிஷ்களில் ஜன நெருக்கத்தின் தன்மைக்குத் தக்கபடி ஏற்பாடு செய்வதும், வீடுகளில் சுகாதார ஏற்பாடுகள் சரியாக இருக்கும்படி பார்த்துக்கொள்வதும் பாரிஷ்களின் பொறுப்பு.

ஓடைகள், ஆறுகள் சுத்தமாக இருப்பதற்கான ஒழுங்கு விதிகளில், எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பொறுப்பு உண்டு.

விவசாயப் பிரதேசங்களில் புதிதாகத் தொழிற்சாலைகள் ஏற்படும்போது தொழிலாளர் வீட்டு வசதி பெரிய பிரச்சினையாகி விடும்; அப்போது கட்டப்படும் வீடுகள் சரியான இடத்தில் ஒழுங்கான சுகாதார வசதிகளுடன் கட்டப்படவேண்டும். இவ்விஷயத்தில் கௌன்டி கவுன்ஸிலுக்கும் நேரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

3. கல்வி

இங்கிலாந்திலுள்ள கல்வி முறையைப் பற்றி இங்கு விரிவாகச் சொல்வதற்கில்லை. கல்வி விஷயமாக ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்பு என்ன என்பதுதான் பிரச்சினை.

5-வயது முதல் எல்லாச் சிறுவர்களுக்கும் 11 வயது வரை ஆரம்பக் கல்வி போதிக்கப்பட வேண்டும். பிறகு அவர்களது திறமையை ஆசிரியர்கள் பரிசீலனை செய்து பார்த்து, அந்த மாணவர்கள் உடனே ஏதேனும் ஒரு தொழிலில் பயிற்சி பெறுவதற்கேற்ற பாடத் திட்டத்தை மேற்கொள்வதா, அல்லது இலக்கணக் கல்வியிலேயே மேல் படிப்புக்குப் போவதா என்று, குழந்தைகளின் பெற்றோருக்கு யோசனை சொல்வார்கள். பெற்றோரின்

விருப்பப்படி அச் சிறுவர்கள் தொழிற்கல்விக்கோ அல்லது இலக்கணக் கல்விக்கோ ஏற்ற பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படுவார்கள். தொழிற்கல்வியில் தேறி ஏதேனும் ஒரு வேலையில் அமர்ந்த பிறகும், இளைஞர்கள் வாரம் ஒருமுறை உயர்தரக் கல்விச் சாலைகளுக்குச் செல்லவேண்டும். 5-வயதுக்கு முன்னரும், சிசுக்கள் விளையாட்டாகச் சில விஷயங்களைப் புரிந்துகொள்வதற்கும், நன்கு ஆடை அணிதல், மற்றச் சிறுவர்களுடன் நன்கு பழகுதல், விளையாடுதல் முதலிய நல்ல குணங்களைக் கற்றுக்கொள்வதற்கும் வசதியாக, "குழந்தைகள் கல்விச்சாலைகள்" (கின்டர் கார்ட்டன்கள்) பல இடங்களில் இருக்கும். முதியோர் கல்விக்கும் வசதிகள் செய்ய வேண்டும். இவ்வளவுக்கும் ஏற்பாடு செய்வது கௌன்டி கவுன்ஸிலின் பொறுப்பு. "ரூரல்" டிஸ்ட்ரிக்ட் அல்லது பாரிஷுக்கு இதில் பொறுப்புக் கிடையாது.

கல்வியின் செலவில் ஒரு பகுதியைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்.

4. கஷ்ட நிவாரணம்

ஸ்தல ஸ்தாபனம் என்றாலே ரோடு, சாக்கடை, பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி இவ்வளவுதானே என்று நம் நாட்டில் சிலர் நினைக்கலாம். ஆனால் இங்கிலாந்தில் ஸ்தல ஸ்தாபனங்களிடம் மற்றொரு மிகமிக முக்கியமான பொறுப்பு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

உண்ண உணவு இல்லாமல் ஒருவரும் செத்துப் போகக் கூடாது; சரியான உணவு இல்லாத காரணத்தால் ஒருவனுக்கு வியாதி ஏற்பட்டது என்ற நிலைமை கூடாது; இவ்விரண்டும் இங்கிலாந்தில் எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ள லக்ஷியம். இது சட்டபூர்வமான

உரிமை என்று கூட மதிக்கப்படுகிறது. இந்தக் கஷ்ட நிவாரண வேலை, கௌன்டி கவுன்ஸிலிடம், ஒப்படைக் கப்படுகிறது. கௌன்டி கவுன்ஸிலைவிடச் சிறிய ஸ்தா பனங்களிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வில்லை.

இந்தக் கஷ்ட நிவாரண உதவியின் பல அம்சங் களையும் இங்கு விவரிப்பதற்கில்லை. ஆயினும் சில முக்கியமான இனங்களைக் குறிப்பிடுவது அவசியம்.

(அ) தற்காலிகமாக ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டால் உடனே பண உதவி செய்வது. உதாரணமாக, கணவனுக்கு விபத்து ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போய் விடுகிறான்; மனைவி வேலை செய்து வழக்கமில்லை; அந்த நிலைமையில் அவளுக்கு உதவி அவசியம். அம்மாதிரி கஷ்டமான நிலையில் இருப்பவர்கள் உடனே கௌன்டி கவுன்ஸிலில் இதற்கென்று நியமிக்கப் பட்டிருக்கும் அதிகாரிக்கு மனுச் செய்து கொண்டால், ரொக்க மாகவோ அல்லது உணவுப் பொருள்கள், கரி, விறகு முதலிய பொருள்களாகவோ கொடுக்கப்படும். நோய் வாய்ப்பட்டிருந்தால் உடனே சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்படும். மரணம் ஏற்பட்டால் பிரேத அடக்கத் துக்கு உதவி செய்யப்படும். செலவில் ஒருபகுதி அவர் களுடைய நெருங்கிய உறவினரிடமிருந்து வசூலிக்கப் படலாம்.

(ஆ) தற்காலிகமான கஷ்டமாக இல்லாமல் நீடிக்கக் கூடிய கஷ்டமாக இருந்தால் "ஏழைகள் சாவடி"யில் வைத்து உதவி செய்வது. வேலை செய்ய முடியாத வயோதிகர்கள், நோயாளிகள், நாடோடியாக வெளியூரிலிருந்து வந்த ஏழைகள், இவர்களுக்கு இங்கு உணவு அளித்து, சுலபமான வேலைகளாக ஏதேனும் செய்யச் சொல்வார்கள்.

பென்சா-லிகளாக இருந்தால் சர்க்காரின் வேலை யில்லாக் கஷ்ட நிவாரண இலாகா மூலம் வேலை பார்த்துக் கொடுப்பார்கள்.

(இ) தாய் தகப்பன் பரம ஏழையாகி, அல்லது வேலையில்லாமலும் குழந்தைகளைப் பரிபாலனம் செய்ய வசதி யில்லாமலும் போனால், அந்தக் குழந்தைகளை வேறு குடும்பங்களிலோ அல்லது சிறுவர் விடுதி யிலோ வைத்துக் காப்பாற்றி, படிப்புக்கும் தொழில் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்வது.

(ஈ) இயற்கையான கோளாறுகளால், அல்லது கண் தெரியாததால், அல்லது காது கேளாததால், அல்லது செய்கிற வேலையில் கிடைக்கும் ஊதியம் போதுமானதாக இல்லாததால் குற்றுயிராக வாழும் சிலர், "ஏழைகள் விடுதியில்" தங்க இஷ்டமில்லாமல் இருக்கக்கூடும். இவர்களுடைய குடும்ப நிர்வாகத்தைச் சுலபமாக்குவதற்காக, சிறுவர்களுக்கு உதவி, பிரசவ கால உதவி, முதலியன வழங்கப் படலாம். இவ் விஷயத்தில் உத்தியோகப்பற்றில்லாத சமூக ஊழிய சங்கங்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்கள் பண உதவி செய்யலாம்.

ஏற்கெனவே சொல்லியபடி இது கௌன்டி கவுன் ஸிலின் பொறுப்பு.

(5) போலீஸ்

ஒவ்வொரு கௌன்டியிலும் போலீஸ் நிர்வாகம் ஸ்தல ஸ்தாபனத்தினிடமே இருக்கிறது. மத்திய சர்க் கார் இந்த ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டு, உடைமுதலி யனவற்றுக்காகப் பண உதவி செய்வதுண்டு. ஆனாலும் முக்கியமான பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களிடமே. கௌன்டி முழுவதிலுமுள்ள கவுரவ மாஜிஸ்டிரேட்டுகள்

சேர்ந்து சில பிரதிநிதிகளை நியமிப்பார்கள். கௌன்டி கவுன்ஸில் தன் சார்பில் சில பிரதிநிதிகளை நியமிக்கும். இந்த இரண்டுவகைப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு "கூட்டுக் கமிட்டி"யே கௌன்டி போலீஸை நியமிக்கிறது. ரூரல் டிஸ்ட்ரிக்ட், பாரிஷ் கவுன்ஸில்களுக்கு இவ்விஷயத்தில் பொறுப்போ, அதிகாரமோ கிடையாது.

(6) வாசக சாலைகள்

கௌன்டியின், கல்வி இலாகாவின் பகுதியாக வாசகசாலைகளும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தத் தொண்டில் ரூரல் டிஸ்ட்ரிக்டுகளும் பாரிஷ்களும் கலந்து கொண்டு, தம் பிரதேசத்துக்குக் கௌன்டி வாசக சாலையிலிருந்து புத்தகங்களை இரவல் வாங்கிக் கொள்ள முடியும். தனியாகவும் வாசக சாலைகள் நிறுவிக் கொள்ளலாம். பல பாரிஷ்கள் இந்த வசதியை நன்கு உபயோகித்துக்கொள்கின்றன. ஊரூராகப் புத்தகங்களைக் கொண்டு போய் வினியோகிப்பதற்கு, கௌன்டி கவுன்ஸிலின் கல்வி இலாகா ஏற்பாடு செய்கிறது.

தேர்தல் முறையும் நிர்வாக அமைப்பும்

ஸ்தல சுயாட்சியில் கடமை, அதிகாரம், பொறுப்பு, சிக்கனம் முதலிய பல கொள்கைகள் சமநிலையில் இருக்க வேண்டும். அதோடு "ஜன நாயகம்" என்ற அம்சம் நிச்சயமாக இருக்க வேண்டும். ஜனப்பிரதிநிதிகளே ஜனங்களின் தேவையை நன்கு உணர்ந்து எடுத்துக் காட்ட முடியும். ஆனால் அந்தப் பிரதிநிதிகள் 'நிபுணர்களல்ல'. ஆகையால் நிபுணர்களாகச் சில உத்தியோகஸ்தர்களும் ஸ்தாபனம் முழுதின் சார்பில் அதிகாரத்தை அமலுக்குக் கொண்டு வருவதற்கு ஓர் அதிகாரியும் அவசியம்.

இந்த நோக்கங்கள் நன்கு அமையும் பொருட்டுப் பிரிட்டனில் எவ்வாறு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

"ஆல்டர்மென்கள்" (பெரியவர்கள்)

பிரிட்டனிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் ஜன நாயக அமைப்பையும், அவை எவ்வாறு வேலை செய்கின்றன என்பதையும் கவனிப்போம்: இந்த ஸ்தல ஸ்தாபனங்களில் எல்லோரும் ஜனப்பிரதிநிதிகளே. ஆனால் எல்லோரும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். எல்லோரும் நேர்முகமாக, பொது ஜனங்களிடையே தேர்தலுக்கு அபேக்ஷகராக நின்றுதான் ஸ்தல ஸ்தாபனத்தில் அங்கத்தினராக வரமுடியும் என்பதில்லை. அப்படியிருந்தால் சரியான நபர்கள் பலர் தேர்தலின் பூசல்களையும் சிரமத்தையும்

ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத காரணத்தால், ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து ஒதுங்கி விடுவார்கள். அப்படி ஒதுங்கக் கூடியவர்களில் சிலரது அறிவும் அனுபவமும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அவசியமாக இருக்கும். இதை உத்தேசித்து "ஆல்டர்மன்" (பெரியவர்கள்) என்று சிலர் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பொறுக்கப்படுவது பிரிட்டிஷ் ஸ்தல ஸ்தாபன முறையில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம்.

உதாரணமாக ஒரு கௌண்டி கவுன்ஸிலின் அமைப்பை எடுத்துக்கொள்வோம். 45 பேர் பொதுத் தேர்தலில் நின்று கௌண்டி கவுன்ஸிலுக்கு அங்கத்தினர்களாகிறார்கள். இவர்கள் வோட்டுப் போட்டு ஒரு தலைவரையும் (சேர்மன்) 15 ஆல்டர்மென்களையும் (பெரியவர்களையும்) தேர்ந்தெடுக்கிறார்கள். அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்போர் தம்மிடையே ஒருவரைத்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில்லை. மெம்பராக இல்லாதவரையும், தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம். ஆல்டர்மன்கள் விஷயத்திலும் அப்படித்தான். ஏற்கெனவே அங்கத்தினராக இருப்பவர் ஆல்டர்மனாகப் பொறுக்கப் பட்டுவிட்டால், அவரது அங்கத்தினர் ஸ்தானம் காலியாகி, அந்த ஸ்தானத்துக்கு வேறு அங்கத்தினர் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். (ஓர் அங்கத்தினர் தலைவரானால் இதுபோலக் "காலி ஸ்தானம்" ஏற்பட்டதாக மதிப்பதில்லை.)

அதாவது ஒரு கௌண்டி கவுன்ஸிலில் 60 பேர் இருந்தால் அதில் 45 பேர்தான் ஜனங்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். மீதமுள்ள 15 பேர் இந்த 45 பேரால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்.

கௌன்டி பரோ க்வுன்ஸில், பரோ க்வுன்ஸில் இவற்றுக்கும் ஆல்டர்மென் உண்டு. ஆனால் "அர்பன்" "ரூரல்" "டிஸ்ட்ரிக்ட்" கவுன்ஸில்களுக்கு ஆல்டர்மென் கிடையாது. பாரிஷ் க்வுன்ஸில்களுக்கும் ஆல்டர்மென் கிடையாது.

பதவி வகிக்கும் வாய்தா

சாதாரண கவுன்ஸிலர்கள் 3 வருஷ காலம் பதவி வகிப்பார்கள். ஆல்டர்மென்கள் 6 வருஷகாலம் பதவி வகிக்கலாம்; ஆனால் பாதிப் பேர் 3 வருஷத்தில் ராஜிநாமாச் செய்வார்கள். அந்தப் பதவிகளுக்கு மறுபடியும் கவுன்ஸிலர்கள் நபர்களைப் பொறுக்கி யெடுப்பார்கள்.

பரோக்களிலும், கௌன்டி பரோக்களிலும் 3 வருஷங்களுக் கொருதடவை எல்லா மெம்பர்களும், காலியாவதற்குப் பதிலாக, வருஷா வருஷம் மூன்றிலொரு பங்கு ஸ்தானங்கள் காலியாகும். தேர்ந்தெடுக்கப் படுபவர் 3 வருஷம் பதவி வகிப்பார். அதாவது வருஷா வருஷம் கவுன்ஸிலில் மூன்றில் ஒருபாகம் தேர்ந்தெடுக்கப்படும்.

கௌன்டி கவுன்ஸிலில் 50 முதல் 60 அங்கத்தினர்கள் இருப்பதுண்டு. பெரிய கௌன்டி பரோ கவுன்ஸில்களில் 100 முதல் 150 அங்கத்தினர்கள் இருப்பார்கள். சாதாரண பரோக்களில் 15 அங்கத்தினர்கள் இருப்பார்கள். பெரிய பரோக்களில் 70 பேர் வரை இருக்கலாம்.

இவற்றுக் கெல்லாம் தேர்தல் சாதாரணமாக் சட்ட சபைத் தேர்தல் போல, நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வது, அவற்றைத் தணிக்கை செய்வது,

தேர்தலுக்குத் தேதி நியமிப்பது, வோட்டுப் பெட்டிகள் வைப்பது, ரகசிய வோட்டு முதலிய எல்லாச் சடங்குகளும் உண்டு.

பாரிஷில் தனி முறை

"பாரிஷ் கவுன்ஸில்" தேர்தல் அப்படியல்ல. ஜனத்தொகை 300க்கு அதிகமுள்ள பாரிஷ்களுக்கு, பாரிஷ் க்வுன்ஸில் நிச்சயமாக இருக்கும். ஜனத்தொகை 100க்கு மேல் 300 வரை இருந்தால், பாரிஷ் கூட்டம் கூட்டித் தம ஊருக்கு ஒரு பாரிஷ் கவுன்ஸில் வேண்டுமென்று கௌன்டி கவுன்ஸிலுக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். பிறகு பாரிஷ் கவுன்ஸிலுக்கு எத்தனை மெம்பர் என்பதைக் கௌன்டி கவுன்ஸில் நிர்ணயிக்கும். சாதாரணமாக 5 முதல் 15 மெம்பர் வரையில் இருப்பதுண்டு.

அவ்வாறு நிர்ணயித்த பிறகு மார்ச் மாதத்தில் பார்ரிஷ் கூட்டம் நடைபெறும். அந்தக் கூட்டம் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும். அவர் 15 நிமிஷ சாவகாசம் கொடுத்து, கவுன்ஸிலர் பதவிக்கு அபேக்ஷகர்களைப் பிரேரிக்கும்படி கோருவார். பெயர்கள் பிரேரிக்கப்படும்; உடனே கூட்டத்திலிருப்பவர்கள், அந்த அபேக்ஷகர்களிடம பகிரங்கமாகக் கேள்விகள் போடலாம். எத்தனை ஸ்தானங்க்ள் இருக்கின்றனவோ, அதற்கதிகமாகப் பெயர்க்ள் பிரேரிக்கப்பட்டால், ஒவ்வொரு பெயராகக் கூப்பிட்டு ஆதரிப்பவர்கள் கையை உயர்த்தும்படி கோரி, எத்தனை பேர் சாதகம் என்று மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்ப்பார்கள். அதாவது ரகசிய வோட் முறை இல்லை.

தலைவர் அறிவித்த முடிவைக் கூடியிருப்பவர்களில் மூன்றிலொருபங்கினர், அல்லது 5 பேர் ஆக்ஷேபித்

தால், பிறகு பெரிய தேர்தல்போல வோட்டுப் பெட்டி வைத்து ரகசிய வோட்டு எடுக்கப்படும்.

ஏற்கெனவே பாரிஷ் கூட்டத்தினர் கோரியிருந்தால் ரகசியவோட்டு முறையிலேயே தேர்தல் நடக்க வேண்டுமென்று கௌன்டி கவுன்ஸில் ஏற்பாடு செய்திருக்கும்.

"பாரிஷ் கவுன்ஸில்" இல்லாத சிறு கிராமங்களில் பாரிஷிலுள்ள வோட்டர்களின் கூட்டம் ஒன்று கூட்டப்படும். இதற்குப் "பாரிஷ் கூட்டம்" என்று பெயர். அதன் தலைவரும், அந்தப் பாரிஷிலிருந்து ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலுக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பவரும் சேர்ந்த ஒரு "பிரதிநிதி சபை"யிடம் பாரிஷ் சொத்துக்கள் ஒப்படைக்கப்படும். பாரிஷ் கூட்டத்தின் தீர்மானங்கள் மீது சர்வஜன வோட்டு எடுக்க வேண்டுமென்று கூட்டத்தில் குறிப்பிட்ட ஒரு தொகையினர் கோரினால், பாரிஷில் சர்வஜன வோட்டெடுத்து, "பாரிஷ் கூட்டத்தின்" தீர்மானம் ஊர்ஜிதம் செய்யப்படும்.

அதுபோலவே சில விஷயங்களில் பாரிஷ் கவுன்ஸிலின் தீர்மானத்தையும் "பாரிஷ் கூட்டத்"தில் ஊர்ஜிதம் செய்யவேண்டி யிருக்கும்.

பாரிஷ் கவுன்ஸிலர்கள் மூன்று வருஷத்துக்கொரு முறை தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

பாரிஷ் கவுன்ஸில் இல்லாத இடங்களில் "பாரிஷ் கூட்டம்" வருஷத்துக்கு இரண்டு தட்வை கூட வேண்டும். பாரிஷின் தேவைகளை, ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலுக்கும் கௌன்டி கவுன்ஸிலுக்கும் அறிவிப்பதே கூட்டம் கூட்டுவதன் நோக்கம். "பாரிஷ் பிரதிநிதி சபை" செய்யவேண்டிய காரியங்களையும் வரியையும் இந்தக் கூட்டம் நிர்ணயிக்கலாம்.

ஏற்கெனவே சொல்லியுள்ளபடி பாரிஷ் கவுன்ஸிலின் கடமைகள் மிகவும் சொற்பமே. ரூரல் டிஸ்ட்ரிக்டுக்கும், கௌன்டிக்கும் பாரிஷின் தேவைகளை அறிவிப்பதே பாரிஷ் கவுன்ஸிலின் முக்கியமான நோக்கமாக இருக்கும்.

ஊரிலுள்ளவர்கள் எல்லோரும் சந்தித்து ஊரின் தேவைகளைப்பற்றிச் சர்ச்சைசெய்யச் சந்தர்ப்பமளிப்பது என்பது, இந்தப் பாரிஷ் ஸ்தாபனத்தால் ஏற்படும் ஒரு முக்கியமான நன்மை. கௌன்டி கவுன்ஸிலும் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலும் பல விஷயங்களில் பாரிஷ் கவுன்ஸில்களிடம் அபிப்பிராயம் கோருவதுண்டு.

பாரிஷ்கள் பிரிட்டிஷ் ஸ்தல சுயாட்சியில் மிகவும் ஜீவாதாரமான ஸ்தாபனங்கள்; ஆனல் அவற்றிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களும் அதிகாரங்களும் மிகவும் குறைவுதான்.

நிரந்தரக் கமிட்டிகள்

பாரிஷ் தவிர, மற்ற ஸ்தாபனங்கள் யாவும் பல கமிட்டிகள் மூலம் வேலை செய்கின்றன.

கௌன்டி கவுன்ஸிலில் (1) நிதி, பொது விஷயக் கமிட்டி (2) ரோடுகள் கமிட்டி (3) விவசாயக் கமிட்டி (4) கல்விக் கமிட்டி (5) ஏழைகள் கஷ்ட நிவாரண உதவிக் கமிட்டி (6) சுகாதாரக் கமிட்டி ஆகிய கமிட்டிகள் இருக்கும். சில கமிட்டிகளில் உபகமிட்டிகள் இருக்கலாம். இவை தவிர வேறு கமிட்டிகளும் இருக்கலாம். ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலில் (1) ஜலசப்ளை, மின்சார சப்ளை, சாக்கடை இவற்றைக் கவனிப்பதற்கான

"விசாரிக்க கமிட்டி" (2) சுகாதாரக் கமிட்டி (3) வீடுகள் கட்டிடத் திட்டக் கமிட்டி (4) நிதி, பொது விஷயக் கமிட்டி ஆகியவை இருக்கும்.

அதிகாரிகள்

கௌன்டி கவுன்ஸிலிலும் ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலிலும் சில நிரந்தர அதிகாரிகள் (நிபுணர்கள்) இருப்பார்கள்.

கௌன்டி கவுன்ஸிலில் (1) நிர்வாகம் முழுதுக்கும் பொறுப்பாக, எல்லா இலாகாக்களுக்கும் பொதுவாக, ஒரு பிரதம காரியதரிசி இருப்பார். "கவுன்ஸில் கிளார்க்" என்பது அந்த உத்தியோகஸ்தரின் பெயர். அவர் அநேகமாகச் சட்டப் பரீக்ஷையில் தேறியவராக இருப்பது வழக்கம். எல்லாக் கவுன்ஸில் கூட்டத்திலும் கமிட்டிகளிலும் அவர் ஆஜராக இருப்பார். பல இலாகாக்களின் வேலையையும், முரண்பாடில்லாமல் ஒருமுகப் படுத்துவதும், சட்ட நிலைமையைக் கவனித்து யோசனை கூறுவதும் அவரது பொறுப்பு. (2) கௌன்டி பொக்கிஷ அதிகாரி ஒருவர் இருப்பார். கௌன்ஸிலின் பண நிலைமையைக் கவனித்து ஒரு திட்டம் எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதைக் கமிட்டிகளின் கவனத்துக்குக் கொண்டு வருவார். வரி வசூல், செலவுகள், கட்டணம் வசூலித்து லைசென்ஸ் வழங்குதல் இந்த வேலைகள் யாவும் இவரது பொறுப்பில் இருக்கும். (3) கல்வி டைரக்டர். கல்வி சம்பந்தமான கொள்கையை நிர்ணயிப்பதில் இவர் கல்விக் கமிட்டிக்கு யோசனை கூறுவார். கவுன்ஸிலில் நிர்ணயமான கொள்கையை அமல் நடத்துவது இவரது வேலை. (4) கௌன்டி வைத்திய சுகாதார அதிகாரி. இவரே பள்ளிக்கூட வைத்திய அதிகாரியாகவும் இருப்பார். இவரை நியமிப்பது, வேலையிலிருந்து நீக்குவது, இரண்டிலும்

கௌன்டி கவுன்ஸில் மத்ய சர்க்காரின் சுகாதார மந்திரியிடம் சம்மதம் பெற்றே காரியம் செய்ய வேண்டும். (5) விவசாய டைரக்டர். பொது நிலங்களை அவ்வப்போது கறிகாய் சாகுபடிக்காகச் சிலரிடம் விடுவது, விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் நடத்துவது, உரம், கால்நடைகள் ஜீவனம் முதலிய விஷயங்களில் யோசனை கூறுவது, அந்தப் பொருள்களை வினியோகிப்பது, இதிலெல்லாம் கௌன்டி கவுன்ஸிலின் பொறுப்பு இவர் மூலமே நிர்வகிக்கப்படும். (6) கௌன்டி ரஸ்தாக்களைப் பராமரிப்பதற்கான காரியங்களை நடத்தி வைக்கும் ஒரு "ஸர்வேயர்" முதலான பல நிரந்தர அதிகாரிகள் ஒவ்வொரு கௌன்டி கவுன்ஸிலிலும் இருப்பார்கள்.

ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸிலில்

(1) ஒரு கிளார்க் அல்லது காரியதரிசி
(2) ஓர் எஞ்சினியர் அல்லது சர்வேயர்
(3) ஒரு வைத்திய சுகாதார அதிகாரி
(4) பல சுகாதார இன்ஸ்பெக்டர்கள்

பாரிஷ்களில் குறைந்த செலவில் ஒரு காரியதரிசி மட்டுமே சம்பளத்துக்கு நியமிக்கப்படுவார். வேறு உத்தியோகஸ்தர்கள் கிடையாது.

சுயநிர்ணயமும் வரிப் பொறுப்பும்

பிரிட்டனிலுள்ள 6 வகை ஸ்தல ஸ்தாபனங்களில் கௌன்டி கவுன்ஸில், சர்க்காரின் ஏஜெண்டாக வேலைசெய்கிறது. ரூரல் அர்பன் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களும் பாரிஷும் சர்க்கார் கொடுத்த அதிகாரத்துடன் வேலை செய்கின்றன. ஆனல் கௌன்டி பரோக்களும், பரோக்களும் சர்க்காரால் "வலுக்கட்டாயமாக" ஏற்படுத்தப் பட்டவையல்ல; தாமாகவே அங்கு வசிப்பாரின் விருப்பப்படி ஏற்பட்டவை; அவற்றைச் சர்க்கார் அங்கீகரித்து அதிகார பூர்வமான அந்தஸ்தை அளித்திருக்கிறது. அதாவது பரோக்களும், கௌன்டி பரோக்களும் சுய நிர்ணயத்தின் மூலம் ஆரம்பமானவை என்று சொல்லலாம்.

உதாரணமாக இப்போதுள்ள ஒரு கௌன்டியில் ஏதேனும் ஒரு "பரோ" ஜனத்தொகையிலும் வரி வசதியிலும் மிகவும் பெரிதாக வளர்ந்து விடுவதாக வைத்துக்கொள்வோம். ஜனத்தொகை 100,000 ஆகப் பெருகிவிட்டால் அந்தக் கவுன்ஸில் மத்தியசர்க்காருக்கு மனுச் செய்து கொள்ளும். பிறகு பார்லிமெண்டின் சம்மதத்துடன் அது ஒரு "கௌன்டி பரோ" வாக ஆய்விடலாம். பின்னர் அது கௌன்டி கவுன்ஸிலுக்கு உட்பட்டதாக இராமல், ஒரு கௌன்டிக்குள்ள அதிகாரங்கள் முழுமையும் பெற முடியும்.

அது போலவே ஒரு பிரதேசம் "அர்பன் டிஸ்ட்ரிக்ட்" என்ற அந்தஸ்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தப் பிரதேசம் முழுதுமோ, அல்லது அதில் ஒரு பகுதியோ ஜனத்தொகையில் பெரிதாக

வளர்ந்துவிட்டால் பிறகு பார்லிமென்டிற்க்கு மனுச் செய்து "பரோ"வாகச் சாஸனம் பெறலாம்.

ஆனல் எந்தப் பரோவும் ஜனத்தொகை பெருகின வுடன் "கௌன்டி பரோவாக" மாறித் தீரவேண்டும் என்பதில்லை. அது போலவே எந்த ஊரும் "பரோ" வாக ஆகித் தீரவேண்டும் என்பதில்லை.

இதுவரையில் கௌன்டி கவுன்ஸில்களைப் பற்றியும் ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்களைப் பற்றியும் பாரிஷ் களைப் பற்றியுமே விரிவான தகவல்கள் தரப்பட்டன. பரோக்கள், அர்பன் டிஸ்ட்ரிக்டுகள், கௌன்டி பரோக் கள் ஆகியவற்றைப் பற்றி அதிகமாகப் பிரஸ்தாபிக்க வில்லை. இதற்குக் காரணம் கிராம சுயாட்சிக்கு நேர்முக மாகச் சம்பந்தமுள்ளவை பாரிஷ், ரூரல் டிஸ்ட்ரிக்ட், கௌன்டி கவுன்ஸில்கள் இவையே. மற்றவை, அதாவது "பரோ"க்கள், பட்டணப் பிரதேசங்கள்.

பட்டணத்து ஸ்தாபனங்கள்

அர்பன் டிஸ்ட்ரிக்ட், பரோ, கௌன்டி பரோ ஆகியவை ஜன நெருக்கமும் நிர்வாக அனுபவமும் அதிகமாகவுள்ள இடங்கள். ஏற்கெனவே கூறியபடி கௌன்டி பரோ கவுன்ஸில்கள் நேர்முகமாகச் சர்க்கா ருடன் தொடர்புள்ளவை. வேறு ஸ்தாபனங்களுடன் அவற்றுக்குத் தொடர்பு கிடையாது. அவைகள் கௌன்டி கவுன்ஸிலுக்குச் சமமான அதிகாரமுள்ளவை.

பரோக்களும் கிட்டத்தட்டக் கௌன்டி பரோக்கள் போலவே அதிகமான அதிகாரங்கள் உள்ளவை. இவை கௌன்டி கவுன்ஸிலை அதிகமாக எதிர்பார்க்க வேண்டியிருக்காது. சிற்சில விஷயங்களில்தான் இவை

கௌன்டி க்வுன்ஸிலே எதிர்பார்க்கும்; வேறு ஸ்தாபனங்களுடன் அதிகத் தொடர்புங் கிடையாது.

அர்பன் கவுன்ஸில்கள் அநேகமாகப் பரோ கவுன்ஸில்கள் போலத்தான். ஆனால் அந்தஸ்தில் வித்தியாசம் உண்டு. ஒவ்வொரு பரோவும் தனியாகப் பார்லிமென்டால் அங்கீகரிக்கப்பட்டு "மன்னரின்" சாஸனத்தால் ஏற்பட்டவை. ஒரு தனிமனிதன் என்ன காரியங்களெல்லாம் செய்யலாமோ அதையெல்லாம் இவை செய்யு முடியும். இன்னது செய்யக் கூடாது என்று பார்லிமென்டின் சாஸனத்தில் சொல்லப்படும்; அவ்வாறு தடுக்கப்பட்ட விஷயங்கள் தவிர, மற்றெல்லா விஷயங்களிலும் பரோக்களுக்குச் சுதந்திரம் உண்டு. அர்பன் கௌன்ஸில்கள் அப்படியல்ல. என்னென்ன காரியங்கள் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அதைத்தான் செய்யலாம்.

பரோக்களுக்கு மேயர், ஆல்டர்மென் க்வுன்ஸிலர்கள் உண்டு. பரோக்களின் அங்கத்தினர்கள் ஜாபிதாவைப் புரட்டிப் பார்த்தால் வக்கீல்கள், கம்பெனி நிர்வாகிக்ள், வர்த்தகப் பிரமுகர்க்ள், பதவியிலிருந்து விலகிய பல மாஜி உத்தியோகஸ்தர்கள் அதிகமாக இருப்பார்கள். அதாவது நிர்வாக அனுபவம் பெற்றவர்கள் அதிகம் இருப்பார்கள்.

20,000 க்கு மேல் ஜனத்தொகையுள்ள பரோக்கள் தனியாகப் போலீஸும் வைத்துக் கொள்ளலாம். பரோ கவுன்ஸில்கள் லாபகரமான வர்த்தகத்தில் மூலதனம் போட்டு மின்சார சப்ளைக் கம்பெனி, மார்க்கெட்டுக்ள் முதலியன வைத்து லாபம் சம்பாதிக்கலாம்.

கௌன்டி க்வுன்ஸிலுக்குச் சேரவேண்டிய வரியையும் இவை வசூலிக்கும்.

இவை சுதந்திர ஸ்தாபனங்களேயாயினும் தனி மனிதர்களின் வாழ்க்கையைப் பார்லிமென்ட் சட்டம் இயற்றி ஒழுங்குபடுத்துவதுபோல, இவற்றின் மீதும் சில ஒழுங்கு விதிகள் ஏற்படுத்தப் பார்லிமென்டுக்கு அதிகாரம் உண்டு.

பண விஷயம்

பிரிட்டிஷ் ஸ்தல ஸ்தாபனங்களின் பண வரவு செலவு நிலைமை சம்பந்தமாக அடிக்கடி மாறுதல்கள் நடந்துவந்திருக்கின்றன. போக்கு வரவு வசதிகள் அதிகரித்ததன் நிமித்தமாக, எந்த விஷயத்தையும் ஒரு சிறிய பிரதேசத்தை மட்டும் வைத்துக்கொண்டு நிர்வகிப்பது அனுவசியமாகி விட்டது; பல விஷயங்களில் மத்திய சர்க்காரே நேரில் பொறுப்பேற்பது அவசியமாய்விட்டது. இதனால் இங்கிலாந்தில் மட்டுமல்ல, உலகம் முழுதிலுமே ஸ்தல சுயாட்சியின் நிதி நிலைமையில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் சில பொது அம்சங்களைக் குறிப்பிடுவது அவசியம்.

இங்கிலாந்தில் முதல் முதலில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு, சொத்துவரியே முக்கிய ஆஸ்பதமாக இருந்தது. அதாவது வீடு, நிலம் ஆகிய ஸ்தாவர சொத்துக்கள் மீது ஸ்தல ஸ்தாபனங்கள் வரி விதித்து வந்தன. பிறகு விவசாய நிலங்களுக்கு வரி இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது. ஆகையால் வீட்டு வரி தான் மிகவும் முக்கியமான சொத்துவரி யாயிற்று. ஒவ்வொரு கௌன்டியிலும் ஒவ்வொரு வீட்டுக்கும் வருஷ வாடகை வருமானம் எவ்வளவு இருக்கக்கூடும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வருஷ மதிப்பின் மீதுதான் வரி விதிப்பது வழக்கம். உதாரணமாக ஒவ்வொரு கௌன்டியிலுமுள்ள "வீடுகளின் வருஷ

மதிப்பு 10 கோடி பவுன், என்று வைத்துக் கொள்வோம். அந்தக் கௌண்டி கவுன்ஸிலுக்கு ஒரு வருஷத்துக்கு என்ன செலவாகும் என்று மதிப்பிடும் போது, சொத்து வரியிலிருந்து 2 கோடி பவுன் தேவையாகும் என்று கணக்கிட்டால், பவுன் 1க்கு 4 ஷில்லிங் என்று கௌண்டி கவுன்ஸில் வரி விதிக்கும். கௌண்டியிலுள்ள எல்லா வீடுகள் மீதும் இந்த வரி உண்டு. தவிர அந்த வீடு எந்த பரோவில் அல்லது அர்பன் டிஸ்ட்ரிக்டில் அல்லது ரூரல் டிஸ்ட்ரிக்டில் இருக்கிறதோ அந்தந்த ஸ்தாபனத்தின் செலவுக்காகவும் வீட்டின் வருஷ மதிப்பின் மீது வரி விதிப்பார்கள். பாரிஷ் கவுன்ஸிலும் தன் தேவைக்குத் தக்கபடி வரி விதிக்கலாம். இவ்வாறாக ஒரே வீட்டுக்காரர் தம் வீட்டின் மீது கௌண்டி வரி, டிஸ்ட்ரிக்ட் வரி, பாரிஷ் வரி என்று மூன்று வரிகள் செலுத்த வேண்டியிருக்கும். ஒரே அதிகாரி இந்த மூன்று வரிகளையும் மொத்தமாக வசூலித்து அந்தந்த ஸ்தாபனத்திடம் கொடுப்பார். வீட்டு வரிதான் ஒரு காலத்தில் முக்கியமான வரியாக இருந்தது. ஆனால் சமீப காலத்தில் மோட்டார் லைசென்ஸ் வரி, பெட்ரோல் வரி, மதுபானக்கடைகள் வரி, சினிமா நாடகக் கொட்டகைவரிகள் முதலியன ஏற்பட்டன. ஆஸ்பத்திரிகள், கல்விச்சாலைகள், விவசாய ஆராய்ச்சிப்பண்ணை முதலிய பல இனங்களின் செலவு பெருகி வருவதை இந்தப் புதிய வரிகள் மூலமே சமாளிக்கிறார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்களின் பல செலவுகளுக்குச் சர்க்கார் மானியம் அளிக்கிறது. இவ்வாறு சர்க்காரிலிருந்து கிடைக்கும் மானியமும், மத்திய சர்க்காரின் வரியிலிருந்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கென்று ஒதுக்கப்படும் பணமும், ஸ்தல ஸ்தாபனங்களின் வரவு செலவில் மிகவும் முக்கியமான அம்சங்களாக இருக்கின்றன.

ஆனால் இதில் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது கல்வி, சுகாதாரம், ஏழைகள் கஷ்ட நிவாரணம், ஒவ்வொன்றுக்கும் சர்க்கார் "மானியத்தின்" மூலம் உதவி செய்கிறதென்றாலும், அந்த ஒவ்வொரு செலவிலும் ஒரு பகுதியையாவது ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்றுக் கொள்கின்றன. வரி விதிக்கும்போதே என்ன காரியத்துக்காக என்பதைக் காட்டியே ஸ்தல ஸ்தாபனங்கள் வரி வசூலிக்கின்றன. உதாரணமாக ஒரு கௌன்டி கவுன்ஸில் பவுனுக்கு 4 ஷில்லிங் என்று வரி விதிக்கும்போது, கல்விக்காக 2 ஷில்லிங், சாக்கடைத் திட்டத்துக்காக 1 ஷில்லிங், ரோடு பராமரிப்புக்காக ½ ஷில்லிங் என்றிவ்வாறு இனம் இனமாகவே வரி விதிக்கும். இது ஸ்தல ஸ்தாபனங்களில் பொறுப்புணர்ச்சி ஏற்படுவதற்குச் சரியான வழி என்று மதிக்கப்படுகிறது.

இந்திய, பிரிட்டிஷ் ஸ்தாபனங்கள்

இங்கிலாந்திலுள்ள 6 வகையான ஸ்தல ஸ்தாபனங்களை இந்தியாவில் சமீப காலத்தில் இருந்த ஸ்தாபனங்களுடன் ஒப்பிட்டால், (1) "பாரிஷ்" களை கிராமப்பஞ்சாயத்து போர்ட் அல்லது யூனியன் போர்டுடனும் (2) அர்பன், ரூரல் டிஸ்ட்ரிக்டைத் தாலுகா போர்டுகளுடனும் (3) கௌன்டியை தாலுகா போர்டுடனும் (4) 'கௌன்டி பரோ' வை நகர சபைகளுடனும் (கார்ப்பரேஷன் அல்லது முனிஸிபாலிட்டிகளுடனும்) ஒப்பிடலாம் என்று டி. பி. ரஸ்ஸல் கூறுகிறார். ஆனால் உண்மையில் "பாரிஷ்களை" விட, பஞ்சாயத்துகளிடம் அதிகமான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவே நாம் கருத முடியும். உதாரணமாக இங்கு பஞ்சாயத்துகளாக இருக்கும் சில ஊர்களில் ஜனத்தொகை பதினைந்தாயிரம், இருபதாயிரம் இருக்கிறது. இவற்றைப் பாரிஷ்களுடன் ஒப்பிடுவது தகாது. இப்போதுள்ள சில பஞ்சாயத்து போர்டுகளை "பரோ" க்களுடனேயே ஒப்பிட வேண்டும்.

"பிரதேசங்களும்" "ஊர்களும்"

ஸ்தலஸ்தாபனங்களை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். 1. பிரதேச ஸ்தாபனங்கள் 2. ஊர் ஸ்தாபனங்கள் அல்லது ஊர் அமைப்புக்கள். அதாவது கௌன்டி, அர்பன் டிஸ்ட்ரிக்ட், ரூரல் டிஸ்ட்ரிக்ட் இம் மூன்றும் "பிரதேசங்கள்" என்ற பெயருக்கே பொருத்தமாகும்; அவை ஊர்களல்ல. (ஊர் என்ற வார்த்தையை இங்கு கிராமம் அல்லது பட்டணம் அல்லது நகரம் என்ற கருத்தில் உபயோகிக்கிறோம்.) அடுத்தபடியாக

'கௌன்டி-பரோ' 'பரோ' 'பாரிஷ்' இம் மூன்றும் 'ஊர்'களாக மதிக்கத் தக்கவை.

ஒரு "பிரதேசத்தினுள்" பல "ஊர்கள்" இருக்க முடியும்.

பொதுவாகச் சொல்லுமிடத்து, இங்கிலாந்தில் "பிரதேச" ஸ்தாபனங்கள் சர்க்காரால் அமைக்கப் பட்டவை. "ஊர் ஸ்தாபனங்கள்" ஊர் ஜனங்களின் ஊக்கத்தால் தோன்றியவை என்று சொல்லலாம்.

இந்தியாவிலுள்ள 4 வகை ஸ்தல ஸ்தாபனங்களில் ஜில்லா போர்டும், தாலுகா போர்டும் "பிரதேச ஸ்தா பனங்கள்". நகர சபைகளும், பஞ்சாயத்து போர்டு களுமே "ஊர்"கள்.

ஸ்தல ஸ்தாபனங்களில் வரி வருமானம் சம்பந்த மாக, இந்தியாவில் "பிரதேசத்துக்கும்" "ஊருக்கும்" இடையே ஒரு முக்கியமான வித்தியாசம் இருந்து வந்திருக்கிறது.

"ஊர்" ஸ்தாபனங்களில் (அதாவது நகர சபை, பஞ்சாயத்து போர்டு இரண்டிலும்) முக்கியமான வரு மானம் வீட்டு வரியே. ஆனால் "பிரதேச" ஸ்தாபனங் களாகிய "ஜில்லா போர்டு" "தாலுகா போர்டு" இரண்டுக்கும் வீட்டு வரியே கிடையாது. நில வரி மீது ஒரு "செஸ்" (உபரிவரி) விதித்து, அதையே இந்தப் பிரதேச ஸ்தாபனங்களின் முக்கிய வருமான ஆஸ்பத மாக வைத்திருந்தார்கள்.

மானியம் கொடுக்கும் கொள்கை

ஆகையால் மானியம் சம்பந்தமாகப் பிரிட்டன் அனுஷ்டிக்கும் முறையைக் கவனிப்பது நலம்.

பிரிட்டனில் ஸ்தலஸ்தாபனங்களின் செலவுக்குச் சர்க்காரிலிருந்தும் பண உதவி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு மானியம் அளிப்பதில் சமீப காலத்தில் பல புதிய கொள்கைகள் அமலுக்கு வந்திருக்கின்றன.

தேவையும் சக்தியும்

உதாரணமாக, கல்விச் சாலைகளை எடுத்துக்கொள்வோம். ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வி இரண்டிலும் கௌன்டி கவுன்ஸிலுக்கே பொறுப்பு. வெகுகாலமாக இவ் விஷயத்தில் ஸ்தல ஸ்தாபனம் கல்விக்காக எவ்வளவு பணம் செலவிடுகிறதோ, அதில் பாதியைச் சர்க்கார் கொடுத்துவருவது என்பதே கொள்கையாக இருந்தது.

அனுபவத்தில் இதில் ஒரு பெரிய அநீதி இருக்கிறது உதாரணமாக, ஒரு கௌன்டியில் ஜனத்தொகைப்படி சராசரி சொத்துக்களின் மதிப்பு மிகவும் குறைவாக இருக்கும். ஆகையால் வரி வருமானமும் குறைவாக இருக்கும். மற்றொன்றில் சொத்துமதிப்பு அதிகமாக இருக்கும். வரி வருமானமும் அதிகமாக இருக்கும். பணக்காரக் கௌன்டிகள் அதிகம் செலவு செய்து சர்க்காரிலிருந்து அதிகமான தொகையை மானியமாகப் பெறமுடியும். பணமில்லாத கௌன்டிகளுக்கு மானியமும் குறைவாக இருக்கும். ஆகையால் பணக்காரக்கௌன்டியிலுள்ள பள்ளிக்கூடங்களைப் போல், ஏழைக் கௌன்டிகளில் பள்ளிக்கூடங்கள் திறமையாக நடத்த முடியாது. இது விரும்பத்தக்கதல்ல. ஆகவே சர்க்கார் கொடுக்கும் மானியம் கௌன்டியின் "சக்தியையும் செல்வத்தையும்" மட்டுமே பொறுத்ததாக இல்லாமல், "தேவையையும்" அநுசரித்திருப்பது அவசியம். சமீபத்தில் இவ்வாறு ஒரு புதிய கொள்கை அமலுக்கு வந்திருக்கிறது. இதன் பலனைச்

சில கௌன்டிகளில் கல்விச் செலவில் பாதியைச் சர்க்கார் ஒப்புக்கொள்ளும்; சிலவற்றில் முக்கால் பாகத்தை ஏற்றுக்கொள்ளும்.

தனி "கூட்டுப் போர்டுகள்"

சிற்சில காரியங்களுக்காக ஒரு கௌன்டியிலுள்ள எந்த ஸ்தல ஸ்தாபனமும், பக்கத்திலுள்ள ஸ்தல ஸ்தாபனத்துடன் கூட்டுறவாகச் சில ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம் என்ற ஒரு முறை பிரிட்டனில் இருக்கிறது. உதாரணமாக ஒரு பரோவும் அதன் பக்கத்திலுள்ள ரூரல் அல்லது அர்பன் டிஸ்ட்ரிக்டும் "குடி தண்ணீர் சப்ளை"க்காகக் கூட்டுறவாக ஒரு போர்டு அமைத்துக் கொள்ளலாம். ஜல சப்ளை சம்பந்தமான பண வரவு செலவுகள் யாவற்றையும் இந்தக் கூட்டுறவு போர்ட் நிறில் கவனித்துக்கொள்ளும். சுகாதார வசதிகள், வைத்திய வசதிகள் முதலிய விஷயங்களில் இம் மாதிரியான ஏற்பாடுகள் சகஜம். ஆனல் ஒரு கௌன்டியிலுள்ள ஸ்தல ஸ்தாபனம் வேறு கௌன்டியிலுள்ள ஸ்தாபனத்துடன் இவ்வாறு கூட்டுறவு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளக்கூடாது.

இந்தியாவில் தாலுகா போர்டுகளுக்கிடையே அல்லது பிர்க்கா போர்டுகளுக்கிடையே சில தேவைகளை முன்னிட்டு, இதுபோலக் கூட்டுறவுக் கமிட்டிகள் அல்லது கலப்புப் போர்டுகள் ஏற்படுத்திக் கொள்ள உரிமையளிப்பது மிகவும் பயன் தரும்.

தேர்தல் முறை

ஸ்தல ஸ்தாபன அமைப்பில் தேர்தல் சம்பந்தமாகப் பிரிட்டனிலுள்ள முறையே, இந்தியாவிலும் பின்பற்றப் பட்டிருக்கிறது. அதாவது நகரங்களில் வோட்டர்கள் "வார்டுகளாகப்" பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வார்டிலிருந்தும் ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்கிறார்கள்.

நகரத்திலுள்ள வோட்டர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரே தொகுதியாக எல்லா அங்கத்தினர்களையும் பொறுக்குவதில்லை. ஒவ்வொரு பிரதிநிதிக்கும் நகரம் முழுதுக்கும் தம்மைப் பிரதிநிதியென்று மதிக்காமல், தம் வார்டுக்கே தாம் முக்கியமாகச் சேவை செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி இருக்கிறது. ஒவ்வொருவரையும் வோட்டர்கள் "மெம்பர்களாகத்" தேர்ந்தெடுக்கிருர்களே யொழிய "மேயராகவோ" "தலைவராகவோ" தேர்ந்தெடுப்பதில்லை. மெம்பர்கள்தான் மேயரையோ தலைவரையோ பொறுக்குகிருர்கள். அதாவது தேர்தல் நடக்கும்போது மேயர் பதவிக்கென்று அல்லது "சேர்மன்" பதவிக்கென்று யாரும் தேர்தலுக்கு நிற்பதில்லை. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் இதே முறைதான் இருந்து வருகிறது.

இந்தியாவில், பஞ்சாயத்துகளில் 'தலைவரை' பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்காமல் கிராமத்திலுள்ள வோட்டர்கள் நேரில் தேர்ந்தெடுக்கலாம் என்று யோசனை இருந்து வருகிறது. இதை அமெரிக்க முறை என்று சொல்லலாம்.

அமெரிக்காவில் ஜனாதிபதியை ஜனங்கள் நேரில் பொறுக்குவதுபோல ஸ்தல ஸ்தாபனங்களிலும் முக்கிய நிர்வாகிகளை ஜனங்கள் அந்தப் பதவிக்கென்றே தேர்ந்தெடுக்கிருர்கள்.

பல விஷயங்களில், பிரிட்டிஷ் முறைக்கும் அமெரிக்க முறைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அங்கு ஒவ்வொரு மாகாணத்திலும் ஸ்தல ஸ்தாபனங்களின் அமைப்பு ஒவ்வொரு ரகமாக இருக்கிறது. இனி அமெரிக்க முறையைக் கவனிப்போம்.

அமெரிக்கா

எச்சரிக்கையும் முன்னுரையும்

அமெரிக்காவிலுள்ள ஸ்தல ஸ்தாபன அமைப்பைப்பற்றி எழுதும்போது ஒரு விஷயத்தில் வாசகர்களை எச்சரிப்பது அவசியம்.

சிற்சில விஷயங்களில்தான் அமெரிக்காவின் உதாரணம் இந்தியாவுக்குப் பொருத்தமானதாக இருக்க முடியும். ஏனென்ருல் ஜன நெருக்கம், நகரத்தில் வாழ்வோரின் தொகைக்கும் கிராமாந்தரங்களில் வாழ்வோரின் தொகைக்கு மிடையேயுள்ள வீதாச்சாரம், ஆகிய இரண்டிலும் இந்தியாவின் நிலைமைக்கும் அமெரிக்காவின் நிலைமைக்கும் மிகவும் முக்கியமான வித்தியாசங்கள் உண்டு. அதுமட்டு மல்ல. அமெரிக்காவிலேயே ஒரு மாகாணத்துக்கும் மற்ெருரு மாகாணத்துக்கு மிடையே உவமை சொல்ல முடியாது.

(1) உதாரணமாக அமெரிக்கா (யு. எஸ்.) முழுதையும் எடுத்துக்கொண்டால், ஜன நெருக்கம் சதுர மைலுக்கு 44 பேர்தான்; ஆனுல் மாகாணம் மாகாணமாக எடுத்துக் கொண்டால், சில மாகாணங்களில் ஜன நெருக்கம் சதுர மைலுக்கு 675 பேர் வீதம் இருக்கும். சில மாகாணங்களில் ஜன நெருக்கம் சதுர மைலுக்கு 2 பேர் வீதம் இருக்கும். பெரும்பாலான மாகாணங்களில் ஜன நெருக்கம் சதுர மைலுக்கு 50 பேருக்குக் குறைவு.

(2) ஒரே மாகாணத்திலுள்ள பல "கௌண்டி" களை எடுத்துக் கொண்டால், சில கௌண்டிகளில் ஜனத்

தொகை சதுர மைலுக்கு 100 பேர் வீதம் இருக்கும்; மற்றொரு கௌன்டியில் ஜன நெருக்கம் சதுர மைலுக்கு 2000 பேர் வீதம் இருக்கும்.

(3) சதுரமைலுக்கு எத்தனை பேர் வசிக்கிறார்கள் என்பதைக் கவனிக்காமல் ஜனத் தொகையை மட்டும் எடுத்துக் கொண்டால், ஒரே மாகாணத்தில் பெரும்பாலான கௌன்டிகளில் ஜனத்தொகை 50000க்குக் குறைவாக இருக்கும். வேறு கௌன்டிகளில் ஜனத் தொகை 2 லக்ஷத்துக்கு அதிகமாக இருக்கும்!

(4) அமெரிக்காவில் ஒவ்வொரு மாகாணமும் பல கௌன்டிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு அமெரிக்காவில் 48 மாகாணங்களிலும் சேர்ந்து 3053 கௌன்டிகள் இருக்கின்றன. விஸ்தீர்ணத்தையும், ஜனத் தொகையையும் கவனித்தால் ஒரு கௌன்டிக்கும் மற்றொரு கௌன்டிக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கும். உதாரணமாக காலிபோர்னியாவில் (ஸான்பிரான்ஸிஸ்கோவுக்கருகே) "ஸான் பர்னார்டினோ" என்று ஒரு கௌன்டி இருக்கிறது. அதன் விஸ்தீர்ணம் 20,175 சதுர மைல்! விர்ஜீனியா மாகாணத்தில் "அர்லிங்டன்" என்ற ஒரு கௌன்டி இருக்கிறது. அதன் விஸ்தீர்ணம் 25 சதுர மைல். ஆகையால் ஒரு கௌன்டி யென்பது 25 சதுர மைலிலிருந்து 20000 சதுர மைல் வரை இருக்கிறது.

(5) கௌன்டிகளின் ஜனத்தொகையை எடுத்துக் கொண்டால், சில கௌன்டிகளின் ஜனத் தொகை 10 லக்ஷம் இருக்கும். ஆனால் டெக்ஸாஸ் மாகாணத்தில் 701 ஜனத் தொகையுள்ள ஒரு கௌன்டியும் இருக்கிறது.

(6) அடுத்தபடியாக எத்தனைபேர் பட்டணங்களில் வசிக்கிறார்கள்; எத்தனை பேர் கிராமங்களிலும்,

உதிரியாக விவசாய நிலத்தின் மத்தியிலும் வசிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். அதிலும் மாகாணத்துக்கு மாகாணம் கௌன்டிக்குக் கௌன்டி வித்தியாசம் இருக்கிறது.

2500 பேருக்குக் குறைவாக வசிக்கும் சிறு ஊர்களையும், ஜனங்கள் உதிரியாக வசிக்கும் பிரதேசங்களையும் அமெரிக்காவில் 'ரூரல்' பிரதேசம் என்பார்கள்; அதாவது விவசாய நிலக் குடியிருப்புக்கள் என்று அர்த்தம். 2500 பேருக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள ஊர்களைப் "பட்டண வாசம்" என்பார்கள். இந்தப் பாகுபாட்டின்படி அமெரிக்கா தேசம் முழுவதையும் எடுத்துக்கொண்டால், 100-க்கு 44 பேர் "ரூரல்" பிரதேசங்களில் வாழ்வதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு மாகாணமாகக் கணக்கிட்டால் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன. உதாரணமாக மிஸ்ஸிஸிப்பி மாகாணத்தில் 100-க்கு 80 பேர் ரூரல் பிரதேசத்தினர்; மஸ்ஸாச்சஸ்ஸெட்ஸ் மாகாணத்தில் 100-க்கு 11 பேர் தான் ரூரல். (நம் சென்னை மாகாணத்தில் ஜனத்தொகை 5000 க்குக் குறைவாகவுள்ள இடங்களை "ரூரல்" என்று பாவிக்கிறார்கள். இங்கு ரூரல் ஜனத்தொகை 100ல் 84)

(7) கைத்தொழிலில் மிதமிஞ்சின வளர்ச்சி பெற்றுள்ள மாகாணங்களில் "ரூரல்" ஜனத்தொகை மிகவும் குறைவு. மொத்த ஜனத்தொகையும் ஜன நெருக்கமும் மிகவும் அதிகம்.

உதாரணமாக அமெரிக்க ஜனத்தொகையில் 100-க்கு 56 பேர், 100-ல் 8 பங்கு நிலப்பரப்பில் வசிக்கிறார்கள். கைத்தொழிலில் முன்னேறாத மாகாணங்களின் விஸ்தீரணம் அமெரிக்க விஸ்தீரணத்தில் 100-க்கு 61. (61 சதவிகிதம்) ஆனால் இதில் வசிக்கும் ஜனங்களின் தொகை அமெரிக்க ஜனத்தொகையில் 100-க்கு

21. (21 சதவிகிதம்தான்). மிஸ்ஸிஸிப்பி என்ற மாகாணத்தின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட தமிழ் நாட்டின் விஸ்தீரணத்துக்குச் சமம்; ஆனால் அதன் ஜனத்தொகை தமிழ்நாட்டின் ஜனத்தொகையில் பத்திலொரு பங்குதான்.

(8) கைத்தொழிலில் மிகவும் பிற்போக்காகக் கருதப்படும் இந்த மிஸ்ஸிஸிப்பி மாகாணத்தில் கூட இந்தியாவிலிருப்பதை விடக் கைத்தொழில்கள் அதிகமே.

வித்தியாசங்கள் இருப்பினும்

ஆகையால் ஜனநெருக்கம், விஸ்தீரணம், கிராம வாழ்க்கைக்கும் நகர வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசம், கிராம வாழ்க்கையின் அமைப்பு ஆகிய விஷயங்களில் அமெரிக்க உதாரணங்களைக்கொண்டு நம் தேவையை மதிப்பிடுவது அபாயமான தவறுகளுக்கு இடமாகும்.

ஆயினும் ஸ்தல ஸ்தாபன அமைப்பு முறை அதாவது தேர்தல் முறை, அதிகாரம் முதலிய விஷயங்களில் நமது கொள்கையை நிர்ணயிப்பதற்குச் சில படிப்பினைகள், அமெரிக்க உதாரணத்திலிருந்து நமக்குக் கிடைக்கலாம்.

பிரிட்டனில் பின்பற்றாத பல புதிய முறைகளை, அமெரிக்க ஸ்தல ஸ்தாபனங்கள் இப்போது நடத்திப் பார்க்கின்றன. தேசிய அரசியலமைப்பைப் போலவே ஸ்தல ஸ்தாபன அமைப்பும் சிக்கல்கள் நிறைந்த பிரச்னை; பலவிதமான அமைப்பு முறைகளையும் நாம் தெரிந்து கொள்வது அவசியம். அதற்காகத் தான் அமெரிக்காவிலுள்ள முறையை இங்கு ஆராய்ச்சி செய்கிறோம்.

மற்றொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். அமெரிக்காவில் இப்போதுள்ள முறையை மிகவும் அதிகமாகக் குறை கூறுபவர்கள் அமெரிக்கர்களே. குறைகள் இருப்பதாக அவர்கள் உணருவதால ஸ்தல ஸ்தாபன அமைப்புப்பற்றி அங்கு பல ஆராய்ச்சிகள் எப்போதும் நடந்து வருகின்றன.

சமீபத்தில் ஒஹாயோ என்ற மாகாணத்தில் "மாண்ட்கோமரி" என்ற ஒரு கௌன்டியில் ஸ்தல ஸ்தாபன அமைப்புப் பற்றிச் சில ஆராய்ச்சிகள் நடத்தி ஓர் அறிக்கை தயாரித்தார்கள். அந்த அறிக்கையையும், நேரில் விவாதித்து ஆராய்ந்ததையும், ஆதாரமாகக் கொண்டு அமெரிக்க ஸ்தல ஸ்தாபன அமைப்பை இனி விவரிப்போம்.



அதற்கு முன்னுரையாகச் சில தகவல்களை இங்கு குறிப்பிடலாம்.

அமெரிக்காவில் 4 விதமான ஸ்தல ஸ்தாபனங்கள் (ஸ்தல ஸ்தாபன சர்க்கார்கள்) இருக்கின்றன.

(1) கௌன்டி
(2) "டவுன் ஷிப்"
(3) நகரம்
(4) கிராமம்

கௌன்டியும் டவுன்ஷிப்பும் "பிரதேச அமைப்புகள், நகரமும் கிராமமும் ஊர் அமைப்புகள்." இவற்றை முறையே நம் நாட்டில் ஜில்லா போர்டு, தாலுகா போர்டு, நகரசபை, பஞ்சாயத்து போர்டு இவற்றுக்குச் சமமாகச் சொல்லலாம்.



டேய்ட்டனின் நகரசபை அதிகாரிகளுடன் ஆசிரியர் ஸ்ரீ சிவராமன் சிற்றுண்டியருந்திக் கொண்டே நகர நிர்வாகத்தைப் பற்றி விவாதித்து குறிப்புகள் எழுதிக்கொள்கிருர்.

கௌன்டி சர்க்கார் அமைப்புமுறை

இங்கிலாந்தைப் போலவே, அமெரிக்காவிலும் சர்க்காரின் நிர்வாக ஏஜெண்டாகவே கௌன்டிகள் ஸ்தாபிக்கப்பட்டன.

இங்கிலாந்திலுள்ள கௌன்டிகளைவிட அமெரிக்காவில் கௌன்டிகள் முக்கியம் வாய்ந்தவை. இவற்றை இந்தியாவிலுள்ள ஜில்லா போர்டுகளுடன் ஒப்பிடுவதைவிட, இந்தியாவிலுள்ள ஜில்லா கலெக்டர் காரியாலயத்துடன் ஒப்பிடுவது பொருந்தும். ஒரே ஒரு வித்தியாசம்தான்: நில வரி வசூல் சட்டம், அமைதியை நிலை நாட்டுதல், அது சம்பந்தமான நீதி நிர்வாக அதிகாரம். இவை யாவற்றுக்கும் பொறுப்பாளியான கலெக்டர், இங்கு சர்க்காரால் நியமிக்கப் படுகிறார். பொதுஜனப் பிரதிநிதித்துவம் என்ற அம்சம் கலெக்டர் ஆபீஸில் கிடையாது. ஆனால் அமெரிக்காவிலுள்ள கௌன்டி அதிகார ஸ்தாபனம் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

இந்தியாவிலுள்ள ஜில்லா அமைப்புடன் ஒப்பிட்டால், அமெரிக்கக் கௌன்டிகளை "கலெக்டர் காரியாலயத்தின் அதிகாரங்கள் கொண்ட ஒரு ஜில்லா போர்ட்" என்று சொல்லலாம். (அமெரிக்காவின் வடகிழக்குக் கரையோரமாகவுள்ள "நியூ இங்கிலாந்து" மாகாணங்கள் மட்டும் கௌன்டிகள். அவை இவ்வளவு முக்கியமான ஸ்தாபனங்களாக இருக்கவில்லை. ஆயினும் அங்கும் கௌன்டிகளே சர்க்காரின் "ஏஜெண்டு". அங்குள்ள "டவுன்ஷிப்" சுயாட்சி முறையும் தனி ரகம்.)

அமெரிக்கக் கௌன்டிகளின் அதிகாரங்களைக் கவனித்தால் அவற்றை "ஸ்தல ஸ்தாபனம்" என்று கூறுவதை விட "ஸ்தல சர்க்கார்" என்றே கூறலாம்.

கௌன்டியும் நகரங்களும்

அங்கு எந்த ஸ்தாபனமும், நிர்வாகப்பொறுப்புள்ள பதவிகளும் தேர்தல் மூலமே ஏற்படுத்துவது வழக்கம். ஆகவே மாகாண சர்க்காரைப் போலவே ஸ்தல சர்க்காரும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறது.

இங்கிலாந்தில் பெரிய நகரங்கள் கௌன்டிக்கு உட்பட்டதாக இல்லாமல் பிரிந்து போய், கௌன்டியின் அதிகாரத்துடன் கௌன்டிபரோ என்ற பெயருடன் விளங்க முடியும். அமெரிக்காவில் அப்படியல்ல. ஒரு கௌன்டியில் ஜனத்தொகையில் பெரும் பகுதி ஒரு நகரத்திலேயே குவிந்திருப்பினும், அந் நகரம் "கௌன்டி"யின் ஆதிக்கத்தை அங்கீகரிக்க வேண்டியதே.

கிராம ஆட்சியில்லாத இடங்கள்

76-வது பக்கத்திலுள்ள படத்தைப் பார்த்தால் கைத்தொழில் முன்னேற்றமுள்ள கௌன்டிகளின் ஜனத்தொகை எவ்வாறு பங்கிடப்பட்டிருக்கிறது என்பது புலனாகும்.

இது ஒஹாயோவிலுள்ள மாண்ட்கோமரி கௌன்டியின் படம்.

1930-ல் இந்தக் கௌன்டியின் ஜனத்தொகை 2,73,481 பேர். இந்தக் கௌன்டிக்குள் 3 நகரங்களும், 12 கிராமங்களும் இருக்கின்றன. மீதமுள்ள இடத்தில் "ஊர்" என்ற அந்தஸ்துள்ள இடமே கிடையாது.

கௌன்டியின் நகரங்களை மட்டும் எடுத்துக்கொண்டால் ஜனத்தொகை பின்வருமாறு பகிர்ந்து கிடக்கிறது.

டேய்ட்டன் நகர்	200,982
ஓக்வுட் நகர்	6494
மியாமிஸ்பர்க் நகர்	5518
	212,994

மீதமுள்ள ஜனத்தொகை 60,487. இதில் 9217 பேர் 12 கிராமங்களில் வசிக்கிறார்கள். இந்தக் கிராமங்களில் கிராம சுயாட்சி இருக்கிறது.

எஞ்சி நிற்கும் ஜனத் தொகை 51270. இந்த ஐம்பதாயிரம் பேருக்கும் கிராம சுயாட்சி கிடையாது; இவர்கள் விவசாயக் குடியிருப்புக்களில் வாழ்கிறார்கள்.

கௌன்டியும் 'டவுன்ஷிப்'பும்


இந்த விவசாயக் குடியிருப்புக்கள் கௌன்டி முழுதும் சிதறி இருக்கின்றன.

கௌன்டியின் விஸ்தீரணம் சுமார் 500 சதுர மைல்.

ஆகையால் நகரங்களைச் சேர்த்துப் பார்த்தால் மாண்ட் கோமரி கௌன்டியின் "ஜன நெருக்கம்" சதுர மைலுக்கு 545 என்று சொல்லலாம். ஆனால் அதிலுள்ள டேய்ட்டன் என்ற நகரம் மிகப் பெரிது. (அங்குதான் "டெல்கோ" பாட்டரிகளும், "பிரிஜிடேர்" என்ற சீதளப் பெட்டிகளும் தயாராகின்றன.) அந்த நகரை விலக்கிவிட்டுப் பார்த்தால் கௌன்டியின் ஜன நெருக்கம் சதுர மைலுக்கு 150 பேர் தான்.

இவ்வாறு உதிரியாக வாழும் சுமார் 51,270 ஜனங்களுடைய வாழ்க்கை வசதியைக் கவனிப்பது கௌன்டி க்வுன்ஸிலின் பொறுப்பு.

மாண்ட்கோமரி கௌண்டி


கிளே
1
2
5
6
ரான்டால்ப்
12
பட்லர்
வெயின்
பெரி
3
7
மாடிஸன்
ஹாரிஸன்
மாட் ரிவர்
11
ஜாக்ஸன்
4
ஜெபர்ஸன்
வான் ப்யூரன்
8
ஜெர்மன்
9
மியாமி
10
வாஷிங்டன்
நகரங்கள்
"டவுன்ஷிப்"கள்
கிராமங்கள்

இந்தப் பொறுப்பை நிர்வகிப்பதற்காக மாண்ட் கோமரிகௌன்டி 14 "டவுன்ஷிப்" புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு டவுன்ஷிப்பின் விஸ்தீரணம் சாதாரணமாக 36 சதுர மைல். சில டவுன்ஷிப்புகளை நகரங்கள் "ஆக்கிரமித்துக் கொள்வதால்" அவற்றின் விஸ்தீரணம் குறைந்திருக்கிறது.

டவுன்ஷிப்பும் கிராமங்களும்

"டவுன்ஷிப்" புகளும் சுயாட்சி ஸ்தாபனங்களே. சில டவுன்ஷிப் எல்லைக்குள் சுயாட்சியுள்ள கிராமங்கள் இருக்கும். சிலவற்றில் சுயாட்சியுள்ள கிராமங்களே இருக்கமாட்டா. கிராமங்கள் இருந்தால் அவற்றுக்கும் டவுன்ஷிப்புக்கும் வரித் தொடர்பு உண்டு. அதாவது டவுன்ஷிப், சர்க்காருக்காக கிராமத்தில் வரி வசூல் செய்ய முடியும். ஆனால் சாதாரணமாக நகரங்கள் மீது டவுன்ஷிப், சர்க்காருக்காக வரி வசூலிப்பதில்லை.

பக்கத்திலுள்ள படத்தில் 14 டவுன்ஷிப்புகளின் எல்லைகள் காட்டியிருக்கிறோம். இரண்டு டவுன்ஷிப்புகளில் கிராமங்களே இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

கிராமமோ நகரமோ இல்லாத இடங்களில், ஜனங்கள் "டவுன்ஷிப் சர்க்காருக்கும்" "கௌன்டி சர்க்காருக்கும்" வரி செலுத்துவார்கள். கிராமங்களில் ஜனங்கள் கிராம சர்க்காருக்கும் டவுன்ஷிப் சர்க்காருக்கும் கௌன்டி சர்காருக்கும் வரி செலுத்துவார்கள். நகரங்களில் வசிப்பவர்கள் நகர சர்க்காருக்கும் கௌன்டி சர்க்காருக்கும் மட்டும் வரி செலுத்தவேண்டும். அவர்கள் "டவுன்ஷிப்"புக்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

பரஸ்பர உறவு

கௌன்டி வரி எவ்வளவு என்பதைக் கௌன்டி பிரதிநிதி ஸ்தாபனம் நிர்ணயிக்கும். டவுன்ஷிப் ஸ்தா

பணம் டவுன்ஷிப் வரியை நிர்ணயிக்கும். இதுபோலவே கிராமங்களும் நகரங்களும்.

ஆனால் இத்தனை ஸ்தாபனங்களும் சேர்ந்து ஒருவர் மீது விதிக்கும் மொத்த வரி விகிதம் ஒரு எல்லையைக் கடந்துவிடாமல் கண்காணிப்பது, கௌன்டி ஸ்தாபனத்தின் பொறுப்பு. வரியை வசூலித்து அந்தந்த ஸ்தாபனத்தினிடம் கொடுப்பதும் கௌன்டி ஸ்தாபனத்தின் வேலை.

கௌன்டிக்கும் டவுன்ஷிப்புக்கும் கிராமங்கள் வரி செலுத்துவதால் கிராமங்கள் டவுன்ஷிப்புக்கு "உட்பட்டன" என்றும், டவுன்ஷிப்புகள் கௌன்டிக்கு "உட்பட்டன" என்றும் இந்நாட்டினர் நினைக்கக் கூடும். ஆனால் டவுன்ஷிப்பின் வேலையில் தலையிடவும் அவற்றுக்குக் கட்டளை போடவும் கௌன்டிக்கு "அதிகாரம்" இருப்பதாகவும், கிராமங்கள் மீது "டவுன்ஷிப்பு"க்கு "அதிகாரம்" இருப்பதாகவும் நினைப்பது தவறாகும். அதாவது கிராமத்திலுள்ளவர்களுக்கு டவுன்ஷிப் சர்க்கார் சில சேவைகள் செய்கிறது என்று சொல்ல வேண்டுமே யொழிய, கிராமங்கள் மீது டவுன்ஷிப்புக்கு "அதிகாரம்" இருப்பதாகக் கருதுவது தவறு. அது போலவே டவுன்ஷிப்பிலுள்ள ஜனங்களுக்குக் கௌன்டி சர்க்கார் சில சேவைகள் செய்கிறது.

"கௌன்டி சர்க்காரின்" பொறுப்புக்கள்

மாண்ட்கோமரி கௌன்டி சர்க்கார், கௌன்டியிலுள்ள ஜனங்களுக்கும், சுயாட்சி ஸ்தாபனங்களுக்கும் செய்யும் சேவைகள் :—

(1) கௌன்டியிலுள்ள எல்லாச் சர்க்கார்களுக்காகவும் வரி வசூல் நடத்துவது.

(2) மாகாண சர்க்காரின் சார்பில், மாகாணச் சட்டங்களை அமல் நடத்தி நீதி பரிபாலனம் செய்வது; சிறைச்சாலைகள் வைத்து நடத்துவது; சில போலீஸ் வேலைகள்.

(3) ரோடுகள் அமைத்துப் பராமரிப்பது.

(4) ஏழைகள் அனாதைகளுக்கு உதவி; ஆஸ்பத்திரிகள், முதலியன.

(5) நகரத்தின் சுற்றுவட்டாரப் பிரதேசத்தில் குடி தண்ணீர் வசதி, சாக்கடை வசதி.

(6) விவசாயத்திற்கு உதவி.

(7) கோர்ட்டுகளுக்கு வேண்டிய வசதிகள்.

மேலே விவரித்ததில் கல்வி, ஆரோக்கிய சேவைகள், வாசக சாலைகள் மூன்றையும் காணவில்லையே என்று சிலர் நினைக்கலாம். உண்மைதான். சர்க்காரின் ஏஜெண்டாக மேற்பார்வை வேலையை நடத்துவதும், பணத்தை விநியோகிப்பதும் தான் கௌன்டியின் வேலை. இவ்விஷயத்தில் பிரிட்டிஷ் கௌன்டிக்கும் அமெரிக்க கௌன்டிக்கும் வித்தியாசம் உண்டு.

கௌன்டி முழுவதிலும் கல்வி, ஆரோக்கியம் முதலிய வசதிகளைக் கவனிப்பதற்குச் சுயாட்சி முறைப் படியே தனி ஏற்பாடுகள் இருக்கின்றன. இவற்றைத் தனியாகத்தான் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

கௌன்டி நிர்வாகமும் தேர்தல் முறையும்

கௌன்டி கவுன்ஸில்களை நிறுவுவதில் அமெரிக்காவில் பல முறைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. இந்தியாவில் ஜில்லா போர்ட் என்ற வார்த்தையை உபயோகிப்பது போல, அமெரிக்காவிலும் கௌன்டி சுயாட்சி ஸ்தாபனத்துக்கு "போர்ட்" என்ற வார்த்தையையே உபயோகிக்கிறார்கள். ஆனால் இந்த வார்த்தை விஷயத்தில் மட்டும்தான் இந்திய ஜில்லா போர்டுக்கும் அமெரிக்க கௌன்டி போர்டுக்கும் ஒற்றுமை! மற்றெல்லா அம்சங்களிலும் கௌன்டி போர்டின் அமைப்பு முறை (அதாவது தேர்ந்தெடுக்கும் முறையும் நிர்வாகப் பொறுப்பின் வினியோகமும்) முற்றிலும் மாறுபட்டது.

அமைப்பு முறையில் இங்கிலாந்திலுள்ள கௌன்டி கவுன்ஸிலும் சென்னை மாகாணத்திலுள்ள ஜில்லா போர்டும் ஒன்றுபோல் இருக்கின்றன. இங்கிலாந்தில் கௌன்டி கவுன்ஸில் முறையிலுள்ள அம்சங்கள் என்ன என்பதை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(1) கவுன்ஸில் அங்கத்தினர்கள் வோட்டர்களால் தொகுதி வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதாவது ஒவ்வொரு அங்கத்தினரும் வெவ்வேறு தொகுதியிலுள்ள வோட்டர்களின் பிரதிநிதி. கௌன்டி முழுதிலுமுள்ள எல்லோருக்கும் பிரதிநிதியென்று எந்தத் தனி அங்கத்தினரும் சொல்லிக்கொள்ள முடியாது. (2) கவுன்ஸிலின் தலைவரும், கௌன்டி


முழுதிலுமுள்ள வோட்டர்களால் நேர்முகமாக் ஒரே தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்ல. (3) எந்த அங்கத்தினரும் ஒரு குறிப்பிட்ட "உத்தியோகத்துக்கு" என்று தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இது பிரிட்டனிலுள்ள அமைப்பு.

இம் மூன்று விஷயங்களிலும் அமெரிக்காவில் ஒவ்வொரு மாகாணத்தில் ஒவ்வொரு முறை இருக்கிறது. இந்த முறைகளைப் பொதுப்படையாக வர்ணிப்பதற்கு முன்னதாக ஒரு கௌன்டியை எடுத்துக்கொண்டு அதில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

"கமிஷனர்" போர்ட் முறை

உதாரணமாக மாண்ட்கோமரி கௌன்டியையே எடுத்துக் கொள்வோம். அங்கு கௌன்டியிலுள்ள எல்லா வோட்டர்களுமாக 3 பேரைக் "கௌன்டி கமிஷனர் போர்ட்" மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இவர்கள் தவிர இன்னும் 15 பேர் குறிப்பிட்ட பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். (அதைப் படத்தில் காட்டியிருக்கிறோம்.)



தேர்ந்தெடுக்கப்பட்ட 18 பேர்களில் சிலர் நீதிபதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனங்கள் முன், தேர்தலுக்கு நின்று அவர்களது வோட்டைப்

பெற்றுத் தான் நீதிபதிகள் பதவிக்கு வர வேண்டும் என்பது இந்தியாவிலுள்ள நமக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அமெரிக்காவில் இது மிகவும் சகஜம். அதனால்தான் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவர்கள் ஜாப்தாவில் நீதிபதிகளும் இருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்படும் மற்ற உத்தியோகஸ்தர்களில் "காரனர்" என்பவர், (விபத்து கொலை சம்பந்தமான பிரேத விசாரணை அதிகாரி) ரிஜிஸ்டிரார் கூட இங்கு தேர்தல் மூலமே வருகிறார்.

தேர்ந்தெடுக்கப்படும் 15 உத்தியோகஸ்தர்களில் 8 பேர் நீதி பரிபாலன கோர்ட்டுகளைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ளவர்களில் 3 பேர் போலீஸ் இலாகா சார்பிலும் நீதி பரிபாலன இலாகா சார்பிலும் சில வேலைகளுக்குப் பொறுப்பானவர்கள். 4 பேர்தான் கமிஷன் போர்டின் சாதாரண நிர்வாக வேலையுடன் தொடர்புள்ளவர்கள்.

குறிப்பிட்ட உத்தியோகத்துக்கு என்று இல்லாமல் ஸ்தல ஸ்தாபனத்தின் பொது நிர்வாகக் கொள்கையை நிர்ணயிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 3 பேர்தான். இவர்கள்தான் பொது நிர்வாகத்துக்குப் பொறுப்பாளிகள். இந்த மூன்று பேரும் கொண்டது 'கமிஷனர் போர்ட்.'

வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் தவிர, கோர்ட்டுகளாலும், கமிஷனர்களாலும் "நியமனம் செய்யப்படும்" அதிகாரிகள் வேறு இருக்கிறார்கள். 'ஸோல்ஜர்கள் கஷ்ட நிவாரணக் கமிஷனும்' 'ரிமாண்ட் சிறைச்சாலை மேற்பார்வையாளரும்' ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கோர்ட்டினால் நியமனம் செய்யப்படுகிறார்கள். "ஏழைகள் கஷ்ட நிவாரண டைரக்டர்" "ஏழைகள் சாவடி மேற்பார்வையாளர்" "க்ஷயரோக ஆஸ்பத்திரி தர்மகர்த்தர்க்கள்" சிறுவர்

சீர்திருத்த விடுதி சுக்ர்தர்ர எஞ்சினியர் ஆகியேர்ர் கமிஷனர்—போர்டினுல் நியமனம் செய்யப்படுகிருர்கள்.

நியமனம் செய்யப்படும் உத்தியோகஸ்தர்களும் நிரந்தர அதிகாரிகளல்ல. மறு தேர்தல் வந்தவுடன் இந்த "நியமனப் பதவியிலுள்ளவர்கள்" உத்தியோக காலமும் தீர்ந்துவிடும்.

இதுதான் மாண்ட்கோமரி கௌன்டி சர்க்காரின் அமைப்பு.

இதிலுள்ள பெரிய குறைபாடு

இம்மாதிரியான அமைப்பு, சிறிதும் விரும்பத்தக்கதல்ல.

நீதிபதிகள் 8 பேரை நீக்கிவிட்டால் மீதமுள்ள 7 உத்தியோகஸ்தர்களும் இந்தப் போர்டின் கொள்கைப்படி நடப்பவர்கள் என்று சொல்லலாம். ஆனுல் இந்த 7 உத்தியோகஸ்தர்களும் ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாகையால் இவர்கள் மீது கமிஷனர் போர்டுக்குப் பிரமாதமான செல்வாக்கோ அதிகாரமோ கிடையாது. ஆகையால் இவர்களது நிர்வாகம் பரஸ்பரம் தொடர்பில்லாமல் போகிறது.

ஒரு ஸ்தாபனம் சரியாக நிர்வகிக்கப்பட வேண்டுமானுல் (1) தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லோரும் நிர்வாகக் கொள்கையை நிர்ணயிப்பதில் கலந்து கொள்ள வேண்டும். (2) நிர்வாகம் முழுதுக்கும் பொறுப்பாக (அதாவது சில இலாக்காக்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா இலாக்காக்களுக்கும் பொறுப்பாக)யாரேனும் இருக்கவேண்டும். இந்த இரண்டு அம்சமும் மாண்ட்கோமரி கௌன்டியில் இல்லை.

"அப்படியிருந்தும் நிர்வாகம் எப்படியோ நடக்கிறதே! அது எவ்வாறு சாத்தியமாகிறது?" என்று நாம் ஆச்சரியப்படலாம். ஏதோ ஒருவிதமாகக் காரியங்கள் நடந்தேறுகின்றனவென்றால் அதற்குச் சில காரணங்கள் உண்டு. (1) கௌன்டி முழுவதும் ஒரே தேர்தல் தொகுதியாக மதிக்கப்படுவதால்—அதில் டேய்ட்டன் நகரிலுள்ளவர்களின் வோட்டே முக்கியமானதால்—ஒவ்வொரு உத்தியோகத்துக்கும் அனுபவமுள்ளவர்கள் ஏராளமாகப் போட்டியிடக் கூடியவாறு சரியான ஆசாமிகள் போதிய தொகையில் இருப்பதால், அந்த 15 உத்தியோகங்களுக்கும் சுமாராக யோக்கியப் பொறுப்புள்ளவர்கள் டேய்ட்டன் நகரிலேயே கிடைக்கிறார்கள். இவர்கள் தொழில் நுணுக்கம் பற்றிய நிபுணர்களாக இல்லாதது ஒரு குறைதான். ஆனால் இவர்கள் போதிய "பொது அறிவு" படைத்தவர்களாக இருக்கிறார்கள். (2) இந்த உத்தியோகஸ்தர்களிடம் விடப்படும் விஷயங்கள் பிரமாதமான கொள்கை வேற்றுமைக்கு இடம் தரக்கூடியவையல்ல. (3) பண விநியோகம் சம்பந்தமாகவும், கடமைகள் சம்பந்தமாகவும் மாகாண சர்க்கார் சட்ட திட்டங்கள் போட்டிருக்கிறது. ஆகையால் அதிகாரத்தை விரிவுபடுத்திக்கொள்ளவோ, துர்விநியோகம் செய்யவோ வசதி இல்லை. (4) கௌன்டியின் பொறுப்பிலுள்ள பல விஷயங்களில் வரி வசூலிப்பதும், ரோடு போடுவதும், சில சாக்கடைத்திட்டங்களும் தவிர மற்ற வேலைகள் காரியாம்சத்தில் டவுன்ஷிப் சுயாட்சி ஸ்தாபனங்கள், கிராம சுயாட்சி ஸ்தாபனங்கள், நகரசபைகள், "கௌன்டி கல்வி போர்ட்" இவற்றின் மூலமே நிர்வகிக்கப்படுகின்றன. இதனால்தான் கௌன்டி சர்க்காரின் "அமைப்பு" இவ்வளவு அலங்கோலமாக இருந்தும் காரியம் நடந்து விடுகிறது.

இந்த ஸ்தாபனத்தில் நிர்வாகப் பொறுப்புக்கள் பல இருப்பினும், கொள்கையை நிர்ணயிக்கும் பொறுப்பு அதிகமாக இல்லை.

"ஸூபர்வைஸர் போர்ட்" முறை

அமெரிக்காவில் கௌன்டி சர்க்காரில் தற்காலம் முக்கியமான இரண்டுவகையான அமைப்புகள் இருக்கின்றன.

1. 'ஸூபர்வைஸர் போர்டு முறை' 2. 'கமிஷனர் போர்டு முறை.'

மாண்ட்கோமரி போர்டு, இரண்டாவது முறைப்படி, அதாவது 'கமிஷனர் போர்ட்' முறையில், நிறுவப் பட்டிருக்கிறது. இதற்கும் ஸூபர்வைஸர் போர்ட் முறைக்கும் பொதுவான அம்சம் என்ன என்பதையும் வேற்றுமையான அம்சம் என்ன என்பதையும் பார்ப்போம்.

முதலில் ஒற்றுமையான அம்சத்தைக் குறிப்பிடுவோம். இரண்டு முறையிலும் குறிப்பிட்ட உத்தியோகத்துக்கென்று தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பலர் இருப்பார்கள். அதோடு ஒரு போர்டும் இருக்கும். கமிஷனர் முறையில் இந்தப் போர்டுக்கு 'கமிஷனர் போர்ட்' என்று பெயர். ஸூபர்வைஸர் முறையில் இந்தப் போர்டுக்கு 'ஸூபர்வைஸர் போர்ட்' என்று பெயர்.

இரண்டு முறைக்குமுள்ள வேற்றுமை, இந்த உத்தியோகஸ்தர்களும் போர்டும் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதியைப் பற்றியது.

'கமிஷனர் போர்ட்' முறையில் பிரதிநிதிகள் எல்லோரும், கௌன்டி முழுதுக்கும் பிரதிநிதிகள். அதாவது, ஒவ்வொரு அபேக்ஷகரும் கௌன்டி முழுவதிலும் சுற்றி எல்லா இடங்களிலுமுள்ள வோட்டர்களின் தயவை நாடவேண்டும். ஏதேனும் ஒரு நகர் அல்லது டவுன்ஷிப்பிலுள்ள வோட்டர்களைமட்டும் 'நேசித்தால்' போதாது.

'ஸுபர்வைஸர் போர்ட் முறையில்' அப்படியல்ல. ஒவ்வொரு அபேக்ஷகரும் கௌன்டியிலுள்ள ஏதேனும் ஒரு தொகுதியில் மட்டும் வோட்டர்களை அணுக வேண்டும். கௌன்டியிலுள்ள ஒவ்வொரு டவுன்ஷிப்புக்கும் கிராமத்துக்கும் நகரத்துக்கும் கௌன்டி தேர்தலில் உத்தியோகத்திலோ கௌன்டி போர்டிலோ பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

உதாரணமாக மாண்ட்கோமரி போர்டை, ஸுபர்வைஸர் முறையில் அமைத்தால் 14 டவுன்ஷிப், 12 கிராமங்கள், 3 நகரங்கள் ஆக மொத்தம் 29 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும். (இப்போதிருப்பது போல 18 போதாது.)

ஸுபர்வைஸர் முறையைவிடக் கமிஷனர் முறையில் ஏற்படுத்தும் போர்ட் மெம்பர்கள் சற்றுப் பரந்த நோக்கமுடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லலாம். ஆனால் இரண்டு முறையிலும் கொள்கை நிர்ணய அதிகாரம் 3 அல்லது 5 பேர்கொண்ட போர்டினிடம்தான். இரண்டு முறையிலும் ஏராளமான உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது ஒரு பெரிய குறை என்றே மதிக்கப்படுகிறது. ஆகையால் 'கௌன்டி மானேஜர்' என்ற ஒரு முறையைப் பலர் சிபார்சு செய்கிறார்கள்.

இந்த 'மானேஜர் முறை' இப்போது பல நகர சபைகளில் இருக்கிறது. கௌன்டிகளில் இந்தச் சீர்திருத்தம் இன்னும் ஏற்படவில்லை. கமிஷன் முறை தான் பெரும்பாலான கௌன்டிகளில் காணப்படுகிறது.

டவுன்ஷிப், நகரசபை, கிராமசபை அமைப்புக்களைக் கவனிக்கும்போது வேறுசில அமைப்பு முறைகளை நாம் காணமுடியும். மாண்ட்கோமரி கௌன்டியிலுள்ள டவுன்ஷிப்புகளும் கிராமங்களும் எப்படி அமைக்கப்படுகின்றன என்பதை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

டவுன்ஷிப்பும் கிராம சுயாட்சியும்

அமெரிக்காவில் பல மாகாணங்களில் ஒவ்வொரு கௌன்டியும் பல "டவுன்ஷிப்"புகள் கொண்டது. இந்திய "ஜில்லா"க்களைக் "கௌன்டி" யுடன் ஒப்பிட்டால் டவுனஷிப் என்பது தாலுகாவுக்குச் சமம். ஆனால் மாண்ட்கோமரி கௌன்டியின் ஜனத்தொகை சென்னை மாகாணத்தில் ஒரு தாலுகாவுக்குத் தான் சமமாகும். விஸ்தீரணமும் அவ்வளவு தான். அக் காரணங் கொண்டு, கௌன்டி போர்டுகளைத் தாலுகா போர்டு என்று வைத்துக் கொண்டால், டவுன்ஷிப்பைப் "பிர்க்கா" என்றுதான் பாவிக்கவேண்டும். மாண்ட்கோமரி கௌன்டியில் 14 டவுன்ஷிப்புகள் இருக்கின்றன. டவுன்ஷிப்பின் சராசரி விஸ்தீரணம் சுமார் 36சதுரமைல்.

"டவுன்ஷிப்" சுயாட்சி ஸ்தாபனத்துக்குப் பெரிய நகரங்களில் எவ்வித வேலையோ, பொறுப்போ, அதிகாரமோ கிடையாது. ஆனால் கிராமங்கள் மீது சிறிது அதிகாரம் உண்டு; அதாவது கிராமங்களுக்கு "டவுன்ஷிப்" ஸ்தாபனம் சில சேவைகள் புரிகிறது. சில "டவுன்ஷிப்"களில் கிராமமே இருக்காது. சிலவற்றில் ஒன்றிரண்டு கிராமங்கள் இருக்கும். இந்தக் கிராமங்களுக்குச் சுயாட்சி உண்டு. இந்தக் கிராமங்கள் விரும்பினால் "டவுன்ஷிப்" சர்க்காரின் சேவை தமக்குத் தேவையில்லையென்று சொல்ல முடியும். அவ்வாறு கோருவதாயின் மாகாண சர்க்காரிடம் அனுமதி பெற வேண்டும். சில கிராமங்களுக்கும் சிறிய நகரங்களுக்கும் மாகாண சர்க்கார் இவ்வாறு உரிமையளிப்பதுண்டு; இவ்வாறு மாகாண சர்க்கார் உரிமையளித்த பிறகும்

"டவுன்ஷிப்"புக்கு உட்பட்டு, டவுன்ஷிப் சர்க்கார் வரி வசூலிப்பதற்கு அந்தக் கிராமங்கள் உட்படுவதுமுண்டு.

டவுன்ஷிப்பும் அதிலுள்ள கிராமங்களும்*

இந்த எல்லா வகைகளுக்கும் மாண்ட்கோமரி கௌன்டியில் உதாரணங்கள் காணலாம் :— (1) அந்த கௌன்டியில் 14 டவுன்ஷிப்புகள் இருப்பதில் வெயின் என்ற டவுன்ஷிப்பில் நகரமும் கிடையாது; கிராமமும் கிடையாது. அந்த டவுன்ஷிப்பிலுள்ள ஜனங்கள் டவுன்ஷிப் வரியும் கௌன்டி வரியும் மட்டுமே செலுத்துகிறார்கள். (2) வான் ப்யூரன், ஹாரிஸன், மாட்ரிவர் என்ற மூன்று டவுன்ஷிப்பைச் சேர வேண்டிய சில பகுதிகளில் டேய்ட்டன் நகரமும் ஓக்வுட் நகரமும் ஏற்பட்டன. (இந்த மூன்று டவுன்ஷிப்புக்கும் இந்த நகரில் எவ்வித பொறுப்போ வரி வசூல் உரிமையோ கிடையாது.) நகரம் போக மீதியுள்ள நிலப் பரப்புக்குள் ஹாரிஸன் டவுன்ஷிப்பிலும் வான்ப்யூரன் டவுன்ஷிப்பிலும் கிராமமே கிடையாது. மாட்ரிவர் டவுன்ஷிப்பில் ஒரு கிராமம் இருக்கிறது. (3) அடுத்தபடியாக மியாமி என்ற டவுன்ஷிப்பை எடுத்துக் கொண்டால் அதில் மியாமிஸ்பர்க் என்ற நகரமும் "வெஸ்ட் காரல்டன்" என்ற ஒரு கிராமமும் இருக்கின்றன. மியாமிஸ்பர்க் நகரம் டவுன்ஷிப்புடன் வரித்தொடர்பு இல்லாமல் அறுத்துக் கொள்ள உரிமையுண்டு. ஆயினும் அந்த நகரம் டவுன்ஷிப்புக்கு வரி செலுத்தி டவுன்ஷிப்பின் பகுதியாகவே இருந்து வருகிறது.

இப்போது "டவுன்ஷிப்"பின் சுயாட்சி அமைப்பையும் பொறுப்புக்களையும் கவனிப்போம். அதாவது

* 76-வது பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்க.

அதன் தேர்தல் முறை, நிர்வாக முறை, பொறுப்பு ஆகியவற்றைக் கவனிப்போம்.

டவுன்ஷிப் சர்க்காரின் அமைப்பு

ஒவ்வொரு டவுன்ஷிப்பிலும் மூன்று அங்கத்தினர் கொண்ட "டிரஸ்டிகள் போர்டு" ஒன்று ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதோடு ஒரு காரியதரிசி, ஒன்றிரண்டு மாஜிஸ்ட்ரேட்டுகள், ஒன்று அல்லது இரண்டு போலீஸ் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

டவுன்ஷிப்பின் முக்கியமான வேலை, ரோடுகளைப் பராமரிப்பதுதான். இந்தப் பொறுப்பை "டிரஸ்டிகள் போர்ட்" கவனித்துக் கொள்கிறது. சில டவுன்ஷிப்பு களில் டவுன்ஷிப் பிரதேசத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியை ஒவ்வொரு டிரஸ்டி கவனித்துக் கொள்வார்.

ரோடுகளைக் கவனித்துக் கொள்வதில் கௌன்டிக்கு முக்கிய பொறுப்பு இருப்பதால் கௌன்டிக்கும் டவுன்ஷிப்புக்கு மிடையே கூட்டுறவு ஏற்பாடுகள் இருக்கின்றன.

டவுன்ஷிப்பின் முக்கியமான வருமானம் சொத்து வரியே. அதோடு கௌன்டியின் பெட்ரோல் வரியில் டவுன்ஷிப்புக்குப் பங்கு தரப்படுகிறது. டவுன்ஷிப் பிரதேசத்தில் தீயணைப்புக்கு நிரந்தரமான தீயணைப்புப் படை கிடையாது. ஆனால் டவுன்ஷிப்பின் ஒவ்வொரு பகுதியிலும் தக்க வயது வந்தவர்கள் தீயணைப்ப வேலைக்குத் தொண்டர்களாகப் பதிவு செய்து கொள் வார்கள். விபத்துக்கள் ஏற்படும்போது இவர்கள்

சேவைக்கு வரவேண்டும்; அவ்வாறு சேவைக்கு வரும் தினங்களில் ஊதியம் உண்டு.

டவுன்ஷிப்பில் போலீஸ் வேலைக்கு இரண்டு அதிகாரிகள் இருப்பதோடு ஆங்காங்கு இரவு காலங்களில் காவல் புரிவதற்குச் சிலர் உண்டு. இவர்களுக்குச் சம்பளம் மிகவும் சொற்பமே.

சிறு தொகைகள் பற்றிய ஸிவில் வியாஜ்யங்களையும் சிறிய கிரிமினல் குற்றங்களையும் விசாரிப்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட மாஜிஸ்டிரேட்டுகளின் வேலை. மாஜிஸ்டிரேட்டுகள் ஸிவில் நீதிபதிகளாகவும் வேலை செய்யவேண்டும்.

சில கௌன்டிகளில் ஏழைகள் கஷ்ட நிவாரணத்துக்காகக் கௌன்டி சர்க்கார் மூலம் செலவிடப்படும் பணத்தை டவுன்ஷிப்புகள் மூலம் வினியோகிப்பார்கள்.

டவுன்ஷிப்புகள் அவசியமா?

மேலே தந்துள்ள விவரங்களிலிருந்து டவுன்ஷிப்புக்களுக்குப் பிரமாதமான பொறுப்புக்களோ அதிகாரங்களோ இல்லையென்பது தெரியவரும். ரோடுகளைப் பராமரிக்கும் வேலை ஒன்று தான் டவுன்ஷிப்பிடம் உள்ள முக்கியமான பொறுப்பு. அதைக் கௌன்டி சர்க்காரே நடத்திவிடலாமே; ஆகையால் டவுன்ஷிப் சர்க்கார் அனாவசியம் என்று பலர் கருதுவது நியாயமே.

இதை இந்தியாவின் நிலைமையுடன் ஒப்பிட்டு டவுன்ஷிப்புக்குச் சமமான "பிர்க்கா ஸ்தல ஸ்தாபனம்" ஒன்று வேண்டுமா வேண்டாமா என்று யோசிப்போம்.

டவுன்ஷிப் வேண்டாம் என்று சொல்வதுபோல இந்தியாவிலும் பிர்க்கா போர்டுகள் அவசியமில்லை

என்றே முடிவு கட்டலாமா? அவ்வாறு முடிவு கட்டுவதற்கு முன்னர் இரண்டு முக்கியமான விஷயங்கள் கவனிக்கத் தக்கவை. (1) மாண்ட்கோமரியிலுள்ள டவுன்ஷிப்புகளின் சராசரி ஜனத்தொகை சுமார் 4500 தான். சென்னை மாகாணத்தில் பல தாலுகாக்களில் அதே போல 36 சதுரமைல் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் ஜனத்தொகை 10,000க்கு மேல் இருக்கும்(2) அமெரிக்காவில் மோட்டார்வசதிகள் பிரமாதமாக இருப்பதால், 36 சதுரமைல் பிரதேசத்தை மூன்று மணிநேரத்தில் சுற்றிப்பார்த்துவிட முடியும்; இந்தியாவில் அது போன்ற மோட்டார் வசதிகள் இல்லை. ஆகையால் 36 சதுர மைல் என்பது அமெரிக்காவில் நினைப்பது போல் அவ்வளவு சிறிய பிரதேசமல்ல. அமெரிக்க உதாரணங்களை நாம் கவனிக்கும்போது, வேகமான போக்குவரத்து வசதிகள் பற்றிய வித்தியாசத்தை மறந்துவிடக்கூடாது. ஆகையால் இங்கு டவுன்ஷிப்புக்குச் சமமான ஒரு பிரதேசஸ்தாபனம் அவசியமாகலாம். கிராமம் தோறும் கிராமசபை ஏற்படுத்தினாலும் கூட, கிராம எல்லைக்கு வெளியேயுள்ள சில ரோடுகள் ஓடைகள் இவற்றைப் பராமரிப்பதற்கு ஏதேனும் ஏற்பாடு அவசியமாகும். "பிர்க்கா போர்டுகள்" இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும்.

இதுவரையில் "கௌண்டி" அமைப்புக்களையும் "டவுன்ஷிப்" அமைப்புக்களையும் கவனித்தோம். இவ்விரண்டும் "பிரதேச" சர்க்கார்கள்; "ஊர்"களல்ல. ஆகையால் சாக்கடைகள், தெரு வெளிச்சம், ஜலசப்ளை முதலிய பொறுப்புக்கள் இவற்றில் அதிகமாகக் கிடையாது. போலீஸ் பந்தோபஸ்து, தீயணைப்பு ஏற்பாடுகளும் பிரமாதமல்ல. ஏனென்றால் டவுன்ஷிப்

களில் "கிராமங்கள்" நீங்கலாக மீதமுள்ள பிரதேசத்தில் ஜனங்கள் தெருக்களில் வாழாமல், தம்தம் விவசாய நிலங்களின் மத்தியில் மேடான இடத்தில் தனித்தனியாக வீடுகள் அமைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். கிராமங்களில்தான் ஜனங்கள் தெருக்களும் சந்துகளும் அமைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். டவுனஷிப்புகள் பெரும்பாலும் விவசாயக் குடியிருப்புகளின் தேவைகளையே பூர்த்தி செய்கின்றன. விவசாய மாகூலை மார்க்கெட்டுக்குக் கொண்டு போவதற்கான ரோடுகள்தான் இவர்களின் அன்றாடத்தேவை. கல்விக்கும், ஆரோக்கிய வசதிகளுக்கும் வேறு ஏற்பாடுகள் இருப்பதால் "டவுன்ஷிப் சர்க்காருக்கு" அதிக வேலையில்லை.

கிராமங்களுக்கோவென்றால் சுகாதாரத் தேவைகள் உண்டு. அதற்குக் கிராமங்களில் எப்படிப்பட்ட சுயாட்சி அமைப்பு இருக்கிறது என்பதை இப்போது கவனிப்போம்.

கிராம சர்க்கார் அமைப்பு

மான்ட்கோமரி கௌன்டியில் சாதாரணமாக் கிராம சுயாட்சி ஒரு கிராம கவுன்ஸில் மூலம் நடக்கிறது.


76-வது பக்கத்திலுள்ள படத்தில் அந்த கௌன்டியிலுள்ள கிராமங்கள் இலக்கமிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன.

(1) பிலிப்ஸ்பர்க் (2) ப்ருக்வில் (3) நியூலெபனன் (4) பார்மர்ஸ்வில் (5) யூனியன் (6) எங்கல்வுட் (7) ட்ராட்வுட் (8) வெஸ்ட்காரல்டன் (9) ஜெர்மன் டவுன் (10) ஸென்டர்வில் (11) ரிவர்ஸைட் (12) வான்டலர்.

ஒவ்வொரு கிராமமும்,

* ஒரு காரியதரிசி,
* ஒரு பொக்கிஷதார்,
* ஒரு போலீஸ் அதிகாரி,
* ஜல சப்ளை, சாக்கடைகளைக் கவனிக்கச் சில டிரஸ்டிகள்

ஆகிய அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கிறது.



அதோடு கிராமத்தின் பொது நிர்வாகத்துக்காக,

* 6 பேர் கொண்ட ஒரு கிராம கவுன்ஸிலையும்,
* ஒரு மேயரையும்

தேர்ந்தெடுக்கிறது. மேயர்தான் நிர்வாகத்தை நடத்துபவர். கவுன்ஸிலர்கள் அவருக்கு யோசனை கூறிக் கொள்கையை நிர்ணயிப்பவர்கள். இது கிட்டத்தட்டப் பிரிட்டிஷ் "பரோ" க்களிலுள்ள முறையைத் தழுவியதே. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். பிரிட்டிஷ் பரோக்களில் மேயர், வோட்டர்களால் நேரில் தேர்ந்தெடுக்கப் படாமல் கவுன்ஸிலர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

ஒவ்வொரு கிராமத்திலும் தீயணைப்பு அதிகாரியையும் தெருக்களுக்கு மேற்பார்வை யதிகாரியையும் மேயர் நியமனம் செய்கிறார். கவுன்ஸிலர்கள் கவுன்ஸிலுக்கு ஒரு சட்ட நிபுணரை நியமனம் செய்கின்றனர்.

இதுதான் கிராம சுயாட்சி ஸ்தாபனத்தின் அமைப்பு. இந்தக் கிராமங்களின் ஜனத்தொகையைக் கவனித்தால்,

> ப்ருக்வில் (1403); ஜெர்மன் டவுன் (2029); வெஸ்ட்காரோல் டவுன் (2021); ஸென்டர்வில் (400); எங்கில்வுட் (415); பார்மர்ஸ்வில் (446); நியூலெபனன் (509); பிலிப்ஸ்பர்க் (436); ரிவர்ஸைட் (224); ட்ராட்வுட் (660); யூனியன் (263); வான்டலியா (331);

அதாவது 224 பேருள்ள ஒரு கிராமத்தில்கூட கிராம சுயாட்சி இருக்கிறது.

இதைப் பார்க்கும்போது "நம் நாட்டில் எல்லாக் கிராமத்துக்குமே கிராம சுயாட்சி ஸ்தாபனம் ஏற்படுத்தலாமே! எவ்வளவு சிறிய கிராமமாயிருந்தாலும் இங்கு ஜனத்தொகை 224 நிச்சயமாக இருக்குமே" என்று சிலர் நினைக்கக் கூடும்.

ஆனால் அவ்வளவு எளிதில் நாம் உவமை குறிப்பிட்டு முடிவுகட்டக் கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு பணம் செலவிடப்படுகிறது; எவ்வளவு வசதிகள் இருக்கின்றன; கிராம சேவையில் ஊழியர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறது; என்பவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும். கிராம சுயாட்சிதான் இப்போது நம் நாட்டில் ஸ்தல ஸ்தாபன அமைப்பில் முக்கிய பிரச்னையாக மதிக்கப்படுகிறது. ஆகையால் அமெரிக்கக் கிராமங்களின் நிலையைச் சற்று விரிவாக ஆராய்ச்சி செய்வது அவசியம். அதை இனிக் கவனிப்போம்.

கிராம ஆட்சியும் பண வசதியும்

அமெரிக்காவில் மிகவும் சிறிய கிராமங்களில் கூட, சுயாட்சி ஸ்தாபனங்கள் இருக்கின்றனவென்று முன்பு கூறினோம். அதாவது சுமார் 300 பேர் கூட இல்லாத கிராமத்திலும் கிராம சுயாட்சி ஸ்தாபனம் இருக்கிறது. ஆகையால் இந்தியாவிலும் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம சுயாட்சி இருக்கலாமென்று சிலர் நினைக்க முடியும்.

ஆனால் இன்றுள்ள நிலைமையில் கிராமங்களின் தேவை என்ன? அந்தத் தேவைகளை ஒவ்வொரு கிராமமும் தனித்தனியாகப் பூர்த்திசெய்து கொள்வதற்கு வேண்டிய பண வசதி, இந் நாட்டுக் கிராமங்களில் இருக்கிறதா என்பதைக் கவனிப்பது அவசியம்.

ஆகையால் மாண்ட்கோமரி கௌன்டியிலுள்ள கிராமங்களில், கிராம சுயாட்சி மூலம் என்னென்ன வசதிகள் அளிக்கப்படுகின்றன; அதற்கு எவ்வளவு செலவாகிறது என்ற விஷயங்களைப் பார்ப்போம். அந்தக் கௌன்டியிலுள்ள 12 கிராமங்களில் ஜனத்தொகை 224 முதல் 2029 வரை இருக்கிறது. சிலவற்றில் குடிதண்ணீர்க் குழாய் வசதி, தரைக்கடியில் போகும் சாக்கடைகள், மின்சார வசதி, இவையாவும் இருக்கின்றன. சில கிராமங்களில் மின்சாரம் இருக்கிறது; ஆனால் குடிதண்ணீர்க் குழாய் வசதி இல்லை. சில கிராமங்களில் குடிதண்ணீர்க் குழாய் வசதி இருக்கிறது; ஆனால் மின்சாரம் இல்லை.

"கட்டாய சுயாட்சி" இல்லை

இவ்வாறு பலவகையாக இருக்கிறது. "எல்லாக் கிராமங்களிலும் எல்லா வசதிகளும் இருக்க வேண்டும்

என்ற நிர்ப்பந்தம் கிடையாது. ஒரு கிராமத்தார் எவ்வளவு பணம் செலவிடத் தயாராயிருக்கிறார்களோ அதற்குத் தகுந்தபடி வசதி செய்து கொள்ளலாம். அவ்வாறு பணம் செலவிடத் தயாராயில்லாதவர்கள், கிராம சுயாட்சியே இல்லாமலும் இருக்கலாம். உதாரணமாக அலெக்ஸாண்டர் என்ற ஒரு கிராமம் இப்போது கிராம சுயாட்சி இல்லாமல் இருக்கிறது; அது தன்னை வெஸ்ட் காரல்டன் கிராமத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கோருகிறது. மற்றொரு புறத்தில் ஜெர்மன் டவுன் கிராம சபை அந்தக் கிராமத்தில் சில பகுதிகளுக்குச் சில வசதிகள் செய்து கொடுக்க முடியவில்லை; அந்தப் பகுதியிலுள்ளவர்கள் ஜெர்மன் டவுனிலிருந்து பிரிந்து கிராம சுயாட்சியே இல்லாமல் வாழ விரும்புகிறார்கள்.

ஆகையால் கிராமந் தோறும் கிராம சுயாட்சி இருந்தே தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது.

வரிச்சுமை

இந்தக் கிராம சுயாட்சி ஸ்தாபனங்களின் பண நிலைமையையும் ஜனங்களின் வரிச் சுமையையும் பார்ப்போம். ஸென்டர்வில் என்ற கிராமத்தில் ஜனத்தொகை 1930-ம் வருஷத்தில் சுமார் 400 பேர். இப்போது ஜனத்தொகை 500 இருக்கலாம். அந்தக் கிராமத்தில் சுமார் 14,000 டாலர் (46,000 ரூபாய்) செலவிட்டு, சென்னை நகரில் இருப்பதுபோல, குடி தண்ணீர்க் குழாய்த் திட்டம் வைத்துக் கொள்ளவும், அதற்கான வரியைக் கொடுக்கவும் ஜனங்கள் தயாராயிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் கிராம சுயாட்சிச் செலவுகளுக்காக நபர் 1-க்கு 49 டாலர் (வருஷம் 1-க்கு சுமார் 160 ரூபாய்) வரி

செலுத்த ஜனங்கள் தயாராயிருக்கிறார்கள். நபர் 1-க்கு 160 ரூபாய் என்றால் வீடு ஒன்றுக்கு சுமார் 600 ரூபாய் ஆகும்!

அவ்வாறு இந்தியாவிலுள்ள குக்கிராமங்கள் பணம் செலவிடத் தயாராயிருக்குமா? இருக்காது.

வாழ்க்கைத்தரமும் மக்களின் மனப்பான்மையும்

அமெரிக்கருடைய வாழ்க்கைத் தரம் மிகவும் உயர்ந்த நிலையிலிருப்பதால் ஒவ்வொரு கிராமத்திலும், ஜனங்கள் தமது செலவில் இம்மாதிரியான வசதிகளைச் செய்துகொள்ள முடிகிறது. சில கிராமங்களில், கவுன்ஸிலர்கள், மேயர், காரியதரிசி முதலியவர்களுக்காக வருஷம் 2700 டாலர் செலவாகிறது. சில கிராமங்களில் இதே பதவிகளுக்கு 200 டாலர் தான் கொடுக்கிறார்கள். இந்தியாவில் ஒரு கிராமத்தில் கிராமக் காரியதரிசிக்கு 2000 ரூபாயும் மற்றொரு கிராமத்தில் 200 ரூபாயும் கொடுப்பது என்பது சாத்தியமல்ல. தம் கிராமம் சிறிய கிராமம் என்பதற்காகக் குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய, இந்நாட்டில் இப்போதுள்ள சூழ்நிலையில் நபர்கள் கிடைப்பது அரிது. உதாரணமாக மத்ய சர்க்கார் என்ன சம்பளம் கொடுக்கிறதோ அதே சம்பளம் மாகாண சர்க்காரின் சிப்பந்திகளும் கேட்கிறார்கள். மாகாண சர்க்கார் கொடுப்பது போன்ற சம்பளமே தமக்கும் வேண்டுமென்று நகர சபை சிப்பந்திகள் கேட்கிறார்கள். ஆனால் உண்மையான ஸ்தல சுயாட்சி மனப்பான்மைக்கு இந்த மனப்பான்மை பெரிய இடையூறாகும். மாண்ட்கோமரியில் 1403 பேர் வசிக்கும் ப்ருக்வில்லில் போலீஸ் செலவு 50 டாலர். 2101 பேர் ஜனத்தொகையுள்ள வெஸ்ட்கார்ல்டனில் 1500 டாலர்!

இவ்வாறு கிராமத்துக்குக் கிராமம் ஒரே விதமான சேவைக்கு, செலவில் பன்மடங்கு வேற்றுமை இருக்கிறது.

மொத்தத்தில் அமெரிக்கர்கள் மின்சாரம், தண்ணீர்க் குழாய்கள், தரைக்குள் புதைக்கப்பட்ட சாக்கடைக் குழாய்கள் முதலியவற்றை இன்றியமையாத வசதிகளாகக் கருதுகிறார்கள்; அதற்கான பணச் செலவிற்கும் தயாராயிருக்கிறார்கள்; அதற்கான செல்வமும் அவர்களிடம் இருக்கிறது. அதனால்தான் அவர்கள் சிறு குக்கிராமங்களிலும் இந்த வசதிகளுக்காகக் " கிராம சுயாட்சி " வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குடும்பத்துக்கு வருஷ மொன்றுக்குச் சராசரி வருமானம் சுமார் 1500 டாலர் இருப்பதால் இந்தச் செலவை அவர்கள் தாங்க முடிகிறது.

அங்குகூடப் போலீஸ் முதலிய பல வேலைகளைக் கிராம சுயாட்சியிலிருந்து பிரித்து, கௌன்டியிடமோ சர்க்காரிடமோ ஒப்படைக்கலாம் என்று மாண்ட்கோமரி ஆராய்ச்சிக் கமிஷன் சிபார்சு செய்திருப்பது குறிப்பிடத் தக்கது.

தொழில் வளர்ச்சியுள்ள நாட்டின் ஆடம்பரங்கள்

அமெரிக்காவில் விவசாயம் உட்பட அநேகமாகப் பொருளுற்பத்தி முழுதுமே யந்திரமயமாக இருப்பதால், குடி தண்ணீர் வசதி, சாக்கடை வசதி முதலியனவும் யந்திர மயமாக இருந்து தீரவேண்டியிருக்கிறது. ஆதலால் ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வசதிகளுக்காக ஒரு ஸ்தாபனம் அவசியமாயிருக்கிறது. இந்தியாவிலுள்ள கிராமங்கள் முழுதும் மாட்டு வண்டி நாகரிகமாக இருக்கும்போது, கிராமந்தோறும் குழாய்த் தண்ணீர் வசதிமுதலியன அவசியமில்லை. அவற்றை அமைப்பதும்

அதற்கான பணத்தை ஜனங்கள் வரியாக் கொடுப்பதும் இப்போது சாத்தியமுமல்ல. இந்தியாவில் இம் மாதிரி வசதிகளைச் சில இடங்களில்தான் செய்ய முடியும். அதுவும் பல கிராமங்கள் சேர்ந்துதான் இந்த வசதிகளை அமைத்துக்கொள்ள முடியும்.

ஆகையால் அமெரிக்காவில் கிராம சுயாட்சிச் சர்க்காருக்கு இருப்பதுபோன்ற வேலையெதுவும், இப்போது இந்தியாவிலுள்ள கிராமங்களில் இருக்கமுடியாது.

அமெரிக்காவில் சாக்கடை முதலிய சுகாதார வசதிகள் மட்டும் கிராம சுயாட்சியில் இருக்கின்றனவே தவிர, ஆரோக்கியம் "வைத்திய வசதி" இரண்டும் கௌன்டி சர்க்காரிலேயே இருக்கிறது.

அபிப்பிராயம் மாறி வருகிறது

ஸ்தல ஸ்தாபன அமைப்பைப் பற்றிச் சமீபகாலத்தில் அமெரிக்காவில் அபிப்பிராயம் மாறி வருகிறது. டவுன்ஷிப்புகள் இருந்து வருமானால், 2,000-க்குக் குறைந்த ஜனத்தொகையுள்ள இடங்களில் கிராம சுயாட்சியே கூடாது என்பதுதான் பல ஆராய்ச்சியாளர்களின் கருத்து. பென்ஸில்வேனியா மாகாணத்தில் 500க்குக் குறைந்த ஜனத்தொகையுள்ள இடங்களை தனிச் "சுயாட்சிக் கிராமங்களாக" அங்கீகரிக்கக் கூடாது என்று சட்டமே இயற்றப்பட்டு விட்டது. டவுன்ஷிப் ரத்து செய்யப்பட்டால் மட்டும் 500 பேர் உள்ள ஊர்களைக் "கிராமமாக" மதித்து, சுயாட்சி வழங்கலாம் என்பது சிலரது அபிப்பிராயம்.

ஒஹாயோ மாகாணத்தில் சிறிய ஊர்களுக்குக் கிராம சுயாட்சி ரத்து செய்யப்படாததற்கு முக்கிய காரணம், அங்கு ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊர் 4 அல்லது 5 மைல் தூரம் இருக்கிறது. இவ்வாறு பரஸ்பரம் தூரத்திலுள்ள ஊர்களைச் சேர்ந்தவர்களுக்கு

"தாம் ஒரே கிராமத்தார்" என்ற உணர்ச்சி இருக்காது. இதனால்தான் அங்கு சிறு கிராமங்களையும் தனிக் கிராமங்களாகச் சர்க்கார் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது.

சுயாட்சியைத் திணிப்பதில்லை

அமெரிக்காவில் வேறு மாகாணங்களில் கிராம ஆட்சி நிலைமை எவ்வாறிருக்கிறது என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

நியூயார்க் போன்ற சில மாகாணங்களில் 7,000 அல்லது 8,000 ஜனத்தொகையுள்ள ஊர்கள் கூட "தனிச் சுயாட்சிக் கிராமங்களாக" இல்லை. பல கிராமங்களை ஒன்று சேர்த்துப் "பட்டணம்" என்ற பெயருடன் அந்தக் கிராமங்களுக்கெல்லாம் பொதுவாக ஆங்காங்கு "பட்டண சுயாட்சி" ஏற்படுத்தி யுள்ளார்கள்.

நியூயார்க் மாகாணத்தில் விவசாயமே முக்கியமாக இருக்கும் "சட்டராகஸ்" என்ற ஒரு கௌன்டியை எடுத்துக் கொள்வோம். இதன் மொத்த ஜனத்தொகை சுமார் 73,000. அதில் 21,500 பேர் ஒருபெரிய நகரில் வசிக்கிறார்கள். சுமார் 9,000 பேர் கொண்ட மற்றொரு சிறிய நகரமும் இருக்கிறது. மீதமுள்ள சுமார் 42,000 ஜனத்தொகை 35 ஊர்களாகப் பிரிந்திருக்கிறது. இந்த 35-ல் 10 ஊருக்குத் தான் கிராம சுயாட்சி இருக்கிறது. மற்றவையெல்லாம் சிறு சிறு பிர்க்காக்களாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் மற்றொரு விசேஷம் இருக்கிறது. 600 பேருள்ள ஒரு கிராமத்துக்குக் கிராம சுயாட்சி இருக்கும்; 1,300 பேர் உள்ள ஒரு கிராமத்தில் "கிராம சுயாட்சி" இருக்காது; அதாவது ஓர் ஊரில் கிராம சுயாட்சி இருக்கிறதா இல்லையா என்பது அந்தக் கிராமத்தாரின் விருப்பத்தைப் பொறுத்தது.

சர்க்கார் கட்டாயப்படுத்தி எந்தக் கிராமத்திலும் கிராம சுயாட்சியைப் புகுத்திப் பணம் கெட்டுப்பதாக ஆசை காட்டுவது கிடையாது.

நியூ இங்கிலாந்து

அமெரிக்காவின் வடகிழக்கு மூலையிலுள்ள, நியூ இங்கிலாந்து மாகாணங்களை எடுத்துக் கொண்டால் அங்கு மாகாணம் முழுதும் "டவுன்களாக" பிரிக்கப் பட்டிருக்கிறது. "டவுன் " என்பதைப் "பட்டணம்" என்று மதித்து விடக்கூடாது. பட்டணமும் அதன் சுற்றுவட்டத்திலுள்ள சிறு ஊர்களும் கலந்த ஒரு "பிர்க்கா" என்றுதான் அதை மதிக்க வேண்டும்.

அந்த மாகாணங்களில் "டவுன் சர்க்கார்தான்" முக்கியமான ஸ்தல ஸ்தாபனம். கௌண்டி சர்க்கார்களுக்கு அதிக வேலையே கிடையாது. நீதிமன்றங்களின் நிர்வாகத்துக்கு வசதியளித்து, சில காரியங்களில் மாகாண சர்க்காரின் உத்தரவுகளைப் பட்டணங்களுக்கு அனுப்பிக் கொடுக்கும் தபாலாபீஸ்கள் போலவுமே அவை வேலைசெய்கின்றன.

நியூ இங்கிலாந்திலுள்ள "டவுன் சர்க்கார் அமைப்பு" அமெரிக்க ஜனநாயகத்தில் மிகவும் கியாதி பெற்றது. ஆனால் அங்குள்ள முறையை வேறு மாகாணங்கள் பின்பற்றவில்லை. அந்த முறை இந்தியாவுக்குப் பொருத்தமாக இருக்கக் கூடும். ஆகையால் அதைப் பின்னர் சற்று விரிவாக ஆராய்ச்சி செய்வோம்.

அடுத்தபடியாக மீண்டும் மாண்ட்கோமரி கௌன்டிக்கே திரும்புவோம். அங்குள்ள 3 நகரங்களிலும் நகர சபைகள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன என்பதைப் பார்த்தால், "நகர ஆட்சியில்" அமெரிக்காவில் அனுஷ்டிக்கப் படும் பலவிதமான முறைகளுக்கு உதாரணங்கள் கிடைக்கும்.

நகரசபை அமைப்பில் பல முறைகள்

அமெரிக்கக் கிராமப் பிரதேசங்களில் ஸ்தல சுயாட்சி அமைப்புக்கு உதாரணமாக, சில கிராம சுயாட்சி ஸ்தாபனங்களையும், டவுன்ஷிப் சுயாட்சி ஸ்தாபனங்களையும், கௌன்டி சுயாட்சி ஸ்தாபனத்தையும் பற்றி விவரித்தோம்.

இனி, அமெரிக்க நகரங்களில் எம்மாதிரியான சுயாட்சி முறை இருக்கிறது என்பதைக் கவனிப்போம்.

நகர சபைகள் அமைப்பதில் பல முறைகள் அநுஷ்டிக்கப்படுகின்றன.

(1) "மேயர்—கவுன்ஸில்" முறை

(2) "வலிமையுள்ள மேயர்" முறை

(3) கமிஷன் முறை

(4) "கமிஷன்—மானேஜர்" முறை

(5) "கவுன்ஸில்—மானேஜர்" முறை

*　　*　　*　　*

மேயர்-கவுன்ஸில் முறை

மேயர்—கவுன்ஸில் முறைதான் இங்கிலாந்தில் மிகவும் சகஜமான முறை. இதில் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால், அமெரிக்காவில் கவுன்ஸில் மெம்பர்களே ஒரு மேயரைப் பொறுக்குவதற்குப் பதிலாக வோட்டர்களே ஒரு மேயரைப் பொறுக்கி விடுகிறார்கள். மேயர் தான் சபையின் தலைவர். அதிகாரம் சம்பந்தப்பட்டமட்டில்

மேயருக்கு விசேஷமாகத் தனி அதிகாரம் எதுவும் கிடையாது. ஆனால் அந்தஸ்து மட்டும் பெரிது.

"வலிமையுள்ள மேயர்" முறை

அமைப்பில் முன் கூறியதற்கும் இதற்கும் வித்தியாசம் இல்லை. ஆனால் அதிகாரத்தில் வித்தியாசம் உண்டு. பொதுவாகக் கொள்கைகளை நிர்ணயிக்க மட்டுமே கௌன்ஸிலுக்கு அதிகாரம்; நடத்தி வைப்பதில் மேயருக்கு அதிகாரம். கவுன்ஸில் நிறைவேற்றும் தீர்மானத்தைச் சிறிது காலம் அமுலுக்கு வராமல் புனராலோசனை செய்யும்படி கவுன்ஸிலுக்குத் திருப்பியனுப்ப மேயருக்கு அதிகாரம் உண்டு. மறுபடியும் அத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமானல், கவுன்ஸிலில் சாதாரண மெஜாரிட்டி போதாது. 'விசேஷ மெஜாரிட்டி' வேண்டும். அதாவது மூன்றில் இரண்டு பங்கு அல்லது 5-ல் 3 பங்கு மெஜாரிட்டி வேண்டும்.

இவ் விஷயத்தில் அமெரிக்க யு. எஸ். அரசியலில் ஜனதிபதியிடம் நிர்வாக அதிகாரம்; பார்லிமெண்டிடம் சட்டமியற்றும் அதிகாரம்; என்று தனித்தனியாகப் பிரித்து வைத்திருக்கும் முறையை நகரசபையிலும் பின் பற்றுவதாக அர்த்தம்.

மேயர் நிர்வாக அதிகாரி; கவுன்ஸில் சட்டமியற்றும் ஸ்தாபனம். கவுன்ஸில் தலைவர் வேறு; மேயர் வேறு.

போலீஸ் இலாகா சம்பந்தமாகவும், நகரசபையின் சட்டங்களை அமல் நடத்துவதிலும், மேயருக்குச் சிறிது சுதந்திரம் உண்டு. சில விஷயங்களில் கவுன்ஸிலர்கள் தலையிட முடியாது. செலவுத் திட்டங்களில் கவுன்ஸிலர்கள் பட்ஜெட்டைக் குறைக்க முடியுமேயொழியக் கூட்ட முடியாது.

உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் கவுன்ஸிலுக்கு அதிகாரமில்லை. மேயருக்குத்தான் அதிகாரம்.

இந்த முறையைப் பொதுப்படையாக "வலிமையுள்ள மேயர்" முறை என்பார்கள்.

இரண்டிலுமுள்ள குறைகள்

மேலேயுள்ள 2 முறைகளிலும் சில குறைபாடுகள் காணப்பட்டன. (1) கவுன்ஸிலர்கள் பெரும்பாலும் தமக்கு அடுத்த தேர்தலில் எப்படியாவது வெற்றி கிடைக்க வேண்டுமே என்ற ஆவலில் பொது நலனுக்கு முரணாகச் சில தனி நலங்களை ஆதரிப்பதும், தமக்கு வேண்டியவர்களுக்கு வேலை கொடுப்பதும் பொதுப் பணத்தைக் கண்ட்ராக்டுகளில் விரயம் செய்வதும் சகஜமாய்விட்டது. (2) கொள்கை நிர்ணயிக்கும் உரிமையைக் கவுன்ஸிலிடமும், நிர்வாக உரிமையை மேயரிடமும் ஒப்படைத்ததில் சில சமயங்களில் மேயரின் பிரேரணைக்குக் கவுன்ஸிலர்கள் முட்டுக்கட்டை போடலாயினர். மேயர்கள் சிபார்சு செய்யும் சட்ட திட்டங்களைக் கவுன்ஸிலர்கள் நிராகரிப்பதுமுண்டு. இம் மாதிரியாக நிர்வாகம் தேக்கமுற்றுப் போவது சகஜமாக இருந்தது. மேயர்கள் மெஜாரிட்டிக் கட்சியால் பொறுக்கப்படாமல் ஜனங்களால் நேரில் பொறுக்கப்படும்போது, மேயரின் கட்சிக்குக் கவுன்ஸிலில் மெஜாரிட்டி இருப்பதில்லை. இது முட்டுக்கட்டைக்கு ஒரு காரணம் (3) ஒரு சில மேயர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகளாக தலைமைப் பதவிக்கு வேண்டிய அறிவு, துணிவு, தொண்டு செய்யும் ஆர்வம், தைரியம் முதலியவற்றுடன் சில நகரங்களில் பெரிய முன்னேற்றங்கள் செய்திருக்கிறார்கள். முட்டுக்கட்டையையும் கவுன்ஸிலர்களின் மந்த புத்தியையும் அலக்ஷியம் செய்து இவர்கள் காரியம் செய்ய முடிந்தது. ஆனால் இவர்களது தொகை அதிகமில்லை. சாதாரண

மாக ஸ்தலஸ்தாபன நிர்வாகம் சற்றுச் சீர்குலைந்து ஊழல் நிறைந்தே இருந்தது. ஊழல் இல்லாவிட்டாலும், திறமைக் குறைவு நிச்சயமாக இருந்தது.

யந்திர முன்னேற்றம் ஏற்பட்ட பிறகு ரஸ்தாக்கள் போடுவது, பாலங்கட்டுவது, கட்டிடங்கள் கட்டுவது, இதிலெல்லாம் புது முறைகள் ஏற்பட்டன. நன்கு கண் காணிப்பதற்குள்ள திறமை கவுன்ஸிலர்களிடம் இருந்தா லொழிய, கண்ட்ராக்டர்கள் நகர சபையின் பணத்தை ஏராளமாகச் சாப்பிட்டுவிட முடியும். இவ்வாறு நடக் காமல் பாதுகாப்பதற்குள்ள திறமையைக் கவுன்ஸிலர் களிடம் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் அவர்கள் தம்மைத் தேர்ந்தெடுத்த வார்டுகளுக்கு ஏதேனும் சில வசதிகளை ஏற்படுத்துவதில்தான் கவனம் செலுத்தினர். அவர்களுக்கு நிர்வாக ரகசியங்களும் வர்த்தக நுட்பங் களும் தெரியாது. இவ்வளவும் போதாதென்று கவுன் ஸிலர்கள், தம் திறமைக்காகத் தேர்ந்தெடுக்கப் படாமல் அரசியல் கட்சி மனப்பான்மையின் பேரால் தேர்தலில் வெற்றிபெற்றனர்.

இவ்வாறு பலவித சீர்குலைவுகள் இருந்ததால் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பழைய முறைக்குப் பதிலாக வேறு என்ன செய்யலாமென்று பலர் ஆராய்ச்சி செய்தனர். இரண்டு புது முறைகள் சிபார்சு செய்யப்பட்டன.

"கமிஷனர்கள்" முறை

அவற்றுள் முதல் முதலாகப் பரவ ஆரம்பித்தது கமிஷன் முறை அல்லது "கமிஷனர்கள் முறை" என்று சொல்லலாம். (இதை இந்திய நகரசபை கமிஷ னர்கள் பதவியைப் போன்றதென்று நினைப்பது தவறு கும். அமெரிக்கா விஷயமாக இங்கு குறிப்பிடும் கமிஷ னர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள்,

நாம் இங்கு கமிஷனர் என்று சொல்லும் உத்தியோகத்துக்கு அமெரிக்காவில் "மானேஜர்" என்று பெயர்.)

கமிஷன் முறை முதல் முதலாகக் கியாதிபெற்ற வரலாறு மிகவும் ருசிகரமானது. டெக்ஸாஸ் என்ற ஒரு அமெரிக்க மாகாணத்தில் கால்வெஸ்டன் என்று ஒரு நகரம். அதன் நகரசபை மிகவும் கடன்பட்டுக் கிடந்தது. அந்த நிலைமையில் திடீரென்று 1900-ம் ஆண்டில் ஒரு கடும் புயலும் மழையும் அடித்து ஏராளமான உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன. பல கட்டிடங்கள் தகர்ந்தன. குடிதண்ணீர்க் குழாயும், சாக்கடைக் குழாயும் சிதைந்து போயின.

அப்போது நிலைமையைச் சமாளிப்பதற்காக டெக்ஸாஸ் மாகாண சட்டசபை, அந்த நகர சபையை மாற்றியமைக்க அனுமதிகொடுத்தது. நகரத்தினர் கூடி, நகரத்தில் வர்த்தகம், கைத்தொழில் ஆகிய துறைகளில் நல்ல நிர்வாக அனுபவம் பெற்றவர்களாக 5 பேரைப் பொறுக்கி ஒரு "கமிஷன்" நியமித்தார்கள்.

கொள்கையை நிர்ணயிப்பது, அதாவது நகருக்குச் சட்டம் இயற்றுவது, அதை நிர்வகிப்பது ஆகிய இரண்டு அதிகாரமும் இந்தக்கமிஷனிடம் விடப்பட்டது.

இந்தக் "கமிஷன்" மிகவும் திறமையாக வேலை செய்து நெருக்கடியைச் சமாளித்து நகரசபையின் கடன்களையும் தீர்த்துப் பல முன்னேற்றங்களையும் செய்தது.

இவ்வாறு இந்த முறை பயனளித்ததைக் கண்டு ஜனங்கள் இந்தக் கமிஷன் முறையே நீடிக்கட்டும் என்று முடிவுகட்டினர்.

சுருக்கமாகச் சொன்னால் இந்தக் "கமிஷன்" ஏற்பாட்டை ஒரு வர்த்தகக் கம்பெனியின் "டைரக்டர் போர்ட்" மாதிரி பாவிக்கலாம்.

இதன் முக்கிய அம்சங்கள்

1900-ம் ஆண்டில் கால்வெஸ்டன் நகரில் ஆரம்பமான இந்தப் புதிய முறையை 1917-ம் ஆண்டில் 1700 நகரங்கள் பின்பற்றின. கமிஷன் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள்:—

(1) மேயர் கவுன்ஸில் திட்டத்தில் மேயரிடமிருந்த பொறுப்பு, கவுன்ஸிலிடம் இருந்த பொறுப்பு இரண்டும் 5 கமிஷனர்களிடம் விடப்படுகின்றன. சில ஊர்களில் 3 கமிஷனர்கள் இருப்பார்கள்; சிலவற்றில் 7 பேர் இருப்பார்கள். 3-க்குக் குறைவில்லை: 7-க்கு அதிகமில்லை.

(2) ஒவ்வொரு கமிஷனரும் நகரசபையின் கொள்கையை நிர்ணயிப்பதில் கலந்து கொள்வதோடு, ஏதேனும் ஓர் இலாகாவுக்குத் தலைவராக இருப்பார்.

(3) இவர்கள் நகரின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாமல் நகரம் மொத்தத்திலும் உள்ள வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(4) கமிஷன் முறை இருக்கும் ஊர்களில் ஓர் ஆடிட்டர், பொக்கிஷதார் தவிர வேறு அதிகமான உத்தியோகஸ்தர்களைத் தேர்தல் மூலம் பொறுக்குவதில்லை.

(5) சில நகரங்களில் கமிஷனரைப் பொறுக்கும் போதே இன்ன இலாகாவின் கமிஷனர் என்ற ஹோதாவிலேயே பொறுக்கி விடுவார்கள். ஆகையால் குறிப்பிட்ட உத்தியோகத்துக்கு ஓரளவாவது லாயக்குள்ளவர்கள் தான், அபேட்சகர்களாக நிற்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

(6) இந்தக் கமிஷனர்களுக்கு அதாவது கமிஷன் மெம்பர்களுக்கு, அவர்கள் செலவிடும் நேரத்துக்குச் சரியான "நஷ்டஈடு" (சம்பளம்) கொடுக்கப்படுகிறது.

இதில் தோன்றிய குறைபாடுகள்

இந்த முறையைச் சிபார்சு செய்தவர்கள் ஒவ்வொரு கமிஷனரும் பிரிட்டிஷ் மந்திரிகளைப் போல, மேற்பார்வை அதிகாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு, அன்றாட நிர்வாகத்தை நிரந்தர உத்தியோகஸ்தர்கள் மூலம் நடத்துவார்கள் என்றே எதிர்பார்த்தார்கள். உண்மையில் "மேற்பார்ப்பதற்கும்" கொள்கையை நிர்ணயிப்பதற்கும்தான் அவர்கள் லாயக்கே யொழிய, அவர்கள் தொழில் நிபுணர்களல்ல. (அதாவது பிரிட்டனிலுள்ள கல்விமந்திரி, கல்வி இலாகாவில் கவனம் செலுத்திக் கொள்கையை நிர்ணயிக்கத்தான் லாயக்கே யொழிய, அவரே பாடத்திட்டம் வகுக்கக்கூடிய ஆசிரியராக வேலை செய்ய லாயக்கற்றவர். அதாவது மந்திரிகள் தம் இலாகாவின் நிபுணர்களல்ல.) அன்றாட வேலையையும் கொள்கையையும் அமலுக்குக் கொண்டுவரும் விவர நுணுக்கங்கள் நிபுணர்களுக்குத்தான் தெரியும். ஆனால் கமிஷனர்கள் நிபுணர்கள் போல நடக்க ஆரம்பித்தனர். நல்ல சம்பளம் இருந்ததால், லாயக்கற்றவர்களும் சம்பளத்துக்கு ஆசைப்பட்டுக் கமிஷனர் தேர்தலில் போட்டி போட்டு அரசியல் செல்வாக்கின் மூலம் பதவிக்கு வந்தனர். இது எதிர்பாராத விபரீதம். இந்த முறை முதலில் அமலுக்கு வந்தபோது கமிஷனர்கள் வர்த்தகக் கம்பெனியின் டைரக்டர்கள் போல நடப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதே உதாரணத்தை அவர்கள் பூரணமாகப் பின்பற்றவில்லை. அதாவது வர்த்தகக் கம்பெனிகளில் டைரக்டர்கள் நேரில் காரியா

லயத்தை நடத்தாமல் ஒரு மானேஜரை நியமிக்கிறார்கள். அது போலக் கமிஷனர்கள் தமக்குப் பொதுவாக ஒரு மானேஜரை நியமிக்கவில்லை.

கமிஷன்—மானேஜர் முறை

இதனால்தான் கமிஷனர் முறையில் சீர்கேடுகள் புகுந்தன என்று தோன்றியது.

அதிலிருந்து "கமிஷன்—மானேஜர்" முறை ஏற்பட்டது. மாண்ட்கோமரி கௌன்டியிலுள்ள டேய்ட்டன் நகரில் இருப்பது கமிஷன்—மானேஜர் முறை.

நகர சபையில் "மானேஜர் முறை"

நகர சபை அமைப்பில் கமிஷனர்-மானேஜர் முறைக்கு முக்கியமான வழிகாட்டியாக இருந்தது, மாண்ட்கோமரி கௌண்டியிலுள்ள "டேய்ட்டன்" நகரமே. 1940-ம் ஆண்டில் இதன் ஜனத்தொகை சுமார் 215,000. (நம் மாகாணத்தில் மதுரை நகரின் ஜனத்தொகை சுமார் 240,000) இந்த டேய்ட்டன் நகரசபையின் அமைப்பைக் கவனிப்போம்.

அமைப்பு

(1) அந்த நகரிலுள்ள வோட்டர்கள் 5 பேர் கொண்ட ஒரு கமிஷனை நியமிக்கிறார்கள். இந்தக் கமிஷன்தான் நகரசபை நிர்வாகத்தின் "கொள்கையை" நிர்ணயிக்கிறது.

(2) இந்தக் கமிஷனுக்காகத் தேர்தலில் அபேக்ஷகர்களாக நிற்பவர்கள் எந்தக் கட்சியின் சார்பிலும் நிற்ப தில்லை. தமது சொந்த யோக்கியதையின் மீது அவர்கள் ஜனங்களின் வோட்டைப் பெற வேண்டுமே யொழிய, அவர்களை ஒரு கட்சியும் நியமிப்பதில்லை; அதாவது நகர சபைத் தேர்தலில் அரசியல் கட்சிகள் கட்சி மனப்பான்மையுடன் போட்டி போடுவதில்லை.

(3) ஐந்து பேர் கொண்ட இந்தக் கமிஷன் ஒரு மானேஜரை நியமிக்கிறது. அந்த மானேஜரைப் பதவியிலிருந்து கமிஷனர்கள் நீக்க முடியும். (ஆனால் அவர் திறமையற்றவர் என்று ருசுச் செய்யப் பட்டாலொழிய அவரை வேலையிலிருந்து நீக்குவதற்குக் கமிஷனர்கள் துணிய மாட்டார்கள்.)

அமெரிக்காவில் நகர மானேஜர் ஒரு நகர சபையிலிருந்து நீக்கப்பட்டால், மற்றொரு நகர்சபையிலாவது தமக்கு உத்தியோகம் கிடைக்க வேண்டுமே என்ற கவலை காரணமாக, தாம் திறமைசாலி என்று பெயர் வாங்க ஆசைப்படுவார்.

(4) மானேஜரைப் பொறுக்கி யெடுப்பதோடு கமிஷனர்கள் ஓர் உத்தியோக நியமன போர்டையும் பொறுக்கி யெடுக்கிறார்கள். எந்த உத்தியோகத்துக்கு என்ன யோக்கியதாம்சங்கள் தேவை யென்பதை இவர்கள் நிர்ணயிப்பார்கள்.

(5) இவர்களது யோசனையைக் கேட்டுக் கொண்டு யோக்கியதாம்சத்தின்படி ஒவ்வொரு இலாக்காவுக்கும் தலைமை உத்தியோகஸ்தரை நியமிப்பது மானேஜரின் வேலை. இந்தத் தலைமை உத்தியோகஸ்தர்கள் தம் இலாக்காவுக்கு வேண்டிய சிப்பந்திகளைப் பொறுக்கிக் கொள்வார்கள்.

(6) மானேஜர் செய்யும் நியமனமே இறுதியானது; கமிஷனர்கள் அதில் தலையிட முடியாது. காரியாலயம் முழுதும் மானேஜரின் கட்டளைக்கு உட்பட்டது. போட்டிப் பரீக்ஷையின் மீதே அநேகமாக எல்லா உத்தியோகத்துக்கும் நபர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

(7) நகரசபைக்கு 5 கமிஷனர்களைத் தேர்ந்தெடுக்கும் போதே சில நகர நீதிபதிகளும் வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

(8) வார்டு வார்டாக, தனித் தனியாகப் பிரதிநிதிகளைப் பொறுக்காமல் நகரம் முழுதும் ஒரே தேர்தல் தொகுதியாக வோட்டுச் செய்து 5 கமிஷனர்களையும் பொறுக்குகிறது.

பண நிர்வாகமும் வரி நிர்ணயமும்

வரவு செலவு திட்டமும், வரியும் நிர்ணயிப்பதற்குப் பின்வரும் முறையை அனுஷ்டிக்கிறார்கள்.

(1) மானேஜர் "வரவு செலவு திட்ட அதிகாரி" (பட்ஜெட் அதிகாரி, அல்லது பொக்கிஷ அதிகாரி) என்று ஒருவரை நியமிக்கிறார்.

(2) நகரசபையின் ஒவ்வொரு இலாக்காவின் தலைவர்களும், தமது இலாக்காவின் தேவைகளைப் பட்ஜெட் அதிகாரிக்கு அறிவிக்கிறார்கள்.

(3) அவர் தமக்கு அறிவிக்கப்பட்ட தேவைகளின் ஜாபிதாவை அந்தந்த இலாக்காவின் தலைவருடன் விவாதிக்கிறார். முன் வருஷத்து வரி வசூல் செலவு விவரங்களை நிதி இலாக்கா அறிவிக்கிறது.

(4) இதைக் கமிஷனர் தணிக்கை செய்து தனது சம்மதத்துடன் நகர கமிஷனர்களிடம் சமர்ப்பிக்கிறார்.

(5) இந்த நகல் பட்ஜெட், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகிறது. அதிலிருந்து ஒரு மாதம் வரையில் பட்ஜெட்டைப்பற்றித் தம்மிடம் புகார்களோ மகஜர்களோ சமர்ப்பிக்கும்படி எல்லா வோட்டர்களுக்கும் வசதியளிக்கப்படுகிறது. பட்ஜெட்டில் மாறுதல் கோரும் ஜனங்கள் கமிஷனர்கள் முன் ஆஜராகலாம். பகிரங்கமாக அவர்களது குறைகளையும் தேவைகளையும் பற்றிச் சாட்சியம் பதிவு செய்யப்படும். (இவ்வாறு ஒவ்வொரு பிரேரணையையும் பற்றி "பகிரங்கவிசாரணைகள்" மூலம் தம் அபிப்பிராயத்தை வற்புறுத்தப் பொது ஜனங்களுக்கு வசதியளிப்பது அமெரிக்க ஜனநாயகத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.)

(6) விசாரணை முடிந்த பிறகு கமிஷனர்கள் தாம் நிர்ணயிக்கும் கொள்கைகளின்படி பட்ஜெட்டில்மாறுதல் செய்வார்கள்.

(7) இந்த இறுதியான பட்ஜெட், நிதி இலாக்காவுக்குப் போகும். எந்த இலாக்காவும் பட்ஜெட்டுக்கு அதிகமாக எந்த இனத்திலும் செலவிடாதபடி பார்த்துக் கொள்வது நிதி இலாக்காவின் வேலை.

இந்தியாவுடன் ஒப்பிட்டால்

ஒருவிதமாகப் பார்த்தால் இந்த "மானேஜர் முறை" இந்தியாவுக்குப் புதிதல்ல என்று கூறலாம்.

உதாரணமாக நம் மாகாணத்து நகரசபைகளிலுள்ள நிர்வாக அதிகாரியை (எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர் அல்லது கமிஷனர்) டேய்ட்டன் நகர சபை மானேஜருக்குச் சமமாக மதிக்கலாம்.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் இருக்கிறது. இங்கு நிர்வாக அதிகாரி நகர சபையால் பொறுக்கப்படாமல் சர்க்காரால் பொறுக்கப்பட்டு நியமிக்கப்படுகிறார். அவர் சர்க்காரின் நிரந்தர உத்தியோகஸ்தர். அந்த நகர சபையில் ஒரு பெரிய மெஜாரிட்டி அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றினாலும் அவருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிடாது. சர்க்கார் அவரை வேறு இடத்துக்கு மாற்றவோ வேறு பதவியில் நியமிக்கவோ செய்யும். மற்ற நகரசபைகளிடமும் நற்பெயர் வாங்க வேண்டும் என்ற அக்கரை அவருக்கு இருந்துதீர வேண்டியதில்லை. ஏனென்றால் கமிஷனரைப் பொறுக்குவதும் நியமிப்பதும் நகரசபை யல்ல. ஆகையால் அவர் தம்மை நகர சபைக்குப் பொறுப்பாளியாக மதித்துக் கொள்ளாமலும் நகரிலுள்ள அபிப்பிராயத்தை மதிக்காமலும் இருக்கமுடியும். இது சரியா தவறு என்பது பற்றி நாம் இங்கு விவாதிக்கவில்லை.

நிர்வாக அதிகாரியைப் பொறுக்கும் அதிகாரம் கல்கத்தாவில் நகரசபையிடமே இருக்கிறது.

டேய்ட்டனிலுள்ள முறைக்கும் இந்தியாவிலுள்ள முறைக்கும், முக்கியமான வேற்றுமை நகரசபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் முறையைப் பற்றியது. டேய்ட்டனில் ஐந்தே ஐந்து நபர்கள்தான் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த ஐவரும்கூட வார்டு வாரியாக அல்லாமல் நகர முழுமைக்கும் பொதுவாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

கவுன்ஸில்-மானேஜர் முறை

டேய்ட்டனிலிருப்பது கமிஷன்-மானேஜர் முறை. சில அமெரிக்க நகரங்களில் கவுன்ஸில் மானேஜர் முறை இருக்கிறது. அதாவது கமிஷனுக்குப் பதிலாக ஒரு கவுன்ஸில். இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதில்லை. ஏனென்றால் பல நகரங்களில் கவுன்ஸிலர்களும் நகர முழுமையிலுமுள்ள வோட்டர்களால் பொறுக்கப் படுகிறார்கள்.

சில நகரங்களில் கவுன்ஸிலர்களில் பாதிப்பேர் வார்டுத் தொகுதிகள் மூலமும், மற்றொரு பகுதியினர் நகர முழுமையும் ஒரே தொகுதியாக வைத்தும் தேர்ந்தெடுக்கப்படுவதுண்டு.

ஆனால் "மானேஜர்" முறை இருக்குமிடங்களில் கவுன்ஸிலர்கள் தொகை ("கமிஷனை"ப் போலவே) 5 அல்லது 7 தான் இருக்கும்.

சில நகர்களில் கவுன்ஸிலர்கள் "ஒற்றை மாற்று வோட்டு" என்ற விதாசார பிரதிநிதித்துவ முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். (ஸின்ஸினாட்டி நகரில் இந்த வோட்டு முறை இருக்கிறது.)

கவுன்ஸில்-மானேஜர் முறைக்கும் கமிஷன்-மானேஜர் முறைக்கும் சில சம்பிரதாயங்களில்தான் வித்தி

யாசம். கவுன்ஸில் மானேஜர் முறைக்கு "ஸின்ஸினாட்டி" என்ற நகரை உதாரணமாகக் கொள்ளலாம். அங்கு ஒற்றைமாற்று வோட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் கவுன்ஸிலர்கள் ஒரு மானேஜரை நியமிப்பதோடு தம்முள் ஒருவராக ஒரு மேயலரயும், ஓர் உதவி மேய்ரையும் நியமிக்கிறார்கள்.

"மானேஜர்" முறையின் சரித்திரம்

மானேஜர் முறை முதல் முதலாக 1908ம் வருஷத்தில் ஸ்டாடன் என்ற நகரில்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்த முறை அப்போது அதிகமாகப் பரவவில்லை. கால்வஸ்டன் நகரில் கமிஷன் முறை எப்படி ஒரு பெரிய விபத்தைச் சமாளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதுபோலவே ஒரு பெரிய பெருவெள்ளத்துக்குப் பிறகு நிலைமையைச் சமாளிப்பதற்காக, 1913ம் வருஷத்தில் டேய்ட்டன் நகரில் "மானேஜர்" முறையை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு இந்த முறை பல பெரிய நகரங்களுக்குப் பரவியது. 1939-ம் வருஷத்தில் 5000 ஜனத்தொகைக்கு மேற்பட்டனவாக 294 நகர சபைகள் இந்த முறையில் அமைக்கப்பட்டன. சிறு நகர சபைகளிலும் (சுமார் 180-ல்) இந்த முறை இருக்கிறது. சில நகரங்களில் சிறிது காலம் நடத்திப் பார்த்துப் பின்னர் இந்த முறை நிராகரிக்கப்பட்டதும் உண்டு. அம்மாதிரி நிராகரிக்கப்பட்டது 25 நகரங்களில் தான்.

ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் (1) டைரக்டர் போர்ட் (2) மானேஜர் என்ற இரண்டு உறுப்புக்கள் இருப்பதுபோல நகரசபை நிர்வாகத்திலும் (1) ஒரு

கமிஷன் அல்லது கவுன்ஸிலும் (2) ஒரு மானேஜரும் இருந்து நகரசபையை நிர்வகிக்க வேண்டும் என்பது தான் இந்த முறையின் அடிப்படை. கமிஷனர் தேர்தல், உத்தியோகஸ்தர் நியமனம் இரண்டிலும், திறமையே முக்கியமாக மதிக்கப்படுகிறது. அரசியல் கட்சி வாதமும் உத்தியோகங்களை அரசியல் பரிசாக வழங்குவதும் இந்த முறையில் கிடையாது.

ஒரு தனிரகமான உத்தியோக வர்க்கம்

இந்த "மானேஜர்"களுக்கு மிகவும் தாராளமாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக ஸின்ஸினாட்டி நகர சபையில் கவுன்ஸிலர்களுக்கு வருஷம் 1-க்கு 5000 டாலர் சம்பளம்; மேயருக்கு 6000 டாலர்; ஆனால் மானேஜருக்கு 25,000 டாலர் சம்பளம் கொடுக்கிறார்கள்! அவரது திறமையான நிர்வாகத்தின் மூலமாக நகர சபைக்கு மிச்சமாகும் தொகை அவரது சம்பளத்தை விட எவ்வளவோ மடங்கு அதிகம் என்று அந் நகரத்தினர் கருதுகிறார்கள்.

மானேஜர் முறையைப் பல நகரசபைகள் பின்பற்றியது காரணமாக மற்றொரு நல்ல பயன் ஏற்பட்டிருக்கிறது. வைத்தியத்தொழில், எஞ்சினியரிங், வக்கில் தொழில், இவைபோல நகரசபை "மானேஜர் வேலை" யும் ஒரு நுணுக்கமான தொழில் என்ற மனப்பான்மை ஏற்பட்டு, சில கலாசாலைகளில் அந்தத் தொழிலுக்கென்றே தனியான பயிற்சி அளிக்கப்படுகிறது. அமெரிக்காவிலுள்ள, நகர சபை மானேஜர்கள் தமக்குள்ளே ஒரு சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சம்பள உயர்வு கோருவதற்காக அல்ல; தமது தொழிலில் ஏற்படும் பல நிர்வாகப்பிரச்னைகளையும், நகர

முன்னேற்றம் சம்பந்தமான அனுபவங்களையும் பற்றிக் கலந்து பேசி நகர ஆட்சியைத் திறமையுள்ளதாக ஆக்குவதே இந்தச் சங்கத்தின் நோக்கம்.

இவ்வாறு ஒரு நுட்பத் தொழில் என்ற கௌரவ உணர்ச்சி ஏற்பட்டிருப்பதால் நகரசபைகளுக்கு மானேஜர்களைப் பொறுக்குவது சுலபமாகிறது. (அந்த நிலைமையில்லாததால்தான் இந்தியாவில் சர்க்காராகவே நிர்வாக அதிகாரிகளைப் பொறுக்குகிறது போலும்.)

சில பெரிய நகர சபைகளின் இப்போதைய மானேஜர்கள் இதற்கு முன் சிறிய நகரசபைகளின் மானேஜர்களாகவோ, அல்லது பெரிய நகரங்களில் மானேஜரின் காரியதரிசிகளாகவோ இருந்தவர்கள். அவர்கள் தமது நிர்வாகத் திறமையில் நற்பெயரெடுப்பதன் மூலம் பெரிய நகரங்களில் பதவிக்கு வருவதும், உயர்ந்த சம்பளங்களைப் பெறுவதும் சாத்தியமாகிறது. ஸின்ஸினாட்டி நகரில் மானேஜராக இருந்த ஒருவர் அவரது திறமை நிமித்தமாக விஸ்கான்ஸின் மாகாணத்தில் சர்வகலாசாலைக்கு அத்யக்ஷராக நியமிக்கப் பட்டார். இது மானேஜர் உத்யோகத்தின் கியாதிக்கு ஓர் அத்தாட்சியாகும்.

நியூயார்க்கில் இம்முறை இல்லை

மானேஜர் முறையைப் பற்றி நாம் இதுவரை கூறியதை வைத்துக்கொண்டு அமெரிக்காவில் எல்லோரும் இதுவே சிறந்த முறையென்று ஒப்புக்கொண்டதாகக் கருதுவதற்கில்லை. "வலிமையுள்ள மேயர்" முறையில் தான் ஜனங்களின் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் தூண்டமுடியும் என்று கருதுவாரும் உண்டு. இந்த

அபிப்பிராயத்தை "நகர மானேஜர் சங்கம்" மறுக்கிறது. கொள்கையை நிர்ணயிக்கும் உரிமை இன்னமும் ஜனப் பிரதிநிதிகளான கமிஷன் அல்லது கவுன்ஸிலிடமே இருக்கிறது என்றும், ஆகையால் ஜனநாயக அம்சம் குறைந்து போய்விடவில்லையென்றும் அவர்கள் சமாதானம் கூறுகிறார்கள்.

'வலிமையுள்ள மேயர்' முறைதான் நியூயார்க் நகரில் இருக்கிறது. அந்த நகரசபை மிகவும் திறமையாக நிர்வகிக்கப்படுகிறது. ஆனால் அதற்குக் காரணம் லாகார்டியா போன்ற ஊக்கமும் உறுதியுமுள்ள ஒருவர் மேயராகப் பதவி வகித்ததுதான் என்று சிலர் கூறுவர்.

நியூ இங்கிலாந்திலுள்ள "டவுன் சர்க்கார்"

நாம் இதுவரையில் அமெரிக்க ஸ்தல சுயாட்சியில் 4 வகை ஸ்தாபனங்களைக் கவனித்தோம். (1) கௌன்டி. (2) டவுன்ஷிப். (3) கிராமங்கள். (4) நகரங்கள். இதில் கௌன்டியும் டவுன்ஷிப்பும் பிரதேச ஸ்தாபனங்கள். கிராமங்களும் நகரங்களும் "ஊர்" ஸ்தாபனங்கள். பிரதேச ஸ்தாபனங்கள் மட்டுமே கட்டாயமாகச் சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட எல்லையுடன் நிர்வகிக்கப்படுவன. ஊர்கள் விஷயத்தில் அவ்வாறு ஸ்தல ஸ்தாபனம் இருந்து தீரவேண்டுமென்ற கட்டாயம்கிடையாது. ஜனத்தொகை 500 கூட இல்லாத சிறிய ஊராயிருந்தாலும் அது விரும்பினால் அங்கு கிராம சுயாட்சி ஸ்தாபனம் இருக்கும். விரும்பாவிட்டால் கிடையாது. அதுபோலவே மற்றொரு ஊர் சுமார் 10,000 ஜனத்தொகையுள்ள ஒரு பட்டணமாகவே இருப்பினும் அந்த ஊர்க்காரர்கள் விரும்பவில்லையென்றால், அங்கு தனிச் சுயாட்சி ஸ்தாபனம் இருந்துதீர வேண்டியதில்லை. ஓர் ஊரில் தனிச் சுயாட்சி ஸ்தாபனம் இல்லாவிட்டால் அதன் தேவைகளை டவுன்ஷிப் அல்லது கௌன்டி ஸ்தாபனம் கவனித்துக் கொள்ளும். பல மாகாணங்களில் டவுன்ஷிப்பே இல்லாமல், கௌன்டிமட்டும்தான் பிரதேச ஸ்தாபனமாக இருக்கும். இதுதான் அமெரிக்காவில் சாதாரணமாக, பல மாகாணங்களிலுள்ள ஸ்தல ஸ்தாபன முறையென்பதை ஏற்கெனவே கூறியுள்ளோம்.

நியூ இங்கிலாந்து மாகாணங்கள் என்று சொல்லப்படும் வடகிழக்கு மாகாணங்களில் இவ் விஷயத்தில்

ஒரு வித்தியாசம் இருக்கிறது. அங்குள்ள ஸ்தல ஸ்தாபன அமைப்பு தனி ரகமானது என்பதை ஏற்கனவே 102 வது பக்கத்தில் கூறியுள்ளோம்.



“டவுன் கூட்டம்”

நியூ இங்கிலாந்து மாகாணங்களில் முக்கியமான ஸ்தல சுயாட்சி ஸ்தாபனம் “டவுன்” சர்க்கார். அங்கு

டவுன் என்ற வார்த்தைக்குப் பட்டணம் என்று அர்த்தமில்லை. சுமார் 20 அல்லது 30 மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் சுமார் 2500 ஜனத்தொகையுள்ள ஓர் ஊரும், அதைச் சுற்றி 500 அல்லது 1000 ஜனத்தொகையுள்ளனவாகச் சில ஊர்களும், ஊர் என்ற பெயருக்கே லாயக்கல்லாத சிறுசிறு விவசாயக் குடியேற்றங்களும் இருக்கலாம்; அத்தனையும் சேர்ந்து ஒரு "டவுன்" என்று மதிக்கப்படுகிறது. அவற்றுள் ஒரு ஊருக்குமே தனிச் சுயாட்சி ஸ்தாபனமில்லாமல் அந்தப் பிரதேசம் முழுதும் ஒரு "டவுன்" என்று பாவிக்கப்படலாம்; அல்லது சில ஊர்கள் தனிச் சுயாட்சியுள்ள நகரங்களாகவும் கிராமங்களாகவும் இருக்கும். ஆனால் அந்த நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பொதுவான ஒரு "டவுன்" சர்க்கார் இருந்தே தீரும்.

நாம் இதுவரையில் கவனித்த ஸ்தல ஸ்தாபனங்களிலெல்லாம் வோட்டர்கள் தம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதோடு வோட்டர்களின் வேலை முடிந்துவிடுகிறது. வரி விகிதத்தை நிர்ணயம் செய்வதோ, அதை எந்த முறையில் செலவிடவேண்டும் என்று நிச்சயிப்பதோ வோட்டர்களின் வேலையல்ல; பிரதிநிதிகளின் வேலை. ஆனால் நியூ இங்கிலாந்திலுள்ள டவுன் சுயாட்சியில் வேறு முறை இருந்து வருகிறது. நம் நாட்டில் பழைய காலத்தில் "ஊர்க்கூட்டம்" அல்லது "நாட்டுக் கூட்டம்" கூட்டுவது போல, பட்டணத்திலுள்ள எல்லா வோட்டர்களும் ஒரு "பட்டணக் கூட்டமாக"க் கூடுவார்கள். என்ன வரி விதிக்கவேண்டும், எவ்வாறு செலவிட வேண்டும், என்பதை அந்தப் "பட்டணக் கூட்டமே" நிர்ணயிக்கும். அதாவது பிரதிநிதிகள் மூலம் கொள்கையை நிர்ணயிப்பதற்குப்

பதிலாக், ஊரிலுள்ள எல்லோரும் கூடி, கொள்கையை நிர்ணயித்து பிறகு அதை மேற் பார்வையிட்டு, நிர்வகித்து நடத்தி வைப்பதற்கு ஒரு பிரதம நிர்வாகி, 3 பிரதானிகள் ஆகியோரையும், பொக்கிஷம், கல்வி அவற்றுக்காகச் சில போர்டுகளையும் தேர்ந்தெடுப்பார்கள். பிரதம நிர்வாகிக்கு "டவுன்கிளார்க்" குமாஸ்தா என்று பெயர்!

"நேர்முகமான ஜனநாயகம்"

இதை நேர்முகமான ஜனநாயகம் என்பார்கள். இதுதான் வெகு காலமாக இருந்து வந்த முறை. ஆனால் சமீப காலத்தில் யந்திரத் தொழில்கள் அதிகரித்துத் தூர தொலைவிலிருந்து புதிது புதிதாக வெளியூர்க்காரர்கள் சில ஊர்களில் குவிய ஆரம்பித்த பிறகு, இந்த "நேர்முகமான ஜனநாயகம்" சிறிது மாற்றப்பட்டிருக்கிறது.

"பட்டணக் கூட்டத்துக்கு"ப் பதிலாக இப்பொழுது "பட்டணப் பிரதிநிதிகள் கூட்டம்" கூடுகிறது. இந்தப் பிரதிநிதிகளே வரியையும், செலவையும், கொள்கைகளையும் நிர்ணயித்து, அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கென்று சில உத்தியோகஸ்தர்களையும் பிரதம நிர்வாகியையும் ஒரு நிர்வாகக் கமிட்டியையும் நியமிக்கிறார்கள். இது நேர்முக ஜனநாயகத்துக்கும் பிரதிநிதித்துவ ஆட்சிக்குமிடையே ஒரு சமரசமாகும்.

வோட்டர்கள் சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தப் பிரதிநிதிகள் ஒரு நிர்வாக சபையைத் தேர்ந்தெடுத்து அதனிடம் நிர்வாகத்தை ஒப்படைக்கிறார்கள். ஏற்கனவே நிர்ணயிக்கப்படாததாக புதிய திட்டம் ஏதேனும் நிர்வாகிகளால் தயாரிக்கப்பட்டால், "பிரதிநிதிகள் கூட்டம்" கூட்டப்பட்டு அதில் முடிவு செய்யப்படும்.

மற்ற மாகாணங்களிலிருப்பது போல நியூ இங்கிலாந்து மாகாணங்களில் கல்விக்கென்று தனியான ஸ்தல சுயாட்சி ஸ்தாபனம் கிடையாது. பட்டண நிர்வாகத்துள் ஓர் இலாகாவாகவே கல்வியும் நிர்வகிக்கப்படுகிறது. ஆனால் கல்வி போர்ட் ஒன்று பட்டணக் கூட்டத்திலேயே பொறுக்கப்பட்டுவிடும்.

நியூ இங்கிலாந்து மாகாணங்களில் சில இடங்கள் நகரங்கள் மிகுந்த பிரதேசங்களாக இருக்கின்றன. சில இடங்கள் கிராமங்களும் குக்கிராமங்களும் நிறைந்த விவசாயப் பிரதேசங்களாக இருக்கின்றன. இந்த விவசாயப் பிரதேசத்தில் ஜன நெருக்கம் இந்தியாவின் ஜன நெருக்கம் போலவே இருக்கிறது. ஆகையால் அங்குள்ள முறை இந்தியாவுக்குச் சிறிது பொருத்தமாக இருக்கலாம். அங்கு சராசரி "டவுனின்" விஸ்தீரணம் சுமார் 25 சதுர மைல் அல்லது 30 சதுரமைல் இருக்கிறது.

சரித்திர பூர்வமான காரணம்

நியூ இங்கிலாந்திலுள்ள "டவுன் முறை" மிகவும் திறமையானதென்று அங்குள்ளவர்களே நினைக்கவில்லை. ஆயினும் அந்த முறையைக் கைவிட அவர்களுக்கு மனம் வருவதில்லை. இதற்குக் காரணம் அங்கு டவுன் சர்க்கார்கள் அமெரிக்க சர்க்காருக்கும் முந்தியே ஏற்பட்டவை. 1776-ல் அமெரிக்கக் குடியேற்றங்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரமடைவதற்கு முன்னதாகவே, பிரிட்டனிலிருந்து ஜனங்கள் குடியேறின போதே, அவர்கள் "டவுன்" என்ற ஸ்தல ஸ்தாபனத்தை அமைத்துக் கொண்டார்கள். அப்போது அவைகள் விவசாயக் குடியேற்றங்களாகவே இருந்தன. "டவுன்" என்று சொல்லப்படும் சுமார் 30 சதுர மைல் பிரதேசத்தில்

ஜனத்தொகை மிகவும் சொற்பம். உதாரணமாக கன்னெட்டிக்ட் என்ற மாகாணத்திலுள்ள பேர்பீல்ட் (Fair field) என்ற பட்டணத்தை எடுத்துக் கொள்வோம். இப்போது சுமார் 22,000 ஜனத்தொகையுள்ள அந்தப் பட்டணத்தில் 1774-ம் ஆண்டில் ஜனத் தொகை 4,900 தான் இருந்தது. அதாவது நாலைந்து ஊர் சேர்ந்து மொத்தம் 5,000 ஜனத்தொகை இருந்தது. ஜனத் தொகை இவ்வளவு குறைவாக இருந்ததால் அவர்கள் "பிரதிநிதித்துவ முறை" இல்லாமல், நகரத்துக்கு வேண்டிய சட்டதிட்டங்களையும், வரவு செலவையும் "ஊர்க் கூட்டம்" மூலமே நிர்ணயித்தார்கள். ஜனத் தொகை இப்போது பன்மடங்கு பெருகிவிட்டது.

இருந்தாலும் அதே முறை இன்றும் நீடிக்கிறது. இக்காலத்துக்கு இது பொருந்தாது என்று அவர்கள் இப்போது உணர்ந்து வருகிறார்கள். ஆனாலும் அதை மாற்ற அவர்களுக்கு மனம் வருவதில்லை. சில "டவுன்கள்" ஒஹாயோ மகாணத்திலுள்ள டவுன்ஷிப்புகள் போன்றவையே.

பேர்பில்ட் பட்டணம்: 63 அதிகாரிகள்!

டவுன் நிர்வாகத்தில் ஒரு பெரிய விசித்திரம் உண்டு. "டவுன் சபை" (நகரசபை) என்று ஏற்படுத்தாமல் "டவுன் கூட்டம்" மூலமே நிர்வாகக் கொள்கைகள் நிர்ணயிக்கப்படுகின்றன வென்றாலும், அவர்கள் டஜன் கணக்கில் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒரு "டவுன் கூட்டத்தில்" தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் ஜாபிதாவைப் பார்த்தால் பயமாக இருக்கும்.

பேர்பீல்டில் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகள் ஜாபிதாவை இங்கு தருகிறோம் :— 3 பிரதானிகள்

(ஸெலக்ட்மென்); 9 பேர் கொண்ட ஒரு பொக்கிஷ போர்ட்; 1 டவுன் குமாஸ்தா (இவர் பிரதான நிர்வாகி); 1 பொக்கிஷதார்; 1 நிதி தர்மகர்த்தா; 7 பேர் கொண்ட ஒரு கல்வி போர்ட்; 2 வோட்டுப்பதிவு ரிஜிஸ்டிரார்கள்; 2 பேர் கொண்ட வரி நிர்ணய போர்ட்; 6 பேர்கொண்ட நகர அமைப்பு போர்ட்; 5 பேர் கொண்ட பிரதேசப் பிரிவினை போர்ட்; 1 உயில் நீதிபதி; 7 காவல் தலைமையினர்; 18 கவுரவ மாஜிஸ்டிரேட்டுகள். இவ்வாறு 63 அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய கொள்கையை நிர்ணயிப்பது "டவுன் கூட்டம்". இந்தக் கூட்டம் வருஷத்துக்கு ஏழெட்டுத்தடவை நடக்கும். இந்தியாவில் நகர நிர்வாகத்தின் கொள்கையை நிர்ணயிப்பது நகர சபை மெம்பர்கள். நியூ இங்கிலாந்தில் "டவுன்" களில் ஜனங்கள் நேரில் விவாதத்தில் கலந்துகொண்டு, நகர சபை நிர்வாகத்தை நிர்ணயிக்கிறார்கள்.

கூட்டத்தில் வரப்போகும் பிரேரணைகள் என்ன என்பதை நிர்வாகிகள் பட்டண முழுதிலும் விளம்பரப் படுத்துவார்கள். யார் வேண்டுமானாலும் கூட்டத்தில் வந்து தமது அபிப்பிராயங்களைச் சொல்லலாம். அவர்களுடைய வோட்டுப்படியே முடிவு செய்யப்படும். (இவ் விஷயத்தில் நியூ இங்கிலாந்து மாகாணத்திலுள்ள "டவுன்கூட்டம்" என்ற முறையை இங்கிலாந்திலுள்ள "பாரிஷ் கூட்டத்" துடன் ஒப்பிடலாம்.)

கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்ற உணர்ச்சி எல்லோருக்கும் இல்லைவிட்டால், சில

கோஷ்டிகள் தமக்கு வேண்டியதைச் சாதித்துக்கொண்டு விட முடியும். இது தான் இந்த முறையிலுள்ள பெரிய குறை.

பொதுக் கூட்டமா பார்லிமென்டா ?

சாதாரணமாக டவுன் கூட்டத்துக்கு வருபவர்கள் தொகை மொத்த வோட்டர்களின் தொகையில் 100-க்குப் பத்திலொரு பங்கு கூட இருப்பதில்லை. ஆனல் இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. உதாரணமாக, பேர்பீல்ட் ஜனத்தொகை சுமார் 23,000. வோட்டர்கள் சுமார் 10,000 ஆவது இருக்கும். அத்தனை பேரும் வருவார்கள் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்? பேர்பீல்ட் கௌன்டியின் 1941-42-ம் வருஷத்து அறிக்கையின்படி, அங்கு அவ்வருஷத்தில் 9 கூட்டங்கள் நடந்திருக்கின்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் எத்தனை பேர் ஆஜரானார்கள் என்ற விவரம் தரப்படவில்லை. ஆனல் ஒரு முக்கியமான கூட்டத்தில் "சாதகமாக 402 பேரும் பாதகமாக 184 பேரும்" வோட்டுச் செய்தார்கள் என்று சொல்லப்படுவதிலிருந்து, 586 பேர் கூட்டத்துக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. சுமார் 4 லக்ஷம் ரூபாய் வரவு செலவுகள் இக் கூட்டத்தில் நிச்சயிக்கப்பட்டன. அதாவது ஒரு பொதுக் கூட்டம், பார்லிமென்ட் மாதிரி வேலை செய்கிறது.

"டவுன் கூட்டம்" முறையிலுள்ள குறைகள்

நியூ இங்கிலாந்திலுள்ள முறையைப் பின்பற்றித்தான் மற்ற மாகாணங்களில் "டவுன்ஷிப்புகள்" ஏற்பட்டன. அந்த மாகாணங்களில் அந்த முறையைக் காலத்திற்கேற்றபடி மிகவும் மாற்றிவைத்துக் கொண்டது மட்டுமல்லாமல் அதை ரத்துச் செய்வது பற்றியும் யோசித்து வருகிறார்கள். நியூ இங்கிலாந்துக்காரர்

களுக்குத் தமது பழைய முறையைக் கைவிட மனம் வர வில்லை. ஆனால் அம்முறையிலுள்ள தவறுகள் அவர் களுக்குத் தெரியாமலில்லை. சமீபத்தில் பேர்பீல்ட் டவுனிலேயே அந்த முறையை மாற்றியமைப்பதுபற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள், 1946-ம் ஆண்டில் ஒரு கமிட்டியார், இந்தடவுனின் ஸ்தலசுயாட்சியைக் கவுன் ஸில் மானேஜர் முறைப்படி மாற்றியமைக்கலாம் என்று யோசனை கூறினர். இந்தச் சிபார்சுகளைப் பரிசிலனை செய்து பேர்பீல்டுக்குப் புதிய "ஸ்தல சுயாட்சிச் சட் டம்" தயாரிக்க மீண்டும் ஒரு கமிட்டி நியமித்தார்கள். அவர்கள் "கவுன்ஸில் மானேஜர்" திட்டத்தை நிரா கரித்து இப்போதுள்ள அமைப்பில் சிலசீர்திருத்தங்கள் மட்டும் சிபார்சு செய்துள்ளார்கள். "கவுன்ஸில்—மானே ஜர்" முறையை நிராகரித்ததற்கு அவர்கள் கூறும் காரணம் கவனிக்கத்தக்கது;

> பேர்பீல்ட் போன்ற ஒரு பெரிய நகரத்துக்குக் கவுன்ஸில் மானேஜர்முறைதான் ஏற்றது என்று எங்கள் கமிட்டியில் பலர் கருதினார்கள். ஆனால் இவ்வளவு பெரிய மாறு தலுக்கு ஜனங்கள் சம்மதிப்பார்கள் என்று தோன்ற வில்லை. அதனால் "டவுன் மீட்டிங்" என்ற முறையை "டவுன் பிரதிநிதிகள் மீட்டிங்" முறையாக மாற்றவே நாங்கள் சிபார்சு செய்கிறோம்!

என்று அவர்கள் முடிவுசெய்தார்கள். இந்த முறை என்னவென்று பார்ப்போம்.

"பிரதிநிதித்துவ டவுன் கூட்டம்"

பட்டணத்திலுள்ள எல்லா வோட்டர்களும் சேர்ந்து நகர நிர்வாகக் கொள்கையை நிர்ணயிப்பதற்குப் பதி லாகவோட்டர்கள் தம் பிரதிநிதிகள் மூலம் நிர்வாகக் கொள்கையை நிர்ணயிப்பது என்பதையே பிரதிநிதித்துவ டவுன் மீட்டிங் என்கிறார்கள். 250வோட்டர்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் பொறுக்கி, சுமார் 40 அல்லது 50

பேர் கொண்ட ஒரு பிரதிநிதிக் கூட்டத்தை ஏற்படுத்த லாம் என்று சீர்திருத்தக்கமிட்டி சிபார்சு செய்திருக் கிறது. கொள்கையை நிர்ணயிப்பது இந்தப் பிரதிநிதி சபையின் வேலை. மற்றபடி, இப்போதிருப்பது போலவே ஏராளமான அதிகாரிகளும் தனியாகத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ஏராளமாக அதிகாரிகளைப் பொறுக்கி யெடுப்பது என்ற கஷ்டத்தை நீக்கி விட்டால் "பிரதிநிதி கள் டவுன் மீட்டிங்" என்பது பிரிட்டனிலுள்ள பாரிஷ் கவுன்ஸிலைப்போலவே இருக்கும.

இந்தச் சிபார்சுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டால் வோட்டர்கள் ஒரு "பிரதிநிதிக் கூட்டத்தை" தேர்ந்தெடுப்பார்கள்.

இதுவரையில் "டவுன் கூட்ட"த்துக்கு எந்த உரிமை கள் இருந்தனவோ அவையாவும் இனிமேல் "பிரதி நிதித்துவ டவுன் கூட்ட"த்திடம் இருந்துவரும்.

ஒரு பாதுகாப்பு

இந்தப் பிரதிநிதிகள், அவர்களைத் தேர்ந்தெடுத்த ஜனங்களின் கருத்துக்கு முரணாக ஏதாவது செய்து விட்டால் என்ன செய்வது? அதற்கு ஒரு பாதுகாப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். 25,000 டாலருக்கு அதிகமாகச் செலவிடுவதாகவோ, கடன் பத்திரங்கள் வெளியிடுவ தாகவோ, டவுனில் புதிய சட்டதிட்டங்கள் செய்வ தாகவோ பிரதிநிதிக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறை வேறினல் அதை மாற்றும்படி கோர பொதுஜனங் களுக்கு உரிமை யுண்டு. டவுனின் வோட்டர் ஜாபிதாவிலுள்ளவர்களில் 100-க்கு 3 பேர் கையெழுத் திட்டு மகஜர் அனுப்பினல் அந்தப் பிரச்னைமீது சர்வஜன வோட்டு எடுக்க வேண்டும். வோட்டர் ஜாபிதாவில் 100-க்கு 25 பேர், சர்வஜன வோட்டில் பிரதிநிதிக் கூட்டத்

தின் முடிவை எதிர்த்தால் தீர்மானம் புனராலோசனை செய்யப்படும். பிரதிநிதிகள் தம்மிடையே கோஷ்டியாகச் சேர்ந்து கொண்டு தாறுமாருக எதுவும் செய்துவிடாமல் தடுப்பதற்கு இவ்வாறு பாதுகாப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

"டவுன் கிளார்க்" ஒரு குமாஸ்தா அல்ல!

டவுன் நிர்வாகத்துள் அதிகாரிகள் ஜாபிதாவில் டவுன் குமாஸ்தா என்று ஓர் உத்தியோகஸ்தரை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அமெரிக்காவில் இவருக்கு "டவுன் கிளார்க்" என்று பெயர். ஆனால் இவர் வெறும் குமாஸ்தா என்று ஒருவரும் நினைக்க வேண்டாம். டவுன் நிர்வாகத்தில் அவர்தான் மிகவும் கவுரவமுள்ளவர். 'டவுன்' சர்க்காரின் தலைவரே அவர்தான். ஊரில் மிகவும் கௌரவமும் மதிப்பும் வாய்ந்த ஒருவரே இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். ஒரு தடவை அந்தப் பதவிக்கு வந்தவரையே வருஷாவருஷம் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுப்பது நியூ இங்கிலாந்தில் சகஜம். உதாரணமாக பேர்பீல்டில் இப்போது டவுன் கிளார்க்காக இருப்பவர் 1932-ம் ஆண்டில் முதல் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு மறு தேர்தலிலும் அவரே தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சில டவுன் கிளார்க்குகள் 30 வருஷகாலம் பதவி வகித்ததுண்டு.

சில டவுன்களில் "டவுன் கிளார்க்குக்குச்" சம்பிரதாயத்துக்காக மட்டுமே சம்பளம் கொடுப்பார்கள். உதாரணமாக ஸ்டாம்போர்ட் டவுனில் மூன்று பிரதானிகளில் முதல் பிரதானிக்கு 5,000 டாலரும், மற்றிருவருக்கும் தலா 1,000 டாலரும் சம்பளம்! "டவுன் கிளார்க்குக்" குச் சம்பளம் ஒரே ஒரு டாலர். உண்மையில் இந்தக்

"கிளார்க்" ஒரு குமாஸ்தாவோ, மானேஜரோ அல்ல அவரை டவுனின் ஜனாதிபதி என்றே மதிக்கவேண்டும்.

ஸ்டாம்போர்ட் "டவுனும்"
ஸ்டாம்போர்ட் "நகரமும்"

"டவுன்களை"ப் பற்றிப் படிக்கும்போது அவை நகரங்கள், கிராமங்கள், குடியிருப்புக்கள் ஆகிய எல்லா வற்றுக்கும் சேர்ந்த "பிரதேச ஸ்தாபனம்" என்பதையும் "ஊர் ஸ்தாபன"மல்ல என்பதையும் மறந்து விடக் கூடாது. "டவுன்" எல்லைக்குள் இருக்கும் கிராமங்களுக் கும் நகரங்களுக்கும் தனியாக "ஊர் ஸ்தாபனங்கள்" இருக்கலாம். அந்த ஊர் ஸ்தாபனங்களின் அமைப்பு அமெரிக்காவில் மற்ற பாகங்களிலுள்ளது போலவே இருக்கிறது.

பல பெரிய நகரங்கள் தமக்கென்று தனியாக நகர சபையை அமைத்துக் கொண்டு அதே சமயத்தில் "டவுன் சர்க்காரின்" தலை நகராகவும் இருக்கின்றன. ஸ்டாம்போர்ட் நகரத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

அது பேர்பீல்ட் டவுனுக்கு சுமார் 20 மைலுக்கப்பால் இருக்கிறது. அங்கு "ஸ்டாம்போர்ட் டவுன் சர்க்கார்" என்ற ஒரு சுயாட்சிஸ்தாபனமும் "ஸ்டாம்போர்ட் நகரம்" என்ற ஒரு சுயாட்சி ஸ்தாபனமும் இருக்கிறது! "ஸ்டாம் போர்ட் டவுன்" ஜனத்தொகை சுமார் 70,000; ஸ்டாம் போர்ட் நகரத்தின் ஜனத்தொகை சுமார் 60,000. அதா வது ஸ்டாம் போர்ட் டவுன் என்பது ஸ்டாம் போர்ட் நகர மும் அதன் சுற்று வட்டங்களும் சேர்ந்தது. அங்குள்ள நகர சர்க்கார் "கவுன்ஸில் மேயர்" முறைப்படி நிர்வகிக் கப்படுகிறது. "டவுன் சர்க்கார்" டவுன் மீட்டிங் முறைப் படி நடக்கிறது. நகரின் கல்வியும், நீதிமன்றங்களும் டவுன்

சர்க்காரால் நிர்வகிக்கப்படுகின்றன. நகரின் விஸ்தீரணம் 8 சதுரமைல்; டவுனின் விஸ்திரணம் 38 மைல். டவுனில் சொத்து வரி விதிக்கக்கூடிய சொத்துக்கள் மதிப்பு சுமார் 160 லக்ஷம் டாலர்; இதில் நகரத்திலுள்ள சொத்து மதிப்பு சுமார் 110 லக்ஷம் டாலர்.

நகரிலுள்ளவர்கள் தம் சொத்துமதிப்பின் மீது 1000க்கு சுமார் 15 வீதம் வரி செலுத்துவதோடு, டவுன் சர்க்காருக்கும் 1000-க்கு சுமார் 17 வீதம் நகரத்துக்குத் தீர்வை செலுத்தவேண்டும்.

இம்மாதிரி ஒரே பெரிய நகரில் இரண்டு ஸ்தல ஸ்தாபனங்கள் இருப்பதும் ஒவ்வொன்றின் அமைப்பு ஒவ்வொரு வகையாக இருப்பதும் நமக்கு விசித்திரமாகத் தோன்றும். நியூ இங்கிலாந்தில் " டவுன் " என்பது அவர்களது சரித்திரத்தில் தோய்ந்து போயிருப்பது தான் இந்த விசித்திரத்துக்குக் காரணம்.

அடுத்த பாராவில் நாம் கவனிக்கப் போகும் நகரத்தில் இதைவிட விசித்திரமான ஒரு நிலைமையைக் காணலாம்.

பிரிட்ஜ்போர்ட் "நகரமும்-டவுனும்"

ஸ்டாம்போர்டில் டவுன் சர்க்காரின் எல்லையும் நகர சர்க்காரின் எல்லையும் வெவ்வேறு என்று பார்த்தோம். பிரிட்ஜ்போர்ட் என்ற நகரம் அப்படியல்ல. நகர சர்க்காரின் எல்லையும் டவுன் சர்க்காரின் எல்லையும் ஒன்றுதான். ஆனாலும் அங்கு நகர சர்க்கார் வேறு, டவுன் சர்க்கார் வேறு இருக்கின்றன. ஆனால் வரி மட்டும் ஒரே திட்டம் தான். அந்த நகர சட்டநிபுணருடன் இதைப்பற்றி நான் விவாதித்தபோது அவர் இதன் ரகசியம் என்னவென்று கூறினார். "சுமார் $1\frac{1}{2}$ லக்ஷம் ஜனத்தொகையுள்ள இந்த டவுனில் தனியாகப் பிரிக்கக்

கூடிய இடங்களே இல்லை. ஆகையால்தான் டவுன், நகரம் இரண்டும் ஒன்றாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஊருக்கு நகர சபை மட்டும் இருந்தால் போதும். ஆனால் "டவுன் சர்க்கார்" என்று தனியாக ஒன்று எதற்கு என்று கேட்பீர்கள். டவுன் சர்க்கார் அனுவசியம்தான், ஆனால் "டவுன்" என்பது இங்கு ஒரு சம்பிரதாயம். அதோடு டவுன் அதிகாரிகள் என்று சிலர் தம்மை ஜம்பமாகக் காண்பித்துக் கொள்ள முடிகிறது. இதற்காகத் தான் டவுன் சர்க்கார்! நியூ இங்கிலாந்தில் கௌன்டி சர்க்கார் என்று ஒன்று இருந்து வருவதும் இதே போன்றுதான்."

நியூ இங்கிலாந்து கௌன்டிகள்

மேலே பிரஸ்தாபித்த 3 டவுன்களும் "பேர்பீல்ட்" கௌன்டியைச் சேர்ந்தவையே. கோர்ட்டுகள் நடத்துவதையும் ஜெயில்களை நிர்வகிப்பதையும் தவிர, இவற்றுக்கு வேறு வேலை எதுவுமே இல்லையென்று சொல்லலாம்.

ஒவ்வொரு கௌன்டியிலும் 3 கமிஷனர்களும் ஒரு பொக்கிஷதாரும், எடைகள் அளவு கருவிகளுக்கு முத்திரை போடுபவர் ஒருவரும், ஒரு சிறையதிகாரியும், ஒரு போலீஸ் தலைவரும் இன்னும் சில சில்லரை அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மாகாண சர்க்கார் நியமிக்கும் நீதிபதிகள் தமது கோர்ட்டு வேலையை நடத்துவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பது தவிர, கௌன்டி சர்க்காருக்கு உருப்படியாக வேலை எதுவுமில்லை.

கல்வியில் ஸ்தல சுயாட்சிப் பொறுப்பு

அமெரிக்காவில் எல்லா மாகாணங்களிலும் எல்லா இடங்களிலும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி முறை இருக்கிறது.

சில மாகாணங்களில் 14 வயதுவரை ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் பள்ளிக்கூடத்துக்குப் போய்த் தீர வேண்டும். பெருவாரியான மாகாணங்களில் 16 வயது வரை கட்டாயக் கல்வி. பல மாகாணங்களில் 12-வது வகுப்புவரை (ஹைஸ்கூல் படிப்பு முடிய) கல்வி இலவசமாகப் போதிக்கப்படுகிறது.

நகரங்களில் கட்டாயக் கல்விச் செலவில் பெரும் பகுதியை அந்தந்த நகரத்து "பள்ளிக்கூட டிஸ்டிரிக்ட்" தான் ஏற்றுக் கொள்கிறது. கிராமப் பிரதேசங்களிலும் விவசாயப் பிரதேசங்களிலும் சர்க்கார் சற்று அதிக மானியம் அளித்தாலும், செலவில் பெரும் பகுதி அந்தப் பிரதேசத்திலுள்ள வரி மூலமே சமாளிக்கப்படுகிறது.

பல மாகாணங்களில் கல்விக்குத் தனியாக ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. சிலவற்றில் ஸ்தல ஸ்தாபன சர்க்கார் கல்வியையும் கவனித்துக் கொள்கிறது. மாண்ட்கோமரியில் இருப்பது முதலில் சொல்லிய முறை; அதாவது கல்விக்கு என்று அங்கு தனியாக ஸ்தல ஸ்தாபன முறை இருக்கிறது.

ஒவ்வொரு கௌன்டியும் "ஸ்தல ஸ்தாபன சர்க்கார்" காரியங்களுக்காகப் பல டவுன்ஷிப்புகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது போல, கல்வி நிர்வாகத்துக்காகப் பல கல்வி டிஸ்டிரிக்டுகளாக (அல்லது "கல்வி பிர்க்காக்களாக") பிரிக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக மாண்ட்கோமரி கௌன்டியை எடுத்துக்கொள்வோம். அங்கு 3 நகரங்களும் 14 டவுன் ஷிப்புகளும் இருப்பதாக ஏற்கனவே கூறியுள்ளோம். அந்த மாண்ட்கோமரியைச் சேர்ந்த 12 கிராமங்களும் டவுன் ஷிப்புகளில் உள்ள சிறு ஊர்கள்; அதாவது 2000 முதல் 400 வரை ஜனத்தொகையுள்ளவை.

கல்வி நிர்வாகத்துக்காக மாண்ட்கோமரி கௌன்டி 22 பிர்க்காக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

டேய்ட்டன், மியாமிஸ்பர்க், ஒக்வுட் ஆகிய மூன்று நகரங்களும், வெஸ்ட்கார்ல்டன் கிராமமும் கல்விவிஷயத்தில் பூர்ண சுயாட்சியுள்ளவையாக இருக்கின்றன.

மீதமுள்ள 18 கல்வி பிர்க்காக்கள் மாண்ட்கோமரி கௌன்டி கல்வி போர்டின் மேற்பார்வையில் பிர்க்கா கல்வி போர்டுகள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. (இவை விவசாயப் பிரதேசத்துக் கல்வி பிர்க்காக்கள்)

பிர்க்கா கல்வி போர்டு

டவுன்ஷிப் எல்லையும் "கல்வி பிர்க்கா" எல்லையும் ஒன்றையொன்று ஒட்டினதாக இருப்பதில்லை. ஆகையால் ஒரே டவுன்ஷிப்பில் சில பிரதேசங்கள் ஒரு கல்வி பிர்க்காவில் இருக்கும்; மற்ற பிரதேசங்கள் வேறொரு கல்வி பிர்க்காவில் இருக்கும். ஒவ்வொரு பிர்க்காவும் சுமார் 20 சதுரமைல் இருக்கும். (அதாவது நீள அகலம் சுமார் 4½ மைல்)

ஒவ்வொரு கல்வி பிர்க்காவுக்கும் ஒரு கல்வி பிர்க்கா போர்ட் இருக்கிறது. அந்தப் பிரதேசத்திலுள்ள வோட்டர்கள் ஒரு பிர்க்காக் கல்வி போர்டைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்கள் நான்குவருஷ காலம் பதவி வகிக்கிறார்கள். தமது பிர்க்காவிலுள்ள சொத்துக்களின்மீது வரி விதித்து இந்தப் பிர்க்கா போர்டுகளை

அங்குள்ள பள்ளிக்கூடங்களை நடத்துகின்றன. பள்ளிக் கூடங்களின் தலைமை ஆசிரியர்கள், கௌன்டி கல்வி சூபரின்டென்டைக் கலந்து கொண்டு உபாத்தியாயர்களைத் தேர்ந்து பிர்க்கா போர்டிடம் சமர்ப்பிக்கிறார்கள். உபாத்தியாயர்கள் நியமனம் பிர்க்கா போர்டில் அங்கீகரிக்கப்படவேண்டும்.

பள்ளிக்கூடங்களை நடத்துவது பிர்க்கா போர்டுகளே; மேற்பார்வை யதிகாரம் மட்டுமே கௌன்டி போர்டிடம் விடப்படுகிறது. கௌன்டி கல்வி போர்டும் அந்த 18 பிர்க்காக்களிலுமுள்ள வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. கௌன்டி போர்ட் மெம்பர்கள் 5 பேர். அவர்களது பதவிக்காலம் 5 வருஷம்.

ஏதேனும் ஒரு பிர்க்காவில் ஜனத்தொகை 3,000மும் வரிக்குட்படக்கூடிய சொத்தின் மதிப்பு 500,000 டாலரும் இருந்தால், அந்தக் கல்வி பிர்க்காவானது (நகரங்களிலுள்ள கல்வி பிர்க்கர்வைப் போல) கௌன்டியின் மேற்பார்வை தனக்கு வேண்டாம் என்று நிராகரிக்க முடியும்.

சில கல்வி பிர்க்காக்களில் மாணவர்கள் தொகை 50-க்கும் குறைவாக இருக்கும். சில பிர்க்காக்களில் மாணவர்கள் தொகை 1,300-க்கும் அதிகமாக இருக்கிறது. இவ்வாறு பல வேற்றுமைகள் இருப்பினும், ஒவ்வொரு கல்வி பிர்க்காவும் தன் பிர்க்காவில் வரி விதித்து, பள்ளிக்கூடங்கள் அமைத்துக் கொள்வதில் சுதந்திரம் வைத்துக் கொள்கிறது.

பிர்க்காக்களிடையே கூட்டுறவு

சில பிர்க்காக்களில் 6 வகுப்பு வரையில் சொல்லிக் கொடுப்பதற்குத் தான் பள்ளிக்கூடங்கள் இருக்கும். அப்படி யிருந்தால் அங்குள்ள சிறுவர்கள் 6-வது



டேய்டனிலுள்ள நேஷனல் காஷ் ரெஜிஸ்டர் கம்பெனி "சமூகத்தொடர்பு அதிகாரி" ஸ்ரீ டபிள்யூ. எம். காட்டனும் ஸ்ரீ சிவராமனும், மாண்ட்கோமரி கவுண்டியிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் அமைப்பு முறைகள் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

வகுப்பு வரையில் தமது பிர்க்காவில் படித்து விட்டு, மேல் படிப்புக்கு அடுத்த பிர்க்காவுக்குப் போகலாம். அப்போது அந்த மாணவர்களின் சம்பளத்துக்கு ஈடான ஒரு தொகையை, அந்த அடுத்த பிர்க்கா கல்வி போர்டுக்கு ஈடு செய்து கொடுப்பது உயர்தரப் பள்ளிக்கூடம் நடத்தாத பிர்க்காவின் கடமை.

உதாரணமாக மாண்ட்கோமரி கௌன்டியிலுள்ள "பட்லர்" என்ற கல்வி பிர்க்காவை எடுத்துக் கொள்வோம். அந்தப் பிர்க்காவில் மாணவர்கள் தொகை சுமார் 350. ஆனால் அங்கு 6-வது வகுப்புக்கு மேற்பட்ட பள்ளிக்கூடம் இல்லை. அந்தப் பிர்க்காவிலுள்ள குழந்தைகள் "ரான்டால்ப்" என்ற கல்வி பிர்க்காவிலுள்ள உயர்தரப் பள்ளிக்கூடத்துக்குச் செல்கின்றன. இதற்காகப் பட்லர் 'பிர்க்கா கல்வி போர்ட்' ரான்டால்ப் பிர்க்கா போர்டுக்குப் பணம் கொடுக்கிறது.

பணப் பொறுப்பு

கல்விக்காக அமெரிக்கர் எவ்வளவு தூரம் வரி செலுத்தத் தயாராயிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. பட்லர் கல்வி பிர்க்காவிலுள்ள வன்டாலியா என்ற கிராமத்தை எடுத்துக் கொண்டால், அந்தப் பிரதேசத்தில் சொத்து வைத்துக் கொண்டுள்ள ஒவ்வொருவரும் கல்விக்காகச் சொத்தின் மதிப்பில் 1000-க்கு 11 டாலர் வீதம் வரி செலுத்துகிறார்கள். இவர்கள் கௌன்டி சர்க்காருக்காகவும் டவுன்ஷிப் சர்க்காருக்காகவும் கிராம சர்க்காருக்காகவும் கொடுக்கும் வரி முறையே $3\frac{1}{4}$; $6\frac{1}{2}$; $7\frac{1}{2}$. அதாவது எல்லா ஸ்தாபனங்களுக்குமாக எவ்வளவு கொடுக்கிறார்களோ, அதைப் போலக் கிட்டத்தட்ட முக்கால்பங்கு கல்விக்காகக் கொடுக்கிறார்கள். டேய்ட்டன் நகரத்தை எடுத்துக்

கொண்டால், அவர்கள் நகர சர்க்காருக்கும் கௌன்டி சர்க்காருக்குமாகக் கொடுக்கும் சொத்து வரி 1000-ச்கு 15 டாலர்; கல்விக்காகக் கொடுப்பது சுமார் 9 டாலர் அதாவது பாதிக்கு அதிகம் (சென்னை நகரத்துடன் ஒப்பிட்டால் நகரவாசிகள் நகரத்திலுள்ளோரின் கல்விக்காகக் கொடுக்கும் சொத்து வரி இதர நிர்வாகத்துக்காகக் கொடுப்பதில் ஆறிலொரு பங்குதான்.)

பள்ளிக்கூட மோட்டார் பஸ்கள்

கிராமப் பிரதேசங்களில் வீடுகள் ஒன்றுக்கொன்று கால் மைல் அரை மைல் தூரத்தில் இருப்பதால் பள்ளிக்கூடம் இருக்கும் இடத்துக்கும் வீட்டுக்கும் நாலைந்து மைல் தூரம் கூட இருக்கும். இந்தச் சிறுவர்களை வீட்டிலிருந்து பள்ளிக் கூடத்துக்குக் கொண்டு வருவதற்கும் திருப்பி யனுப்புவதற்கும், ஒவ்வொரு "கல்விபிர்க்காவும்" மோட்டார் பஸ்கள் வைத்துக் கொண்டிருக்கிறது. "பட்லர்" என்ற பிர்க்காவில் 10 பஸ்கள் இருக்கின்றன. பிர்க்காவின் விஸ்தீரணம் குறைவாக இருந்தால் 2 பஸ்கள் தான் இருக்கும். சராசரி ஒவ்வொரு பஸ்ஸூம் 50 பேரை ஏற்றிக்கொள்ளும். சுமார் 6000 மாணவர்களுக்காக மாண்ட்கோமரியிலுள்ள கல்வி போர்டுகள் 107 பஸ்கள் வைத்துக்கொண்டிருக்கின்றன. இதற்காக ஒரு வருஷத்தில் செலவாகும் பணம் சுமார் 1,06,000 டாலர். (அதாவது ஒரு மாணவனுக்கு சுமார் 6½ டாலர் அல்லது 22 ரூபா செலவாகிறது.)

மேலே பிரஸ்தாபித்த 18 பிர்க்காக்கள் தவிர, மீதமுள்ளவை நகர கல்வி பிர்க்காக்கள். டேய்ட்டன் நகர கல்வி பிர்க்கா டேய்ட்டன் நகர எல்லைக்கு வெளியேயும் வியாபிக்கிறது. இந்த நகரில் கல்விக்காகச் செலவிடப்

டும் பொதுப்பணம் சுமார் 41 லட்சம். அதில் மாகாண சர்க்காருக்கும் மத்ய சர்க்காருக்கும் கொடுப்பது $12\frac{1}{2}$ லக்ஷம்தான்.

கவனிக்க வேண்டிய கொள்கைகள்

அமெரிக்கா, கல்வியில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதைக் குறிப்பிடுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. (1) கல்வியும் ஸ்தல ஸ்தாபனங்கள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. (2) கல்விக்கு என்று தனியாக வரி வசூலித்துத் தனியாக நிர்வகிக்கிறார்கள். (3) நகரத்தின் சர்க்கார் அமைப்புப் பற்றின கட்சி வாதங்களிலிருந்து கல்வியைக் காப்பாற்றுவதற்காக, தனியாக நகர சபைக்குச் சம்பந்தமில்லாமலே கல்விக்கென்று தனிச் சுயாட்சி ஸ்தாபனம் வைத்துக் கொள்கிறார்கள். (4) சுயாட்சியின் முக்கிய அம்சம் ஆங்காங்கு உள்ள நிலைமைக்கு ஏற்பப் பணப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வது; ஆகையால் கல்விக்காக வரி விதிக்கும் பொறுப்பும் ஸ்தல ஸ்தாபனங்கள் மீதே சுமத்தப்பட்டிருக்கிறது. கட்டாயக் கல்வியின் நிர்வாகமும் செலவில் பெரும்பகுதியும் ஆங்காங்கு வசிக்கும் ஜனங்கள் மூலமே வரியாக வசூலிக்கப்படுகிறது என்ற சில அம்சங்களைக் குறிப்பிடுவது தான் இக்கட்டுரையின் நோக்கம்.

நாம் இங்கு விவரித்த முறையே பல மாகாணங்களில் இருந்து வருகிறது. ஆனால் "நியூ இங்கிலாந்து" என்று சொல்லப் படும் வடகிழக்கு மாகாணங்களில் ரோடுகள், சுத்தம், போலீஸ், இவற்றைக் கவனிக்கும் ஸ்தலஸ்தாபனமே கல்வியையும் நிர்வகிக்கிறது. டவுன் கூட்டத்தில் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும்போது ஒரு டவுன் கல்வி போர்டையும் தேர்ந்தெடுக்கிறார்கள். நகரங்

களின் கல்வியைக்கூட டவுன் கல்வி போர்டே நடத்து கிறது. உதாரணமாக ஸ்டாம்போர்ட் நகரின் பள்ளிக் கூடங்களை ஸ்டாம்போர்ட் டவுன் கல்விபோர்டே நடத்து கிறது. இந்த டவுன் போர்ட், டவுன் கூட்டத்தின் ஆதிக் கத்துக்கு உட்பட்டதே.

*   *   *   *

மாண்ட்கோமரி கௌண்டியில் ஆரோக்கிய வசதி பற்றிய பொறுப்பு, சிறிய கிராமங்களிடமும் டவுன் ஷிப்புகளிடமும் விடப்படுவதில்லை. கௌண்டி சர்க்கா ரிடமும் நகர சர்க்கார்களிடமும்தான் இந்தப் பொறுப்புக் கள் ஒப்படைக்கப்படுகின்றன.

ஆரோக்கியமும் கஷ்ட நிவாரணமும்

கல்வி சம்பந்தமாக ஸ்தல ஸ்தாபன சர்க்காருக்குப் புறம்பான ஒரு தனிச் சுயாட்சி ஸ்தாபனம் இருப்பது போல, கிராமப் பிரதேசங்களில் ஆரோக்கிய வசதிக் காகத் தனி ஸ்தாபனம் இருக்கிறது.

அந்தக் கௌன்டியை வசதிக்காக 4 பிரிவுகளாக நிர்வகிக்கிறார்கள். (1) டேய்ட்டன் நகரம். (2) டேய்ட்டன் கல்வி பிர்க்கா. (3) ஒக்வுட் நகரம். (4) இந்தப் பிர தேசங்கள் நீங்கலாக மீதமுள்ள கௌன்டி பிரதேசம்.

டேய்ட்டன் கல்வி பிர்க்கா என்பது டேய்ட்டன் நகரப் பிரதேசத்துக்கு அப்பாலும் பரவி நிற்கிறது என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். மியாமிஸ்பர்க் என்ற நகருக்கு ஸ்தல ஸ்தாபன சர்க் கார் தனியாக இருப்பினும், ஆரோக்கிய வசதி விஷயத் தில் அதன் தேவைகள், "கௌன்டி ஆரோக்கிய டிஸ்டிரிக்ட்" என்ற ஸ்தாபனத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றன.

ஆரோக்கிய போர்டுகள்

டேய்ட்டன், ஒக்வுட் இரண்டையும் நீக்கிவிட்டால் மீதமுள்ள கௌன்டி பிரதேசத்தில் ஜனத்தொகை சுமார் 80,000 தான். இந்த 80,000 ஜனத்தொகையும் சுமார் 400 சதுரமைலில் பரவலாகச் சிதறிக் கிடக்கிறது. இந்தப் பிரதேசத்திலுள்ள 14 டவுன்ஷிப்புகளின் போர்டு தலைவர்களும் கிராம சர்க்கார்களின் தலைவர் களும் சேர்ந்து ஓர் ஆலோசனைப் போர்டாக இருந்து கொண்டு 5 பேர் கொண்ட ஓர் "ஆரோக்கிய போர்டை"

ஏற்படுத்துகிறார்கள். இந்தக் கௌன்டி ஆரோக்கிய போர்ட், கௌன்டியின் ஆரோக்கிய நிர்வாகத்துக்கு ஓர் ஆரோக்கிய அதிகாரியை நியமித்து, அவருக்கு வேண்டிய சிப்பந்திகளை நிர்ணயித்து, ஒரு பட்ஜெட்டைத் தயாரித்து, கௌன்டி ஸ்தல ஸ்தாபன சர்க்காரின் பட்ஜெட் கமிஷனுக்கு அனுப்புகிறது. அந்தப் பட்ஜெட்டைக் கௌன்டி பட்ஜெட் கமிஷன் அங்கீகரித்த பிறகு அந்தத் தொகையானது ஜனத்தொகை வீதாசாரப்படி, கிராம சர்க்காரிடமிருந்தும் டவுன்ஷிப் சர்க்காரிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது.

மாண்ட்கோமரி கௌன்டி, கிராமப் பிரதேசத்தின் ஆரோக்கிய இலாகாவில் ஒரு சுகாதார எஞ்சினீயர், ஒரு சுகாதார இன்ஸ்பெக்டர், 6 ஆரோக்கிய நர்ஸுகள் இருக்கிறார்கள்.

மாகாண சர்க்கார் உதவி

இந்த ஆரோக்கிய வசதிச் செலவின் சில அம்சங்களுக்கு மாகாண சர்க்காரும் யு. எஸ். சமஷ்டி சர்க்காரும் உதவி செய்கிறது. உதாரணமாக இந்தக் கௌன்டி ஆரோக்கிய போர்டின் வருஷாந்தரச் செலவு சுமார் 25,000 டாலர். இதில் 73 சதவிகிதம் அந்தப் பிரதேசத்து ஸ்தல ஸ்தாபனங்களிடமிருந்து கிடைக்கிறது. 3 சதவிகிதம் சமஷ்டி சர்க்காரிலிருந்து கிடைக்கிறது. 22 சதவிகிதம் மாகாண சர்க்கார் தரும் மானியம்.

ஆரோக்கிய வசதிகளை விவரிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஆரோக்கிய வசதிகள் சம்பந்தமாக ஸ்தல சுயாட்சிக் கொள்கை எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பதை, அதாவது அமைப்பு முறையை விவரிப்பது மட்டுந்தான் இக்கட்டுரையின் நோக்கம். ஆயினும் அமெரிக்காவில் ஆரோக்கிய வசதிபற்றி

என்ன மனப்பான்மை இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம். ஜனத்தொகையில் 16,000-க்கு ஓர் ஆரோக்கிய இன்ஸ்பெக்டர் இருக்க வேண்டும் என்பது "அமெரிக்க தேசிய ஆரோக்கிய சங்கம்" நிர்ணயித்துள்ள லக்ஷியம். ஆனால் மாண்ட்கோமரி கௌண்டியில் 40,000 ஜனத் தொகைக்கு ஓர் இன்ஸ்பெக்டர்தான் இருக்கிறார். நர்ஸுகள் தொகை விகிதமும் அப்படித்தான்.

ஆரோக்கியத்துக்காகச் செலவிடும் பணம் ஜனத்தொகை வீதாச்சாரத்தில் நபர் 1-க்கு 1 டாலராவது இருக்கவேண்டும். நபர் 1-க்கு $2\frac{1}{2}$ டாலர் செலவிட்டால்தான் சரியானபடி ஜனங்களின் ஆரோக்கியத்தைக் கண்காணிக்க முடியும் என்பது "தேசீய ஆரோக்கிய சங்கத்தின்" கருத்து. ஆனால் மாண்ட்கோமரி கௌண்டி ஆரோக்கிய டிஸ்டிரிக்ட்" நபருக்கு சுமார் $\frac{1}{2}$ டாலர்தான் செலவிடுகிறது. ஒவ்வொரு பிரசவத்திலும் நர்ஸுகள் நான்கு தடவையாவது தாயாரையும் குழந்தையையும் பார்த்து வரவேண்டும் என்பது தேசீய ஆரோக்கிய சங்கத்தின் கருத்து. மாண்ட்கோமரி கௌண்டியில் இரண்டு தடவை போவதற்கு மட்டும்தான் நர்ஸுகள் இருக்கிறார்கள். நர்ஸுகளின் தொகை, தேவைக்குக் குறைவாக இருக்கிறது.

ஆரோக்கிய இலாக்காவின் வேலைகள்

"ஆரோக்கிய வசதி" என்பது அமெரிக்காவில் 6 அம்சங்கள் கொண்டது. (1) ஒட்டுவாரொட்டியாகப் பரவக் கூடிய தொத்து நோய்களை ஒடுக்குவது. (2) பிரசவத்துக்கு முன்பும் பின்னரும் தாய்மார்களைக் கவனித்துச் சிகிச்சைக்குச் சிபார்சு செய்வது; பள்ளிச் சிறுவர்களின் ஆரோக்கியத்தை அடிக்கடி ஆராய்வது; நோய்க் குறிகளுள்ளவர்களாகக் காணப்படும் தனி நபர்களை

அணுகி அவர்களுக்கு வைத்திய யோசனைகள் கூறு வது. (3) உணவுப் பொருள்களைப் பரிசீலனை செய் வது; வியாதிக்கு இடம் தரக்கூடிய குளம் குட்டை, நீர்த் தேக்கம், மலம் முதலியன இருக்கின்றனவா என்பதைப் பார்த்து அவற்றைச் சுத்தப்படுத்த ஏற்பாடு செய்வது. (4) ரத்தப் பரீக்ஷை முதலியவற்றுக்கான ஆய்வுச்சாலை கள் அமைப்பது. (5) ஜனன மரணம், வியாதி பற்றிய புள்ளி விவரங்களைக் கவனித்து வருவது. (6) ஆரோக் கியக் கல்வி. இந்த ஆறில் சிலவற்றைத்தான் மாண்ட் கோமரி கௌண்டியில் கவனிக்கிறார்கள்.

டேய்ட்டன் நகரில்

டேய்ட்டன் நகரில் ஆரோக்கிய வசதிகள் நகர சபை யின் ஓர் இலாக்கா மூலம் நிர்வகிக்கப்படுகிறது. அங்கு "ஆரோக்கிய ஆலோசனை போர்ட்" என்று தனியாக ஒரு ஸ்தாபனமும் இல்லை. ஆரோக்கிய இலாக்காவுக்கும் கஷ்ட நிவாரண இலாக்காவுக்கும் பொதுவாக ஓர் ஆரோக்கியக் கமிஷனர் இருக்கிறார். இவர் நகரின் "மானேஜருக்கு" ஜவாப்தாரி. ஆனால் தனியாக ஆரோக்கிய இலாக்காவுக்கென்றே ஒரு தனிக்கமிஷனர் வேண்டும் என்று அங்குள்ள பிரமுகர்கள் நினைக் கிறார்கள்.

"ஆரோக்கிய" வசதிக்காக நகர சபை சுமார் 130,000 டாலர் செலவிடுகிறது. அது தவிர "நர்ஸு கள் சங்கம்" 30,500 டாலர் தருகிறது. சுமார் 215,000 ஜனத்தொகைக்கு டேய்ட்டன் நகரின் ஆரோக்கிய இலாக்காவில் 5 டாக்டர்களும் 35 ஆரோக்கிய நர்ஸு களும் இருக்கிறார்கள். டேய்ட்டன் நர்ஸுகள் சங்கம் நன்கொடை மூலம் நடக்கும் ஒரு ஸ்தாபனம். (இங்கு

"ஆரோக்கியம்" என்பதும், ஆஸ்பத்திரி, வைத்திய ஏற்பாடும் வெவ்வேறு விஷயம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.)

டேய்ட்டன் "கல்வி பிர்க்காவின்" ஆரோக்கியக் கண்காணிப்பும், டேய்ட்டன் நகர ஆரோக்கியக் கமிஷனர் மேற்பார்வையிலேயே நடக்கிறது.

"கஷ்ட நிவாரணம்" "யோகக்ஷேம உதவி"

பிரிட்டனிலும் சரி, அமெரிக்காவிலும் சரி, பிச்சையெடுப்பதும் அதை யனுமதிப்பதும் பெரிய அநாகரிகம் என்றே மதிக்கப்படுகிறது. பிழைக்க வழியில்லாமல் அல்லது பிழைக்கத் தெரியாமல் பட்டினி கிடப்போரை "ஏழைகள் விடுதி" களில் வைத்துச் சோறுபோட்டு ஏதேனும் ஒரு வேலை செய்யும்படி ஏற்பாடு செய்வது, பிரிட்டனில் நாலைந்து நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய வழக்கம். சமீபகாலத்தில் அந்த முறையில் பல சீர்திருத்தங்கள் செய்து, ஏழைகள் சாவடியிலிருப்பது நிமித்தமாக, அவ்வேழைகளின் மனித கௌரவம் குறைந்துவிடாதபடி பார்த்துக் கொள்வது சமூகத்தின் கடமையாக மதிக்கப்பட்டது.

பட்டினியால் வாடுபவர்களுக்குத் தண்டச் சோறு போடுவதோடு சமூகத்தின் கடமை தீர்ந்துவிடவில்லையென்றும், அந்தப் பரிதாப நிலைமை ஏற்படுவதற்கு முன்னதாகவே கஷ்ட நிலையிலுள்ளோருக்கு உதவி செய்து, அவர்கள் "தன்பலம்" கொண்டே தமது நிலைமையைச் சமாளித்துக்கொள்ள உதவி செய்ய வேண்டும் என்றும் சமூகம் நினைத்தது.

ஆகவே ஏழைகள் கஷ்ட நிவர்ரணம் என்ற லக்ஷியம் "ஜனங்களின் யோக க்ஷேம பாதுகாப்பு" என்ற சிறந்த உருவத்தில் புத்துயிர் பெற்றது.

பல சமூக ஊழியர்கள் இந்தத் துறையில் சமூக உணர்ச்சியைத் தூண்டி, பணம் திரட்டி, சர்க்காருக்குச் சம்பந்தமில்லாமலே இந்தத் தொண்டை நிறைவேற்றி வந்தார்கள்.

1929-ம் ஆண்டில் அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது வேலையில்லாக்கஷ்டம் அதிகரித்தது. வர்த்தக மந்தம் காரணமாக தனி நபர்களின் ஈகையும் குறைய ஆரம்பித்தது. பிறகு சமஷ்டி சர்க்கார் இவ் விஷயத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தது. "சமூக பாதுகாப்புச் சட்டம்" பிறந்தது. அதுவரையில் நடந்த சமூக சேவை இன்னும் நீடிப்பதற்கும் அதிகரிப்பதற்கும் சமஷ்டி சர்க்கார் பண உதவி செய்ய முன்வந்து, அவ்வுதவி கிடைப்பதற்குத் தம்மை லாயக்காக்கிக்கொள்ளும்படி மாகாண சர்க்கார்களைத் தூண்டியது.

இப்போது ஒவ்வொரு கௌன்டியிலும், முக்கியமான நகரங்களிலும் "ஏழைகள் சாவடி" மட்டுமல்ல, வேறுபல யோகக்ஷேம பாதுகாப்பு உதவிகளுக்காகத் தனி இலாகா இருக்கிறது. "Welfare and Public Assistance" என்று இதற்குப் பெயர்.

இந்தத் துறையில் இந் நகர சபைகள் செலவிடும் பணம், ரோடுகளுக்காகச் செலவிடும் பணத்துக்குச் சமமாக இருக்கிறது!

பெரிய நகரங்களும் கௌன்டி சர்க்கார்களும் தான் இந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்றன.

இந்த யோக க்ஷேம பர்துகாப்பின் முக்கிய அம்சங்கள் :—

(1) கௌன்டி "ஏழைகள் விடுதி" (2) குடும்பத்தில் பொருளீட்டுபவர் இல்லாவிட்டால் அந்தக் குடும்பத்துக் குழந்தைகள் போஷணையோ வாழ்க்கை வசதிகளோ, பராமரிப்போ குறைந்து போகாமல் பாதுகாப்பது. (3) குருடர்களுக்கு உதவி. (4) வயது முதிர்ந்தோர்க்கு உதவி. (5) பணமில்லாதவர்களுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்குப் பண உதவி முதலியன.

இந்தத் துறையில் மாண்ட்கோமரி கௌன்டியில் செலவிடப்பட்ட தொகை 11, 112, 177 டாலர் (சுமார் 3 கோடி ரூபாய்; ஜனத்தொகை விகிதாச்சாரப்படி நப ருக்கு சராசரி 100 ரூபாய் ஆகிறது.) இந்தச் செலவில் சுமார் 455,000 டாலர் டேய்ட்டன் நகரின் வரிப் பணத் திலிருந்தும், சுமார் 629,000 கௌன்டியின் வரிப்பணத் திலிருந்தும், 1,549,000 டாலர் ஓஹையோ மாகாணத் தின் வரிப் பணத்திலிருந்தும், சுமார் 6,938,000 சமஷ்டி சர்க்காரிலிருந்தும் செலவாயிருக்கிறது. வேலை கொடுப் பதற்காகச் சர்க்கார் நடத்தும் கட்டிடவேலை முதலிய வற்றின் மூலம் சுமார் 1,405,000 டாலர். இது தவிர தனி ஸ்தாபனங்களும் இது போன்ற தொண்டுகளில் ஈடுபட் டிருக்கின்றன.

அமெரிக்காவில் சமூகப் பர்துகாப்புக்காக எவ் வளவு பணம் செலவிடப்படுகிறது என்பதையும்,

சமஷ்டி சர்க்கார் அதில் எவ்வளவு பணம் செலவிடு கிறது என்பதையும் இதிலிருந்து ஊகிக்கலாம். இந்த "யோக க்ஷேம பாதுகாப்பு" சம்பந்தமாகத் தனியாகப் பல கட்டுரைகள் எழுதலாம். இந்த வேலையில் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பு இருப்பதைக் குறிப்பிடு வதற்கு மட்டுமே இங்கு சில தகவல்கள் தந்திருக் கிறோம்.

ஸ்தல ஸ்தாபனங்கள் செய்யும் தொண்டுகளையும், அமைப்பு முறையையும் இதுவரை கூறினோம். அமெரிக்க ஸ்தல ஸ்தாபனங்களின் வரவு செலவு நிலைமை சம்பந்தமாகச் சில பொது விஷயங்களை இனிக் கவனிப்போம்.

ஸ்தல ஸ்தாபனங்கள் நிதி நிலைமை

அமெரிக்காவில் ஸ்தல ஸ்தாபனங்களின் முக்கியமான வருமானம் சொத்து வரியே.

சொத்து வரியென்பது வீடுகளின் மீது மட்டுமல்லாமல் விவசாய நிலத்தின் மீதும் விதிக்கப்படுகிறது.

சில மாகாணங்களில் வீடு, வயல் இவற்றின் மீது மட்டுமல்லாமல் — வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள், பாங்கில் போட்டிருக்கும் பணம், கம்பெனி மூலதனப் பங்குப் பத்திரங்கள் இவற்றின் மீதும் சொத்துவரி விதிக்கப்படுகிறது. (உதாரணத்துக்கு 165-ம் பக்கத்திலுள்ள அனுபந்தத்தைப் பார்க்கவும்.)

சொத்து வரியே முக்கிய வரி

சொத்துவரி முழுதும் ஸ்தல ஸ்தாபனத்துக்கே போகிறது. மாகாண சர்க்கார் சொத்துவரி விதிக்கக் கூடிய சொத்து மிகவும் சொற்பமே.

உதாரணமாக எல்லா மாகாணங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்கள் வசூலிக்கும் சொத்து வரி சுமார் 432 கோடி டாலர்; ஆனால் மாகாண சர்க்கார்களுக்குச் சொத்து வரி மூலம் கிடைப்பது சுமார் 27 கோடிதான்.

இந்தியாவையும் அமெரிக்காவையும் ஒப்பிடும் போது இது சம்பந்தமாக சில வித்தியாசங்கள் குறிப்பிடத் தக்கவை. (1) இங்கு ஸ்தல ஸ்தாபனங்களின் முக்கிய வருமானம் வீட்டு வரியே; விவசாய நிலங்கள்

மீதுள்ள வரி பெரும்பாலும் மாகாண சர்க்கருக்கே போகிறது; சமீபகாலம் வரையில் மாகாண சர்க்காரின் முக்கியமானவரி இனம் நிலவரியாகவே இருந்துவந்தது. நிலவரிமீது மாகாண சர்க்கார் ஒரு சிறு "செஸ்" வசூலித்து ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கிறது. (2) வீட்டிலுள்ள சர்மான்களின் மதிப்பு, பாங்கில் வைத்திருக்கும் ரொக்கம், கம்பெனிப் பங்குப் பத்திரங்கள் முதலிய சொத்துக்கள்மீது இந்தியாவில் "சொத்து வரி" விதிப்பதில்லை. (3) இங்கு வீட்டு வரியானது ஒரு வருஷத்து வாடகை மதிப்பில் ஒரு வீதாச்சாரமாக இருக்கிறது. அமெரிக்காவில் வாடகை மதிப்பு அல்லது வருமான மதிப்பின்மீது வரி விதிக்காமல், சொத்தின் முதலீட்டு மதிப்பின்மீது வரி விதிக்கிறார்கள்.

உதாரணமாக, சென்னை நகரை எடுத்துக் கொள்வோம். இங்கு 25,000 ரூபாய் பெறுமான ஒரு வீடு இருந்தால் அதில் வாடகை எவ்வளவு வரும் என்று பார்க்கிறார்கள். மாதம் 80 ரூபாய் வாடகை வருவதாக வைத்துக்கொள்வோம். ரிப்பேர் செலவுகளை உத்தேசித்து 10 மாதத்து வாடகையை மட்டுமே "வருஷ மதிப்பாக" கணக்கெடுக்கிறார்கள். அதன்மீது 100-க்குச் சுமார் 20 வீதம், அதாவது சுமார் 160 ரூபாய் நகர சபைக்குக் கிடைக்கிறது. அமெரிக்காவில் சொத்து வரி 1000க்கு இவ்வளவு என்று நிர்ணயிப்பது வழக்கம். பல இடங்களில் 1000 க்குச் சராசரி 20 வீதம் இருக்கும். அப்போது நாம் மேலே பிரஸ்தாபித்த வீட்டுக்கு வருஷம் 1-க்கு 500 ரூபாய் வரி ஆகும். விவசாய நிலங்களை எடுத்துக்கொண்டால் இங்கு யுத்தத்துக்கு முன்னால் சுமார் 1000 ரூபாய் மதிப்புள்ள இரு போக நஞ்செய் நிலத்துக்கு 8 ரூபாய் வரை நிலவரி இருந்தது. (இந்தியாவில் நிலங்களைத்தவிர மற்ற சொத்துக்கள்

மீதுள்ள சொத்து வரி அமெரிக்காவிலுள்ள வரியை விடக் குறைவுதான் என்று சொல்லலாம்)

மாகாண சர்க்காரின் வரிகளில் பங்கு

அமெரிக்காவில் ஸ்தல ஸ்தாபனங்கள் சொத்து வரியில் ஏகபோகம் அனுபவிப்பதோடு மாகாண சர்க்கார் விதிக்கும் வரிகளிலும் பங்கு கொள்கிறது. உதாரணமாக, விற்பனைவரி, பெட்ரோல்வரி, சிகரெட்வரி இவற்றில் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பங்கு கிடைக்கிறது. இதைப் பார்த்து இங்குள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் பொருமைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் போலீஸ், நீதிபரிபாலனம், வைத்திய வசதி, ஆரோக்கிய வசதி, கல்வி வசதி இவற்றிலெல்லாம் அங்கு முக்கிய பொறுப்பும் செலவும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கே.

உதாரணமாக, 1942-ம் வருஷத்தில் எல்லா மாகாணங்களும் ஸ்தலஸ்தாபனங்களும் சேர்ந்துசுமார் 1301 கோடி டாலர் செலவிட்டதில் மாகாண சர்க்காரின் செலவு 584 கோடிதான். ஸ்தல ஸ்தாபனங்கள் செலவிட்டது 726 கோடி. கல்வி என்ற இனத்தை எடுத்துக்கொள்வோம். மாகாணங்கள் செலவிட்டது 24 கோடி டாலர்தான்; ஆனால் ஸ்தல ஸ்தாபனங்கள் செலவிட்டது 198 கோடி!

பொதுவாகச் சொல்லுமிடத்து சட்டமியற்றுவதும் உயர்தர நீதிமன்றங்களை நிர்வகிப்பதும், ஸ்தல ஸ்தாபனங்களின் வேலைகளுக்கு உதவி செய்து மேற்பார்வை வைத்துக் கொள்வதும்தான் மாகாண சர்க்காரின் வேலை. சர்க்காரின் சேவைகளை ஆங்காங்கு செயலில் நடத்துவது ஸ்தல ஸ்தலாபனங்களே என்று சொல்லலாம்.

ஒரே சொத்தின் மீது பல வரிகள்

ஸ்தல ஸ்தாபனங்களில் முக்கியமான வரிவருமானம் சொத்து வரிதான். என்று கூறினேம். இதில்

க்வனிக்க வேண்டியது ஒன்று உண்டு. ஒவ்வொரு சொத்தின்மீதும் இரண்டு மூன்று ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வரி கொடுக்க வேண்டியிருக்கும். உதாரணமாக மாண்ட்கோமரி கௌன்டியிலுள்ள வன்டாலியா என்ற ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் அந்தக் கிராமத்தில் 10,000 டாலர் சொத்துள்ள ஒருவர் அந்தச் சொத்தின்மீது (1) கௌன்டி சர்க்காருக்குச் சுமார் 34 டாலர்; (2) டவுன்ஷிப் சர்க்காருக்கு 14 டாலர்; (3) கிராம சர்க்காருக்கு 64 டாலர்; (4) கல்வி போர்டுக்கு 110 டாலர்; ஆக மொத்தம் 222 டாலர் செலுத்த வேண்டியிருக்கும். (இது சொத்து மதிப்பில் ஆயிரத்துக்குச் சுமார் 22 வீதம் ஆகிறது).

சில நகரங்களிலுள்ளவர்கள் (1) கௌன்டி வரி (2) நகர வரி (3) கல்வி வரி மூன்றும் மட்டும் கொடுப்பார்கள்.

கிராமமே இல்லாமல் வெறும் விவசாயக் குடியேற்றத்திலிருப்போர் (1) கௌன்டி வரி, (2) டவுன்ஷிப் வரி (3) கல்வி வரி இம் மூன்றும் கொடுக்கவேண்டியிருக்கும்.

டேய்ட்டன் நகரில் 10,000 டாலர் சொத்து வைத்திருப்பவர்கள் (1) நகரத்துக்கு 113 டாலர்; (2) கௌன்டிக்கு 34 டாலர் (3) கல்வி போர்டுக்கு 90 டாலர், ஆக சுமார் 237 டாலர் சொத்து வரி செலுத்துகிறார்கள்.

வருமானத் துறைகள்

டேய்ட்டன் நகர சபையின் வருமானத்தில், 48 சதவிகிதம் சொத்து வரி மூலமும், 5 சதவிகிதம் விற்பனை வரி மூலமும், 8 சதவிகிதம் மற்ற வரிகள் மூலமும், 5 சதவிகிதம் மாகாண சர்க்காரிடமிருந்தும், 5 சதவிகிதம் லைசன்ஸ் கட்டணம் மூலமும் கிடைக்கிறது.

15 சதவிகிதம் தண்ணீர் வரியாகவும், 4 சதவிகிதம் கடன் பத்திரங்கள் மூலமும், 10 சதவிகிதம் இதர இனங்களாலும் கிடைக்கிறது.

செலவிடும் துறைகள்

வசூலிக்கும் பணம் எவ்வாறு வினியோகிக்கப் படுகிறது என்று பார்ப்போம். டேய்ட்டன் நகரைக் கவனித்தால்:—

ஆரோக்கிய வசதிகள்	100-ல்	19
போலீஸ்	,,	17
பொது நிர்வாகம்	,,	6
சாக்கடை முதலியன	,,	13
ரஸ்தாக்கள்	,,	8
சில்லரை இனங்க்ள்	,,	6
தண்ணீர் சப்ளை	,,	8
கடன் தீர்ப்பதற்கு	,,	23

என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

கல்வி சம்பந்தமான செலவு இதில் சேர்க்கப்பட வில்லை. அந்த நகரத்தில் வரியாகக் கொடுக்கும் ஒவ்வொரு டாலரிலும் கல்விக்கு 39 சதமும், கௌன்டி சர்க்காருக்கு 20 சதமும், நகர சபைக்கு 41 சதமும் போகிறது. நகர சபைக்குப் போகும் பகுதியைப் பற்றித் தான் மேலேயுள்ள ஜாப்தாவில் சொல்லியிருக்கிறோம்.

கௌன்டி சர்க்காரின் வருமானத்தில் 45 சதவிகிதம் சொத்து வரி மூலமும், மீதமுள்ளது மோட்டார் லைஸென்ஸ் வரி, பெட்ரோல் வரி, விற்பனை வரி, ஸிகரெட் வரி, மாகாண சர்க்கார் மானியம், சமஷ்டி சர்க்கார் மானியும் இவற்றின் மூலமும் பூர்த்தியாகிறது.

டேய்ட்டன் பள்ளிக்கூடங்களின் வருமானத்தில் சொத்துவரி மூலமும் இதர சில்லரை வருமானமும் 77

சத விகிதம். மீதமுள்ள 23 சத விகிதம் மாகாண சர்க்காரின் நிதியிலிருந்து கிடைக்கிறது.

மானியம் அதிகரித்து வருகிறது

சென்ற சிலவருஷங்களாக ஸ்தலஸ்தாபனங்களுக்கு மாகாண சர்க்காரும் சமஷ்டி சர்க்காரும் கொடுக்கும் மானியம் அதிகரித்து வருகிறது. இதற்கு முக்கியமான காரணம், 'யோகக்ஷேமப் பாதுகாப்பு' கல்வி இரண்டிலும் பல புதிய சீர்திருத்தங்கள் சமஷ்டி சர்க்காரின் தூண்டுதலால் ஏற்பட்டன. அந்தப் புதிய செலவுகளை ஸ்தல ஸ்தாபனங்கள் சொத்து வரி மூலம் ஈடுசெய்ய முடியாது என்று கருதி சமஷ்டி சர்க்கார் மானியம் கொடுத்து மாகாண சர்க்கார்களும் மானியம் கொடுக்கும்படி தூண்டியது. 1930-ம் வருஷத்துக்கும் 1940-ம் வருஷத்துக்கு மிடையே சமஷ்டி சர்க்காரின் உதவி 4 மடங்கு அதிகரித்திருக்கிறது.

ஸ்தல ஸ்தாபன நிதி நிலைமை சம்பந்தமாக அமெரிக்காவில் அனுஷ்டிக்கப்படும் ஒரு முக்கியமான கொள்கையை ஏற்கனவே பிரஸ்தாபித்திருக்கிறோம். அதை மீண்டும் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்வது அவசியம்.

வரி உயர்விலும் கடன் வாங்குவதிலும் பொது ஜன வோட்டு

சொத்து வரி சம்பந்தமாக மாகாண சர்க்கார்கள் ஓர் எல்லை ஏற்படுத்தும். அதற்கு மேற்பட்டும் ஸ்தல ஸ்தாபனங்கள் வரி விதிக்கலாம். ஆனால் அவ்வாறு அதிக வரி விதிப்பதாயினும் சரி, கடன் வாங்குவதாயினும் சரி ஜனங்களிடம் வோட்டு எடுக்கவேண்டும். உதாரணமாக, ஒஹாயோ மாகாணத்தில் 1000க்கு 10 வீதம்தான் சொத்துவரி விதிக்கலாம். ஆயினும் 1939-ம்

வருஷத்தில் டேய்ட்டன் சொத்துக்கள் மீது சுமார் 24 வீதம் வரி விதிக்கப்பட்டது. இது சர்வஜன வோட்டின் மூலமே ஏற்பட்டது.

அதாவது அதிகமான வசதி வேண்டும் என்று கருதும் நகரங்கள் அதற்கேற்றபடி வரி விதித்துக் கொள்ளவும் தயாராயிருக்க வேண்டும் என்ற கொள்கை அங்கு இருந்து வருகிறது. வரி கொடுக்க இஷ்டமில்லாத இடங்களில் வசதிகளும குறைவாக இருக்கும்.

சமஷ்டி, மாகாண, ஸ்தல ஸ்தாபன பணப் பொறுப்புகள்

அமெரிக்காவில் ஸ்தலஸ்தாபனங்களையும் "சர்க்கார்" என்றே மதிப்பது வழக்கம்.

"எங்கள் நகர சர்க்கார்", "எங்கள் கிராம சர்க்கார்", "எங்கள் கௌன்டி சர்க்கார்", "எங்கள் ஸ்டேட்ஸ் (மாகாண) சர்க்கார்", "எங்கள் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் சர்க்கார்" என்றுதான் அவர்கள் சொல்லுவார்கள். இப்படிப் பார்த்தால் அமெரிக்காவில் 38,261 சர்க்கார்கள் இருப்பதாகச் சொல்லலாம்! (1 யு. எஸ். சர்க்கார்; 48 ஸ்டேட் சர்க்கார்கள்; 3,053 கௌன்டி சர்க்கார்கள்; 18,919 டவுன், டவுன்ஷிப் சர்க்கார்கள்; 3,332 நகர சர்க்கார்கள்; 12,888 கிராம சர்க்கார்கள்.)

இவையெல்லாம் "சர்க்கார்கள்" என்று அழைக்கப்பட்டாலும், உண்மையில் "ராஜாங்க" அந்தஸ்து உள்ளவை யு. எஸ். சர்க்காரும், மாகாண சர்க்காருமே. யு. எஸ். சர்க்காருக்கு இன்ன இன்ன அதிகாரங்கள் உண்டு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள எல்லா அதிகாரங்களும் மாகாண சர்க்காருக்கே; மாகாண சர்க்காரின் இந்த அதிகாரங்களில் தலையிட யு. எஸ். சர்க்காருக்கு உரிமை கிடையாது. யு. எஸ். சர்க்கார், மாகாண சர்க்கார் இரண்டையும் தள்ளிவிட்டால் மீதமுள்ள "சர்க்கார்கள்" ஆங்காங்கு மாகாண சர்க்காரின் ராஜாங்க அதிகாரத்துக்கு உட்பட்டவையே. ஆனாலும்

சாதாரணமாக ஸ்தல சர்க்கார்களுக்கு ஆலோசனை கூறுவது, உதவி செய்வது இரண்டிலும்தான் மாகாண சர்க்கார்கள் ஈடுபடும்; ஸ்தல சர்க்காரின் அன்றாட நிர்வாகத்தில் மாகாண சர்க்கார் தலையிடுவது வழக்கமில்லை. தலையிட உரிமையுண்டு; ஆனால் தலையிடுவது வழக்கமில்லை. காரியாம்சத்தில் ஸ்தல சர்க்கார்கள் தம் எல்லைக்குள் சுதந்திர முள்ளவையே. ஆனால் அவற்றிற்கு ராஜாங்க அந்தஸ்து கிடையாதாகையால், ஸ்தல நிர்வாகத்தில் மாகாண சர்க்கார், தலையிடுவது "சட்ட விரோதமல்ல."

அப்படியிருந்தும் ஸ்தல ஸ்தாபனங்கள் விஷயத்தில் அமெரிக்கர்கள் "சர்க்கார்" என்ற வார்த்தையை உபயோகிப்பதேன்?

போலீஸ் அதிகாரங்களும் ஸ்தல ஸ்தாபனங்களிடம் இருப்பதுதான் இதற்குக் காரணம் என்று சிலர் கருதக் கூடும். ஆனால் அவ்வாறு கருதுவது சரியல்ல. பொது ஜனங்களின் அன்றாட வாழ்க்கையில் நேர்முகமான தொடர்புள்ளது, ஸ்தல ஸ்தாபனங்களே என்பதுதான் ஸ்தல ஸ்தாபனங்களை சர்க்கார் என்பதற்குக் காரணம்.

பொதுவாகச் சொல்லுமிடத்து அமெரிக்காவின் யு. எஸ். சர்க்கார், (1) தேசத்தின் பாதுகாப்பு (2) வெளி நாட்டு வர்த்தகம், (3) மாகாணங்களிடையே நடக்கும் வர்த்தகம், (4) தபால், (5) மக்களின் அடிப்படையான பிரஜா உரிமை, (6) இவை சம்பந்தமான நீதி மன்றங்கள் ஆகியவற்றை நிர்வகிக்கிறது.

அடுத்தபடியாக அமெரிக்காவில் முக்கியமாக மதிக்க வேண்டியது ஸ்தல சர்க்கார்தான் என்று சொல்லலாம்! மாகாண சர்க்கார் இந்த இரண்டு சர்க்காருக்கு மிடையே ஒரு கண்காணிப்பு ஸ்தாபனம் போல

வேலே செய்கிறது என்று சொல்லலாம். அதாவது மாகாண சர்க்காரைவிட, ஸ்தல சர்க்கார்தான் ஜனங்களின் அன்றாட வாழ்க்கையில் அதிகமான தொடர்பு உள்ளது.

ஒவ்வொரு அமெரிக்கனும் யு. எஸ். சர்க்கார், மாகாண சர்க்கார், ஸ்தல சர்க்கார் ஆகிய மூன்று சர்க்கார்களின் "குடி". ஒவ்வொரு சர்க்காரும் அவனது வாழ்வில் என்ன பகுதியை நிர்வகிக்கிறது என்பதையும் ஒவ்வொரு சர்க்காரும் என்ன விஷயங்களில் பொறுப் பேற்கிறது என்பதையும் அவற்றின் நிதி வினியோகத்திலிருந்து ஊகிக்கலாம்.

ஸ்தல சர்க்கார்களின் முக்கியத்துவம்

இம் மூன்று விதமான சர்க்கார்களின் பணச் செலவு விவரத்தைக்கவனித்தால் ஸ்தல சர்க்கார்களின் முக்கியத்துவம் புலனாகும். உதாரணமாக அமெரிக்காவில், சமஷ்டி சர்க்கார், மாகாண சர்க்கார்கள், ஸ்தல சர்க்கார்கள் ஆகிய மூன்றும் சேர்ந்து செலவிடும் பணம் 1000 டாலர் என்று வைத்துக்கொள்வோம். 1941-ம் வருஷத்தில் அந்த ஆயிரம் டாலரில் யு. எஸ். சர்க்கார் செலவிட்டது சுமார் 558 டாலர்; ஸ்தல சர்க்கார் செலவிட்டது சுமார் 286; மாகாண சர்க்கார்கள் செலவிட்டது 156 டாலர் தான். 1941-ம் வருஷத்தில் யுத்தத்துக்காகவும் அமெரிக்க சமஷ்டி சர்க்கார் பணம் செலவிட்டு வந்தது. அந்த யுத்தச் செலவை நீக்கி விட்டுப் பார்ப்போம். யுத்தச் செலவை நீக்கிவிட்டு, மொத்தம் எல்லா சர்க்கார்களும் செலவிட்டது 1000 டாலர் என்று வைத்துக் கொள்வோம். 1000 டாலரில் யு. எஸ் சர்க்கார் செலவிட்டது 369 டாலர்; ஸ்தல சர்க்கார் செலவிட்டது 412 டாலர்; மாகாண சர்க்கார்கள் செலவிட்டது 219 டாலர். அதா

வது ஸ்தல சர்க்கார்கள் செலவிட்ட தொகை யு. எஸ். சர்க்கார் செலவிட்டதைவிட அதிகம்!

ஸ்தல சர்க்கார்கள் சுமார் 66,320 லக்ஷம் டாலர் செலவிடுவதாகச் சொன்னோம். இந்தத் தொகை முழுவதும் ஸ்தல சர்க்கார்கள் விதிக்கும் வரிகளின் மூலம் கிடைப்பதல்ல. யு. எஸ். சர்க்காரிலிருந்தும், மாகாண சர்க்கார்களிடமிருந்தும் உதவி கிடைத்தது.

உதாரணமாக யு. எஸ். சர்க்காரின் வரிவருமானம் சுமார் 138,200 லக்ஷம். ஆனால் அது தன் நிர்வாகத்திலுள்ள விஷயங்களுக்காகச் செலவிடுவது சுமார் 129,450 லக்ஷம்தான். அதாவது சுமார் 9000 லக்ஷம் டாலரை அது நேரிலோ, அல்லது மாகாண சர்க்கார்கள் மூலமோ ஸ்தல சர்க்கார்களுக்கு மானியமாக கொடுக்கிறது. அதுபோலவே மாகாண சர்க்கார்கள் சுமார் 45,000 லக்ஷம் செலவிடுவதில், தம் நிர்வாகத்திலுள்ளவற்றுக்காகச் செலவிடுவது சுமார் 36,000 லக்ஷம்; மீதமுள்ள 9000 லக்ஷம் டாலர் ஸ்தல சர்க்கார்களுக்கு மானியமாக கொடுக்கப்படுகிறது.

மானியங்கள் வரலாறு

ஸ்தல ஸ்தாபனங்கள் தமது செலவில் சுமார் 100-க்கு 28 பங்கு வரையில் மற்ற ஸ்தாபனங்களிடமிருந்து மானியமாகப் பெறுகின்றன.

எந்தச் செலவுகளுக்குகாக அதிகமான மானியம் கிடைக்கிறது என்பதைப் பார்த்தால், சமஷ்டி சர்க்கார், பெரும்பாலும் "கஷ்ட நிவாரணம், யோகக்ஷேமம்" என்ற செலவுக்காகவே அதிகமாக மானியம் கொடுக்கிறது. மாகாண சர்க்கார்களோ, கல்விக்காகவும், ரஸ்தா வசதிக்காகவுமே அதிகமாக மானியம் கொடுக்கின்றன.

இப்பொழுது ஜனங்களிடையே செலவிடும் பணத்தில் எந்தச் சர்க்கார் எந்த இனத்தில் எவ்வளவு பங்கு கொள்

கிறது என்பதைப் பார்ப்போம். ஒவ்வொரு இனத்திலும் எந்தச் சர்க்கார் எவ்வளவு பொறுப்பு ஏற்கிறது என்பதை அதிலிருந்து ஊகிக்கலாம்.

எல்லா சர்க்கார்களுமாக 1941-ம் வருஷத்தில் மொத்தம் செலவிட்ட பணம் 23,13,00 லக்ஷம் டாலர்; அதில்,

	லக்ஷம்.
யு. எஸ். சர்க்கார்	129,450
மாகாண சர்க்கார்	35,530
ஸ்தல சர்ச்கார்கள்	66,320

அதாவது மாகாண சர்க்கார்களை விட ஸ்தல சர்க்சார்கள் மூலமே சுமார் 2 மடங்கு பணம் செலவிடப்பட்டது.

இனம் இனமாக பிரித்துப் பார்ப்போம்.

	யு. எஸ்.	மாகாணங்கள்.	ஸ்தல சர்க்கார்கள்.
(1) தேசப் பாதுகாப்பு	66,860	180	10
(2) போலீஸ்	460	1,010	5,810
(3) விவசாயம், காடுகள், சுரங்கங்கள்,	12,490	1,220	700
(4) ரஸ்தாக்கள் முதலியன	3,270	8,040	8,300
(5) கல்வி	370	2,600	21,760
(6) வைத்தியம், ஆரோக்கியம் சுகாதாரம்	330	2,990	5,410
(7) யோகக்ஷேம பாதுகாப்பு சமூக இன்ஷூரன்ஸ்	9,410	9,680	60
(8) கஷ்ட நிவாரண உதவிகள்	17,580	5,200	7,370

செலவினங்களில் பொறுப்பு வினியோகம்

(1) தேசப்பாதுகாப்புப் பெரும்பாலும் யு. எஸ். சர்க்காரின் பொறுப்பு.

(2) விவசாய ஆராய்ச்சியிலும், காடு, சுரங்கம் முதலியவற்றின் பராமரிப்பிலும் யு.எஸ். சர்க்கார் பொறுப் பெடுத்துக் கொள்கிறது.

(3) சமூக இன்ஷூரன்ஸ் திட்டமும், கஷ்ட நிவா ரணத்தில் பலபுதிய ஏற்பாடுகளும் சமஷ்டி சர்க்காரின் தூண்டுதல் காரணமாக, சமஷ்டி சர்க்காரும் மாகாண சர்க்காரும் கூட்டுறவாக நிர்வகிக்கும் பொறுப்பு.

(4) வைத்தியம், ஆரோக்கியம், சுகாதாரம் இவை பெரும்பாலும் ஸ்தல ஸ்தாபனங்கள் பொறுப்பு. மாகாண சர்க்கார் ஏராளமான உதவி செய்கிறது.

(5) கல்வியில் பெரும்பாலும் ஸ்தல சர்க்கார் பொறுப்பேற்கிறது; மாகாண, யு. எஸ். சர்க்கார்கள் செலவிடுவது மிகவும் சொற்பம்.

(6) போலீஸும் பெரும்பாலும் ஸ்தல சர்க்கார் களிடமே.

(7) போக்குவரவு விஷயத்தில் கடல், கால்வாய் போக்குவரவு மட்டும் யு. எஸ். சர்க்காரிடம். மிகுந் துள்ளது மாகாண சர்க்கார்களும் ஸ்தல சர்க்கார் களும் சமமாக நிர்வகிக்கும் பொறுப்பு.

வரி ஆஸ்பதங்கள் விநியோகம்

ஸ்தல ஸ்தாபனங்கள் என்ன வரிகள் மூலம் செலவை நடத்துகின்றன என்பதையும் ஒவ்வொரு வரி இனத்தையும் யு. எஸ். சர்க்கார், மாகாண சர்க்கார்கள் எவ்வளவு தூரம் தமது நிதிக்காக உபயோகிக்கின்றன என்பதையும் பார்ப்போம்.

அமெரிக்காவில் முக்கியமான வரி இனங்கள் (1) வருமான வரி (2) கம்பெனி வருமான வரி

(3) சொத்து வரி (4) சுங்க வரி (5) விற்பனை வரி (6) சம்பள வரி ஆகியவை. இவற்றில் வருமானவரி, கம்பெனி வரி, சுங்க வரி ஆகியவை பெரும்பாலும் சமஷ்டி சர்க்காரின் வரிகள். ஆனால் மாகாணங்கள் சொற்பமாக வருமான வரி விதிக்கமுடியும். சமஷ்டி சர்க்காரை நீக்கி விட்டால், மாகாணங்களும் ஸ்தல ஸ்தாபனங்களுமாக விதிக்கும் அல்லது, பங்கிட்டுக் கொள்ளும் வரி எவ்வளவு என்று பார்ப்போம். 1942-ம் ஆண்டில்,

மாகாண சர்க்கார்கள் வசூலித்த வரி 49,750 லக்ஷம்;
ஸ்தல சர்க்கார்கள் வசூலித்த வரி 46,800 லக்ஷம்.

சொத்துவரி இதரவரிகள் என்று இரண்டு ரகமாக பிரித்துக் கொண்டால்,

சொத்துவரி மூலம் மாகாணங்களுக்கு	2,710	லக்ஷம்
ஸ்தல சர்க்கார்களுக்கு	43,220	,,
மற்றவரிகள் மூலம் மாகாணங்களுக்கு	47,040	,,
ஸ்தல சர்க்கார்களுக்கு	3,580	,,

அதாவது சொத்து வரிமுழுதும் அல்லது பெரும்பாலும் ஸ்தல சர்க்கார்களுக்கும், மற்றவரிகள் பெரும்பாலும் மாகாண சர்க்காருக்கும் போகின்றன. "மற்ற வரிகள்" என்ற இனத்தில் வரிவசூலிப்பது மாகாண சர்க்கார்களா யிருந்தாலும், சில வரிகள் ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பதற்காகவே மாகாண சர்க்கார்களால் வசூலிக்கப்படுகின்றன. உதாரணமாக நியூயார்க் மாகாணத்தில் 1946-ம் வருஷத்தில் மாகாண சர்க்கார் வரி பட்ஜெட் செலவு 5555 லக்ஷம். பட்ஜெட்டிலேயே அதை இரண்டு இனங்களாக குறிக்கிறார்கள். மாகாண சர்க்கார் காரியங்களுக்காக 2485½, ஸ்தல சர்க்கார் காரியங்களுக்காக 3069½ லக்ஷம். அதாவது ஸ்தல சர்க்கார்கள்

தனியாக வரி விதித்துக்கொள்வதோடு, மாகாண சர்க்கார்ரின் பட்ஜெட்டில் பாதிக்கு அதிகமாக ஸ்தல சர்க்கார்களுக்காகவே வசூலிக்கப்படுகிறது.

1944-ம் வருஷத்தில் மொத்தத்தில் எல்லா மாகாணங்களுமாக வசூலித்த வரி 6,62,766 கோடி டாலர். அதிலிருந்து ஸ்தலஸ்தாபனங்களுக்குக் கொடுத்தது 17,9,541 கோடி. அதாவது வசூலித்ததில் சுமார் 27 சதவிகிதம் ஸ்தல சர்க்கார்களுக்கே போயிற்று. (சுமார் 17,9,541 கோடி டாலர் மானியமாகக் கொடுத்ததில் சுமார் 76,402 கோடி, ஸ்தல ஸ்தாபனங்களுக்கென்றே வசூலித்த வரிதான்.)

நுட்பமான புள்ளி விவரங்களில் இறங்காமல் "கொத்து மதிப்பாக" கூறினால், ஸ்தல ஸ்தாபனங்களின் வருமான வசதிகள் பின்வருமாறு. 100டாலர் வருமானம் என்று வைத்துக்கொண்டால்,

(1) சொத்துவரி மூலம்	70
(2) இதர வரிகள்	2
(3) ஸ்தாபனத்துக்கென்று மாகாண சர்க்கார்கள் வசூலித்துத் தருவது	10
(4) பொது வரியிலிருந்து மாகாண சர்க்கார் மானியம்	4
(5) சமஷ்டி சர்க்கார் மானியம்	14

கிடைக்கிறது என்று மதிப்பிடலாம்.

சமஷ்டி, மாகாண, ஸ்தல சர்க்கார்கள் ஆகிய மூன்றுமாக மொத்தம் கல்விக்குச் செலவிடும் பணம் முறையே 37 கோடி, 86 கோடி, 140 கோடி டாலர். ஆனால் சமஷ்டி சர்க்காரும் மாகாண சர்க்காரும் தமது செலவில் பெரும் பகுதியை நேரில் நிர்வகிக்காமல் ஸ்தல சர்க்கார்களுக்கு

மானியமாகக் கொடுத்து விடுகின்றன. ஆகையால் சமஷ்டி, மாகாண சர்க்கார்கள் நேரில் நிர்வகிக்கும் தொகை சுமார் $3\frac{1}{2}$ கோடியாகவும், 26 கோடியாகவும் குறைந்து காணப்படுகிறது. கல்விக்காக, ஸ்தல ஸ்தாபனங்கள் தம் சொந்த நிதியிலிருந்து செலவிடும் பணம் 140 கோடிதான்; இதோடு மானியமும் சேர்ந்து கொள்வதால் ஸ்தல ஸ்தாபனங்கள் கல்விக்காக விநியோகிப்பது 214 கோடியாகக் காட்சியளிக்கிறது.

சிப்பந்திகள்

அமெரிக்காவில் கல்விக்குத் தனியாக ஸ்தல ஸ்தாபனங்கள் இருப்பதாக ஏற்கனவே கூறியிருக்கிறோம். அதையும் சேர்த்தால் ஒரு மாகாணத்தில் 4 வகையான ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. (1) கௌண்டி சர்க்கார்கள்; (2) நகர, கிராம சர்க்கார்கள்; (3) டவுன்ஷிப் சர்க்கார்கள்; (4) கல்வி ஜில்லா; (பள்ளிக்கூட ஜில்லா). இந்த நான்கு வகையான ஸ்தாபனங்களும், தமது சிப்பந்திகளின் சம்பளமாக எவ்வளவு செலவிடுகின்றன என்பதை, மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்காகச் செலவிடும் சம்பளத்துடன் ஒப்பிட்டால் ஸ்தல ஸ்தாபனங்களின் முக்கியத்துவத்தை மதிப்பிட உதவியாக இருக்கும். 1945-ம் வருஷத்தில் மாகாண சர்க்கார்களின் சிப்பந்திகள் சம்பளச் செலவு மொத்தம் 69,582,000 டாலர்தான். ஆனால், ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள் சம்பளச் செலவு பின்வருமாறு இருந்தது:—

கௌண்டி சர்க்கார்கள்	40,408,000
நகர, கிராம சர்க்கார்கள்.	125,590,000
டவுன்ஷிப்	7,556,000
பள்ளிக்கூட ஜில்லாக்கள்	198,675,000

அனுபந்தம்

ஒரு நியூ இங்கிலாந்து டவுன் சர்க்காரின் வரவு செலவு.

(ஸ்டாம்போர்ட் டவுன் 1944—45)

1944—45-ம் வருஷத்தில் ஸ்டாம்போர்ட் டவுன் சர்க்காரின் வருமானம் 3,498,440 டாலர்.

இதில் 88·2 சத விகிதம் வரிகள் மூலம் வந்தது. 3·76 சத விகிதம் மாகாண சர்க்காரிடமிருந்து கிடைத்தது. சுமார் 4·74 பள்ளிக்கூட இலாகாவுக்குக் கொடுத்திருந்த முன்பணம் திருப்பிப் பெற்றது. இவையே முக்கிய இனங்கள்.

இதைச் செலவிட்ட வரலாறு :—

பள்ளிக்கூடங்களுக்காக 47·38 சதவிகிதம்; கஷ்ட நிவாரணம் 4·82 சதவிகிதம்; போலீஸ் 2·76 சதவிகிதம்; கடனுக்கு வட்டி 13·15 சதவிகிதம்; கல்வி இலாகாவுக்குக் கொடுத்த முன்பணம் 5·43 சதவிகிதம்.

சொத்து வரி விதிக்கும் முறைக்கு உதாரணம்.

(பேர்பீல்ட் டவுன்)

1944-ம் வருஷத்தில் பேர்பீல்ட் டவுனில், சொத்து மதிப்பின் மீது 1000க்கு 24 வீதம் வரி விதித்தார்கள். நகரின் சொத்து மதிப்பு என்பதில் என்ன இனங்கள்

இருக்கும் என்பதற்கு பேர்பீல்டைப் பற்றிய பின்வரும் பட்டியல் ஓர் உதாரணமாகும்.

6,554	வீடுகள்	24,154,860 டாலர்
4,394	மோட்டார் ஷெட், தானியக் களஞ்சியம் முதலியன	1,042,960 ,,
13,330	மனைக்கட்டுகள்	7,806,420 ,,
242	வர்த்தகக் கட்டிடங்கள்	1,667,510 ,,
25	தொழிற்சாலைகள்	2,427,790 ,,
14,172	ஏக்கர் விவசாய நிலம்	5,206,720 ,,
7,896	மோட்டார் வண்டிகள்	2,253,795 ,,
	யந்திரச் சாதனங்கள்	1,959,215 ,,
110	குதிரைகள்	8,750 ,,
462	ஆடு மாடுகள்	22,420 ,,
	பன்றிகள்	10,325 ,,
	வண்டி, சைக்கில்கள்	1,615 ,,
	நகை	97,665 ,,
	வீட்டு மேஜை நாற்காலி முதலியன	461,005 ,,
	வர்த்தக ஸ்தாபனங்களின் மேஜை நாற்காலி முதலியன	240,570 ,,
	தனிப்பட்டோரிட முள்ள புத்தகங்கள்	7,835 ,,
	ரேடியோ, சங்கீதக் கருவிகள்.	19,320 ,,
	விவசாயக் கருவிகள்	5,100 ,,
	வர்த்தகரிடமும் தொழிற்சாலைகளிலுமுள்ள பொருள்கள்	3,324,695 ,,
83	தோணி, ஓடங்கள்	31,475 ,,
	இதர இனங்கள்	12,900 ,,
	மாஜி-ராணுவத்தினருக்காக வஜா அளித்த சொத்துகள்	781,290 ,,
	நிகர சொத்து மதிப்பு	51,711,890

அந்தப் பட்டணத்தின் நிர்வாகத்தில் இதர வருமானம் தவிர துண்டு விழுந்த தொகை சுமார் 1,200,000 டாலர். ஆகையால் 1000 டாலருக்கு 24 வீதம் வரி விதித்தார்கள்.

முடிவுரை

இந்தியாவுக்கு ஏற்றது என்ன?

இங்கிலாந்திலும், அமெரிக்க யு. எஸ். மாகாணங்களில் பெரும்பாலானவற்றிலும் அவற்றுள் நியூ இங்கிலாந்து மாகாணத்திலுமுள்ள ஸ்தல சுயாட்சி முறையைப்பற்றி முன் அத்தியாயங்களில் சொல்லியிருக்கிறோம். அவர்களது அனுபவத்தைக் கொண்டு இந்நாட்டில் ஸ்தல சுயாட்சியை எவ்வாறு அமைத்துக் கொள்ளலாம் என்று பார்ப்பதே நமது நோக்கமாக இருக்கவேண்டும். வாழ்க்கைநிலை, சமூக நிலைமை, நிலப்பரப்பின் தன்மை, முதலிய பல அம்சங்களில் அந்நாடுகளுக்கும் நம் நாட்டுக்கும் பல விதங்களில் மாறுபாடு இருப்பினும் ஸ்தல ஸ்தாபன அமைப்பு முறை சம்பந்தமான சில கொள்கைகள் நம் நாட்டுக்கும் பொருந்தும்.

சிறிது காலமாக இம்மாகாணத்தில் மந்திரி சபையார் ஸ்தல ஸ்தாபன சீரமைப்பு பற்றி யோசனை செய்து வருகிறார்கள். நகரசபைகள், கிராம பஞ்சாயத்துக்கள் என்ற ஊர் ஸ்தாபனங்களைத் தவிர வேறு எந்த விதமான ஸ்தல ஸ்தாபனமும் தேவையில்லை யென்ற அடிப்படைமீது சில பிரேரணைகள் வெளிவந்தன. கிராம பஞ்சாயத்துகளுக்குப் பூர்ணமான சுயாட்சிப் பொறுப்பு இருக்கவேண்டுமென்பதைக் கொள்கையளவில் யாரும் ஆக்ஷேபிக்கமுடியாது. ஆனால் கிராம பஞ்சாயத்துக்கும், மாகாண சர்க்காருக்குமிடையே "பிரதேச ஸ்தாபனங்கள்" அவசியமா இல்லையா? அவசியமே என்பதை பிரிட்டிஷ், அமெரிக்க உதாரணங்களில் நன்குகாணலாம்.

இந்தியாவில் இதுவரையில் இருந்துவரும் ஸ்தல ஸ்தாபன அமைப்பு (வெளித் தோற்றத்தில்) பிரிட்டிஷ் முறையை அனுசரித்ததே. ஆகையால் முதலில் பிரிட்டிஷ் உதாரணத்தை எடுத்துக்கொண்டு, இந்தியாவுக்கு ஏற்றது என்ன என்பதைப் பார்ப்போம்.

கிராமப்பஞ்சாயத்து;

"கட்டாயம்" என்பது கூடாது

ஒரு கிராமம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அங்கு கிராம பஞ்சாயத்தை ஏற்படுத்தி அதனிடம் பணத்தையும் அதிகாரத்தையும் ஒப்படைப்பது என்று சிலர் யோசித்து வருவதாகக் தெரிகிறது. அவ்வாறு செய்வதை விட அந்தக் கிராமங்களுக்குச் சுய நிர்ணய உரிமை கொடுத்து, "நீங்கள் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்த விரும்பினால் செலவில் ஒரு பகுதியாவது ஏற்றுக் கொள்ளவும், வரி விதிக்கவும் தயாரா? அப்படியானால் உங்களுக்கு அதிகாரம் அளித்து, பண உதவியும் செய்கிறோம்" என்று சர்க்கார் சொல்ல வேண்டும். எந்தக் கிராமங்கள் பொறுப்பேற்க முன்வருகின்றனவோ அவற்றை மட்டும் அதிகார ஸ்தாபனங்களாக அங்கீகரிக்கலாம். அவ்வாறு பொறுப்பேற்க மனமில்லாத ஜனங்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்கக் கூடாது.

அவசரப்படக்கூடாது

இங்கிலாந்தில் கிராமாந்தர "பாரிஷ்" ஸ்தல ஸ்தாபனம், பரிபூர்ணமான சமூக சமத்துவத்துக்கு முரண்பட்ட முறையிலேயே இருந்து வருகிறது என்பதை, 32,33,34 ம் பக்கங்களில் "சமூக நிலையும் ஸ்தல ஸ்தாபனமும்" என்ற தலைப்புள்ள பாராக்களில் சொல்லியிருக்கிறோம்.

இந்தியாவில் கிராமாந்தரங்களில் சர்க்காரின் சட்டம் குறுக்கிடாத எல்லா பொதுக் காரியங்களும் இப்படித் தான் நடக்கின்றன. பிரிட்டனில் ஜாதி பேதம்

சம்பந்தமான ஏற்றத் தாழ்வு கிடையாது. "தாழ்ந்த வகுப்பினர்" என்பது அங்கு ஏழைகளைத்தான் குறிக்கும். இங்கு பிறப்பு சம்பந்தமாகவும் "தாழ்ந்த வகுப்பினர்" என்று சிலர் மதிக்கப் படுகிறார்கள். இந்த நிலைமையில் சட்ட பூர்வமான ஜனநாயக ஸ்தாபனங்களை ஏற்படுத்தி "இங்கிலாந்திலிருப்பதுபோலே இங்கும் இருக்கட்டுமே" என்று மனதைத் தேற்றிக் கொள்வதில் பயனில்லை. ஏனென்றால் இங்கிலாந்திலுள்ள கிராம ஜனங்கள் அந்த ஏற்றத் தாழ்வுகளுக்கு உடன்பட்டிருந்தார்கள். அதோடு இப்போது அங்கு கல்வியறிவு அதிகம். அதிகார மோகம் குறைவு. இந்தியாவில் இப்போது அப்படியல்ல. காரியாம்சத்தில் இருப்பதைச் சரியென்று ஏற்றுக் கொள்ள பல இளைஞர்கள் தயாரில்லை. சமத்துவ உணர்ச்சி இளமை பருவத்து வேகத்துடன், இளமை பருவத்து அலக்ஷிய புத்தியுடன், பொறுப்பற்ற தீவிரத் துடன், சகிப்புத் தன்மையற்று குமுறிக் கொண்டிருக் கிறது. அதோடு கிராமப் பிரதேசங்களில் பல "சமூகங் களிடையே" கல்வியறிவு மிகவும் குறைவாக இருப்பி னும் அதிகார மோகம் மட்டும் அதிகமாக இருக்கிறது.

ஆகையால் சட்டபூர்வமாக இப்போது ஏற்படுத்தும் கிராம சுயாட்சியில் முரண்பாடுகள் அதிகமாக இருக்கும் என்றே எதிர்பார்க்க வேண்டும். அதை முன்னிட்டு கிராம சுயாட்சியே கூடாது என்று முடிவு கட்டி விடக் கூடாதுதான். ஆனால் இன்னும் நாலைந்து வருஷத் திற்கு, கிராமங்களில் ஏற்படுத்தும் ஸ்தல சுயாட்சியில் அதிகமான பணம் நடமாடும்படியான அதிகாரங்களை யும் பொறுப்பையும் ஒப்படைக்கக்கூடாது.

அதிகாரத்துக்கேற்ற பொறுப்பும் வேண்டும்

பணக்காரர் ஆட்சி கூடாது என்பது எவ்வளவு முக்கியமோ, அது போலவே அறிவும் அனுபவமும்

பொறுப்புணர்ச்சியு மில்லாதவர்களின் ஆட்சியும் கூடாது. இதை மனதில் வைத்துக் கொண்டுதான் கிராம சுயாட்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொறுப்புக்கள் ஏற்படுத்தாமல் அதிகாரத்தைச் சுமத்துவதும் கூடாது.

கிராமத்திலேயே வரி விதித்து ஒரு சிறு தொகையாவது வசூலிக்கும் பொறுப்பைக் கிராம பஞ்சாயத்துக் கள்மீது சுமத்த வேண்டும். அவர்கள் தாமாக ஜனங் களிடையே எவ்வளவு வசூலிக்கிறார்களோ அதற்கேற்ற படிமட்டுமல்லாமல், ஜனத்தொகைக்கும் தேவைக்கும் தக்கபடி, சர்க்கார் தாராளமாக மானியம் கொடுக்கலாம். ஆனால் ஒரு சிறிது பணமாவது கிராமத்திலேயே வசூல் செய்ய இந்தப் பஞ்சாயத்துக்கள் தயாராயிருக்க வேண் டும். அப்போதுதான், தமது பணமன்றோ செலவா கிறது என்ற ஒரு கவலையுடன் சிக்கனமாகக் காரியம் நடக்கும்; அனுபவமும் செல்வாக்கும் உள்ளவர்கள் கிராம பஞ்சாயத்தாராக சேவை செய்ய பொறுக்கப் படுவார்கள்.

நீர்ப்பாசனம் முதலியவற்றைக் கிராமங்களின் ஆட்சி யில் விடுவதாயிருந்தால் நிலச்சுவான்கள் மட்டும் கொண்ட ஒரு தனிக் கமிட்டியினிடமே அதை விட வேண்டும்.

பிரதேச ஸ்தாபனங்கள் அவசியம்

பிரிட்டனில் ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திடமும் என்ன அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பதை 37 - 48 பக்கங்களில் விவரித்திருக்கிறோம்.

அதிகாரத்தை, ஸ்தல நிலைமைக்குத் தக்கபடி அமல் நடத்துவதற்கு யோசனைகள் கூறவும், கோரிக்கை கள் தயாரிக்கவும் பாரிஷ் கவுன்ஸில்கள் உதவியாக

இருக்கின்றன. நடைபாதைகளைச் சீராக வைத்துக் கொள்வது, தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, வாசகசாலைகள் நடத்துவது, கிராம எல்லைக்குள் ரோடில் விளக்குப் போடுவது முதலிய சிறு காரியங்கள் மட்டுமே பாரிஷ் கவுன்ஸில்களின் ஆதிக்கத்தில் நடக்கின்றன. முக்கியமான பல விஷயங்கள் "ரூரல் டிஸ்ட்ரிக்ட் கவுன்ஸில்"களிடமே இருக்கின்றன.

சென்னையிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பஞ்சாயத்து ஏற்படுத்திவிட்டு கிராமப் பிரதேசத்துக்கு வேறு ஸ்தாபனங்களே இல்லையென்றால், "ரூரல் டிஸ்டிரிக்ட்" அதிகாரங்களை ஒவ்வொரு கிராமத்திடமும் ஒப்படைக்க முடியுமா? சிறு கிராமங்களில் இந்த அதிகாரங்களை ஒப்படைப்பது சாத்தியமா, அதற்கு வேண்டிய பண வசதிகள் என்ன, என்பவற்றையெல்லாம் யோசிப்பது அவசியம்.

"ரூரல் டிஸ்டிரிக்ட் கவுன்ஸிலுக்கு" இருப்பது போன்ற அதிகாரங்களைக் கிராம பஞ்சாயத்துகளிடம் கொடுக்காவிடில் அந்த அதிகாரங்கள் முழுவதையும் மாகாண சர்க்காரே வைத்துக்கொள்வதா?

அவ்வாறாயின் ஒவ்வொரு இடத்திலும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குச் சம்பந்தமுள்ள பல விஷயங்களில் "ஸ்தல சுயாட்சி" என்ற அம்சம் இல்லாது போய்விடுமே!

அதிகாரத்தை ஆங்காங்கு ஜனங்களிடையே ஒப்படைப்பதன் மூலம் மாகாண சர்க்காரின் நேர்முகமான ஆதிக்கத்தையும், நேர்முகமான பொறுப்பையும், குறைப்பதுதான் ஸ்தல சுயாட்சியின் முக்கிய லட்சியம்.

ஏதோ ஒரு தாலுகாவிலுள்ள ஏதேனும் சில கிராமங்களைப் பாதிக்கக்கூடிய விஷயங்களில் சட்ட சபையிலுள்ள எல்லோருக்கும் சிரத்தை இருக்க முடியாது.

சட்டசபை நேரத்தை இவ்விஷயத்தில் விரயம் செய்வது சரியல்ல; சர்க்காரின் நிர்வாக இலாகாக்களின் வேலையையும் குறைக்க வேண்டும். பல விஷயங்கள் ஆங்காங்கு வசிப்பவர்களாலேயே தீர்க்கப்பட்டால்தான் சர்க்காரின் வேலையைக் குறைக்க முடியும். இதுதான் ஸ்தல சுயாட்சியை ஏற்படுவதற்குள்ள முக்கியமான காரணம்.

ஆகையால் கிராம பஞ்சாயத்துக்களின் அதிகாரத்தை அதிகப்படுத்துவதோடு, கிராமத்தில் நிர்வகிக்க முடியாத பெரிய பொறுப்புகளுக்காக, பஞ்சாயத்துக்களுக்கும் மாகாண சர்க்காருக்குமிடையே வேறுசுயாட்சி ஸ்தாபனங்கள் இருக்க வேண்டும்.

கிராமத்தின் வைத்திய வசதி கல்வி வசதி முதலிய தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொறுப்பைப் பலகிராமங்களுக்குப் பொதுவான, பிரிட்டிஷ் ரூரல் கௌன்ஸில்கள் போன்ற பிர்க்கா போர்டுகள் ஏற்படுத்தி அந்தப்போர்டுகளிடம் ஒப்படைக்க வேண்டும். கிராமத்தின் தேவை என்ன என்பதைப் பற்றி கிராம பஞ்சாயத்துகளிடமிருந்து பிரேரணைகள் கோர வேண்டும். தாலுகா போர்ட், அல்லது ஜில்லா போர்டுகளும் அவசியமாகலாம். பிரிட்டிஷ் உதாரணத்தைப் பின்பற்றுவதாயின் இவ்வாறுதான் செய்ய வேண்டும்.

இங்கிலாந்தில் கிராம பஞ்சாயத்துக்கும் சர்க்காருக்குமிடையே (1) "ரூரல்" டிஸ்டிரிக்ட் கவுன்ஸில்களும் (2) கௌன்டி கவுன்ஸில்களும் இருப்பது போலவே இங்கும் ஜில்லா போர்ட், தாலுகா போர்ட், பிர்க்கா போர்ட் என்பன போன்ற சில "பிரதேச ஸ்தாபனங்கள்" இருப்பது அவசியமாகலாம். பெரிய விஷயங்களை பிரதேச ஸ்தாபனங்களிடமும், மற்ற விஷயங்களை கிராம பஞ்சாயத்துக்களிடமும் ஒப்படைக்க வேண்டும்.

பிர்க்கா போர்டுகள் அமைப்பது என்ற ஆலோசனை அமெரிக்காவிலுள்ள "டவுன்ஷிப்" முறையை ஒத்த தாகவே இருக்கும். அங்கு ட்வுன்ஷிப் வேண்டாம், அவசியமில்லை என்று பலர் நினைப்பது உண்மையே. ஆனால் அது போலவே இங்கும் பிர்க்கா போர்டுகள் வேண்டியதில்லை என்று முடிவு கட்டிவிடக் கூடாது என்பதற்கு 91,92ம் பக்கங்களில் காரணம் சொல்லியிருக் கிறோம்.

இங்கிலாந்தில் முக்கியமான அதிகாரங்களைப் "பாரிஷ்"களிடம் விடாமல், கவுன்ஸில் ஆகியவற்றி னிடம் பங்கிட்டிருப்பது ஏன் என்பதை 40-ம் பக்கத்தில் உதாரணத்துடன் விளக்கியிக்கிறோம்.

சிற்சில காரியங்களை பல கிராமங்கள் சேர்ந்த ஒரு தாலுகா அல்லது பிர்க்காதான் செய்யமுடியும். ஆனால் தெருக்கூட்டுதல், சாக்கடைச் சுத்தம் செய்தல் முதலிய வேலைகளை அந்தந்த ஊரிலேயே நிர்வகித்துக் கொள்வதுதான் சுலபம். இதையெல்லம் உத்தேசித்து இங்கு, பிரிட்டிஷ் உதாரணத்தைப் பின்பற்றி ஒவ்வொரு தாலுகாவிலும் சில பெரிய ஊகர்ளுக்குப் பஞ்சாயத்து களும், மீதமுள்ள பிரதேசத்துக்கு நாலைந்து பிர்க்கா போர்டுகளும், ஒவ்வொரு பிர்க்காவிலும் கிராம சபை, "மஜரா" சபைகளும் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

பண விஷயம்

ஊர் ஊராகப் பஞ்சர்யத்துக்கள் ஏற்படுத்தி நில வரியில் கால்பாகத்தை ஊர் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கலாமென்று ஒரு யோசனை இருந்து வருகிறது. இறுதியில், நிலவரி முழுதையுமே ஸ்தல ஸ்தாப னங்களிடம் விடவேண்டியதுதான் லக்ஷியமாக இருக்க

வேண்டும் என்பதே நம் கருத்து. ஆனால் இப்போது அது சாத்தியமாகாது. மாகாண சர்க்காரின் வரி அமைப்பு முழுவதும் மாறின பிறகுதான் மாகாண சர்க்கார் நிலவரியைக் கைவிட முடியும். அதற்கிடை யில் நிலவரியில் ஒரு பகுதியை ஸ்தல தாபனங்க ளிடம் விடுவதாயின், அந்தப் பகுதி முழுதையும் கிராமங் களில் சிதறி விரயமாகும்படி விட்டுவிடக் கூடாது. ஒவ் வொரு ஊரிலும் வேறு வரிகள் மூலம் எவ்வளவு வசூல் செய்கிறார்களோ அதற்குத் தகுந்தபடிதான் நிலவரியில் பங்கு கொடுக்க வேண்டும்.

நிலவரியில் கால்பாகத்தைக் கிராமபஞ்சாயத்துக் களிடம் ஒப்படைப்பது உசிதமாகாது. பிரதேச ஸ்தா பனங்களிடம் (அதாவது ஜில்லா போர்ட், தாலுக்கா போர்ட், அல்லது பிர்க்கா போர்டுகளிடமே) ஒப் படைக்க வேண்டும். இல்லாவிட்டால் நிலவரியில் கால் பாகத்தைக் கிராமத் தேவைகளுக்கென்று, சர்க்கார் தம்மிடத்தில் தனியாக ஒரு நிதியாக ஒதுக்கி வைத்துக் துக் கொண்டு, ஒவ்வொருகிராமமும் ஏற்றுக் கொள்ளும் பொறுப்புக்கும் கிராம ஜனத்தொகைக்கும் ஏற்றவாறு அதிலிருந்து மானியமாகக் கொடுக்கவேண்டும். "ஏழை யான" பிரதேசங்களுக்குத் தனிச்சலுகை காட்டி மற்ற பிரதேசங்களை விட அதிகமாக மானியம் அளிக்கலாம்.

அமெரிக்க உதாரணங்களிலிருந்து

அமெரிக்க உதாரணங்களிலும் "ஊர் ஸ்தாபனங்கள்" "பிரதேச ஸ்தாபனங்கள்" என்ற இரண்டு வகை ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஊர் ஸ்தல ஸ்தாபன விஷயத்தில், கட்டாய முறை அமெரிக்காவிலும் இல்லை. அங்குள்ள உதாரணத்தை இந்தியாவுக்கு ஏற்ற

முறையில் பின்பற்றுவதாயின் பின்வருமாறு செய்ய லாம் என்று தோன்றுகிறது :—

அமைப்பு முறை

(1) 5000-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள இடங் களுக்குமட்டும் தனியான "ஊர் ஸ்தாபனம்" ஏற்படுத் துவது.

(2) 5000-க்குக் குறைவான ஜனத்தொகையுள்ள ஊர் களில் தொடர்ச்சியாக இருக்கும் பல ஊர்களைச்சேர்த்து ஒரு "கிராம வட்டம்" என்று பெயர் கொடுத்து, கிராம வட்ட சுயாட்சி ஸ்தாபனங்கள் நிறுவுவது. ஒரு கிராம வட்டத்திலுள்ள ஊர்கள் பரஸ்பரம் ஒன்று அல்லது ஒன்றரை மைலுக்கு உட்பட்டதாகவும் ஒரே ஆறு அல்லது ஒரே நீர்ப்பாசனக் கால்வாயைச் சார்ந் தவையாகவும் இருப்பது நலம். ஒரு "கிராம வட்டத் தின்" ஜனத்தொகை 3,000த்துக்குக் குறையாமலும் 15,000த்துக்கு மேற்படாமலும் அமையும்படி "வட்டங் கள்" ஏற்படுத்தி, அவற்றுக்குக் "கிராமவட்ட" ஸ்தல ஸ்தாபனங்கள் அமைக்கலாம். எந்தக் கிராம வட்டமும் சுமார் 20 சதுர மைலுக்கு உட்பட்டதாகவே இருப்பது நலம். (அதாவது நீள அகலம் சுமார் 4½ மைல் இருக்கலாம்.)

இந்தக் கிராம வட்டங்கள் ரெவின்யூ பிர்க்காவை விடச் சிறிதாக இருப்பது நலம்.

(3) கிராமந்தோறும் தனித்தனி சுயாட்சி ஸ்தா பனம் இருந்தே தீரவேண்டும் என்ற கட்டாய முறை கூடாது.

(4) 5,000-க்குக் குறைந்த ஜனத்தொகை யுள்ள ஊர்களில், அந்த ஊர் வோட்டர்களில் 100-க்கு 51 பேர் விரும்பினால் மட்டுமே அங்கு தனிச் சுயாட்சி

ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அதைச் சுற்றிலுமுள்ள ஊர்களைச் சேர்த்து ஒரு "கிராம வட்டம்" அமைப்பதே நலம்.

(5) மாகாண சர்க்கார் ஜில்லா தோறும் ஒரு கமிஷன் நியமித்து ஒவ்வொரு ஜில்லாவையும் பல கிராம வட்டங்களாகப் பிரிக்க வேண்டும். இப்போதுள்ள பிர்க்கா எல்லைகளை நீர்ப்பாசன வசதிக்குப் பொருத்தமாக மாற்றியமைத்தால் இந்த லக்ஷியம் சுலபமாகக் கைகூடும். (இந்தக் "கிராம வட்டங்களை" நியூ இங்கிலாந்திலுள்ள "டவுன்"களைப் போல மதிக்கவேண்டும்)

(6) 2000-க்குக் குறைவான ஜனத்தொகையுள்ள ஏதேனும் ஓர் ஊரார் தமக்குத் தனிக் கிராம சுயாட்சி வேண்டுமென்று கோரினால் வோட்டர்களில் 100-க்கு 60 பேர்களின் ஆதரவாவது இருக்க வேண்டும்.

பண வசதியும், தமக்கு ஸ்தல சுயாட்சி வேண்டும் என்ற பொதுஜன உணர்ச்சியும், தம் ஊரில் பொது வசதிகள் நன்கு அமைய வேண்டும் என்ற ஆசையும் இல்லாத இடங்களில் "சுயாட்சியைச்" சுமத்துவது சரியான கொள்கையாகாது.

அதிகாரமும் பணப் பொறுப்பும்

பண வசதி இல்லாமல் ஸ்தல சுயாட்சியில் ஜனங்களுக்கு அக்கரை யிருக்காது என்பதை இந் நாட்டில் பலர் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் சர்க்காரிலிருந்து பணத்தைக் கொடுத்து ஸ்தல சுயாட்சி ஏற்படுத்துவது சரியான கொள்கையல்ல. ஸ்தல சுயாட்சி வேண்டும் என்று விரும்புபவர்கள் தம் ஊரில் ஏற்படும் செலவில் ஒரு பகுதிக்காவது தாமாக வரி விதித்துக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும். அப்போதுதான் சுயாட்சியில்

உண்மையான ஆசை இருப்பதாக் மதிக்க முடியும். ஆகையால் பணம் விஷயமாகப் பின்வரும் கொள்கைகள் அனுஷ்டிக்கப் படவேண்டும்.

(1) எந்த ஸ்தல ஸ்தாபனத்தின் செலவுக்காக வேனும் சர்க்கார் தம் நிதியிலிருந்து பணம் கொடுப்பதாயின், அந்தச் செலவில் ஒரு பகுதிக்கேனும் அந்த ஸ்தாபனம் தானுக வரி விதித்துக்கொள்ளத் தயாரா யிருக்க வேண்டும். தாமே வரி விதித்துக்கொள்ளத் தயாராயில்லாத ஸ்தல ஸ்தாபனத்தினிடம் சர்க்கார் பண சம்பந்தமான அதிகாரங்களைக் கொடுக்கக் கூடாது.

(3) அம்மாதிரி வரிப் பொறுப்பில்லாமல் சர்க்கார் பண உதவி செய்வதாயின் அந்த ஸ்தல ஸ்தாபனப் பிரதிநிதிகளை ஓர் ஆலோசனை போர்டாகமட்டும் மதிக்க வேண்டுமேயொழிய அதிகார ஸ்தாபனமாக மதிக்கலாகாது.

(3) நிலவரி பெரும்பாலும் கிராம வாசிகளாலேயே கொடுக்கப்படுவதால் அதன் ஒரு பகுதியைக் கிராமங்களில் செலவிட வேண்டியது நியாயம்தான்.

ஆனல் அதைக் கிராமத்தாரிடம் கொடுத்துப் பயனற்ற முறையில் விரயமாக்கி விடலாகாது. ஆகையால் நிலவரியைக் கிராமங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விடாமல், கிராமங்களுக்கு மானியமாகக் கொடுப்பதற்கென்று ஒரு தனி நிதியில் போட்டு வைத்து அதைக் கிராமப் பிரதேசங்களின் வசதிகளைப் பெருக்குவதற்கென்று ஒதுக்க வேண்டும்.

இந்தப் பணத்தைக் குறிப்பிட்ட வசதிகளுக்கென்று மானியமாக கொடுக்க வேண்டும். பொது நிர்வாகச்

செலவு முழுதும் கிராம பஞ்சாயத்தோ, கிராம வட்டப் பஞ்சாயத்தோ, தன் சொந்த வரிகள் மூலமே நடத்திக் கொள்ள வேண்டும். தமது சாதாரண நிர்வாகச் செலவுகளுக்குப் பஞ்சாயத்துக்கள் சர்க்காரின் பணத்தை எதிர் பார்க்கக் கூடாது. வைத்தியம், கல்வி, ரஸ்தா வசதிகள் போன்ற பெரும் செலவுகளுக்குத்தான் மானியத்தை உபயோகிக்க வேண்டும்.

ஓர் ஊரில் வரிப் பொறுப்பை ஏற்கும் கிராம பஞ்சாயத்தோ, கிராம வட்ட ஸ்தாபனமோ சரியாக வேலை செய்யவில்லையாயின் அந்தக் கிராமங்களிடம் சர்க்காருக்கும் பொறுப்பில்லை என்று ஏற்பட்டுவிடாது. சர்க்காருக்கு எப்படியும் பொறுப்பு உண்டு. இந்தப் பொறுப்பை நிர்வகிப்பதுதான் "பிரதேச" ஸ்தாபனங்களின் வேலை. அந்தப் பிரதேச ஸ்தாபனம் சர்க்காரின் "ஏஜென்டாக" வேலை செய்வதாக இருக்கும். ஆனால் அந்த "ஏஜென்ட் ஸ்தாபனமும்" ஜன நாயகப் பொறுப்பாட்சி முறையிலேயே நிர்வகிக்கப்படவேண்டும். ஆகையால் ஜில்லா போர்டு, தாலூகா போர்டு போன்ற ஒரு பிரதேச சுயாட்சி ஸ்தாபனம் அவசியம்.

தாலூகா போர்டுகள்

"பிரதேச சுயாட்சி"க்காக ஏற்படுத்தும் ஸ்தாபனத்தின் ஆதிக்கத்தில் விடும் பிரதேசத்தின் நிலப் பரப்பு மிகவும் பெரியதாக இருக்கக்கூடாது.

இப்போதுள்ள ஜில்லாக்கள் மிகவும் அதிகமான விஸ்தீரணமுள்ளவையாக இருக்கின்றன. போலீஸ், பெரிய நீர்ப்பாசனக் கால்வாய்கள் இவ்விரண்டுக்கும் தான் இவ்வளவு பெரிய நிலப்பரப்பு சௌகரியம். மற்ற காரியங்களுக்கு நிலப்பரப்பு இவ்வளவு பெரியதாக இருப்பது கூடாது. ஆகையால் மாகாணத்தை இத்தனை

ஜில்லாக்கள் என்று பிரிப்பதற்குப் பதிலாக, இத்துனை தாலுகாக்கள் என்று பிரிப்பதுதான் நல்லது. அதாவது மாகாணம் என்பதற்கு அடுத்தபடியாக "ஜில்லா" தான் சர்க்காரின் உறுப்பாக இருக்கிறது. இதை மாற்றிவிட வேண்டும். மாகாணத்துக்கு அடுத்த படி தாலுகாதான் இருக்கவேண்டும். தமிழ் நாடு 12 ஜில்லாக்கள் கொண்டது என்று மதிப்பதற்குப் பதிலாக தமிழ் நாடு 120 தாலுக்காக்கள் கொண்டது என்று மதிக்க வேண்டும். அவ்வாறு மதித்து ஒவ்வொரு தாலுகாவி லும் "தாலுகா சர்க்கார்" ஏற்படுத்தவேண்டும். அதற்கு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கொள்கை நிர்ணயமன்றமும், நிர்வாக அமைப்பும் இருக்க வேண்டும். இப்போது ஜில்லா போர்டுகளுக்கு இருந்து வரும் பொறுப்பும் உரிமையும் "தாலூகா சர்க்காருக்கு" (தாலுகா போர்டுக்கு) இருக்கவேண்டும்.

நிர்வாகத் தலைமை

நிர்வாக அமைப்பு சம்பந்தமாக "கவுன்ஸில் மானேஜர் முறை"யையோ அல்லது "வலிமையுள்ள மேயர் முறை"யையோ வைத்துக்கொள்ளலாம். "வலிமையுள்ள மேயர்" முறையில் தேர்ந்தெடுக்கும் "தலைவர்" ஊர் முழுதிலுமுள்ள வோட்டர்களால் ஒரே தொகுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். (104, 111–117 பக்கங்களைப் பார்க்கவும்.)

தேர்தல் முறை

கிராம சுயாட்சி ஏற்படும் பெரிய ஊர்களில் ஸ்தாபன அமைப்பு சம்பந்தமாக நியூ இங்கிலாந்திலுள்ள "டவுன் கூட்டம்" என்ற நேர்முக ஜனநாயக முறை இங்கு நடக்க முடியாது. பிரதிநிதித்துவ ஆட்சிக்கும் நேர்முக ஜனநாயகத்துக்கும் சமரசமாக, அங்கு "பிரதி

நிதித்துவ டவுன் கூட்டம்'' என்று ஒரு புது முறையை அனுஷ்டிக்கிறார்கள். அதை இங்கு பின்பற்றலாம். இல்லாவிட்டால் இப்போது இந்திய நகர சபைகளி லுள்ள ரகசிய வோட்டுத் தேர்தல் முறையையே பின் பற்றலாம்.

பெரிய நகரங்களில், ஜாதிவாரியாகப் பிரதிநிதித் துவம் ஏற்படுத்தும் முறை அறவே ரத்தாகவேண்டும். கூட்டுத் தொகுதி மூலம் சில ஸ்தானங்களைச் சில வகுப்பினருக்கு ஒதுக்குவது என்ற முறைகூட நாளடை வில் ஒழிய வேண்டியதே. சமூகத்திலுள்ள பலதரப் பட்ட அபிப்பிராயங்களுக்கும், கட்சிகளுக்கும், வகுப்பு களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு "ஒற்றை மாற்று வோட்டு" மூலம் (Single transferable vote) வீதாச்சாரப் பிரதிநிதித்துவம் (Proportional Representation) என்ற ஒரு தேர்தல் முறை இருக்கிறது. ஒவ் வொரு நகர சபையிலும் பிரதிநிதிகளில் பாதித்தொகை யில் மட்டும் "வார்ட்" வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட லாம்; மீதமுள்ள பாதித்தொகைக்கு நகரம் முழுதையும் ஒரே தொகுதியாகக் கொண்டு, மேலே பிரஸ்தாபித்த வீதாச்சாரப்பிரதிநிதித்துவ முறைப்படி தேர்ந்தெடுக்கப் படவேண்டும். இந்த வோட்டு முறை மிகவும் சிக்கலானது என்று சிலர் கருதக் கூடும். உண்மையில் இதில் வோட்டுகளைக் கணக்கிடுவதுதான் சிக்கலான வேலையே தவிர, வோட்டர்கள் தமது வோட்டை இந்த முறைப்படி உபயோகிப்பதில் எவ்வித சிக்கலும் கிடையாது. மொத்தம் தேர்ந்தெடுக்க வேண்டியவர்கள் 6 பேர் இருப்பதாகவும் அபேட்சகர்கள் 11 பேர் இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அந்த 11 நபர்களில் வோட்டர், மற்றெல்லா அபேட்சகரைவிட சிறந்தவர் என்று யாரை மதிக்கிறாரோ அவரது பெயருக்கெதிரே "1" என்ற இலக்கத்தையும், அடுத்தபடியாக அவருக்குப்

பிடித்தவர்கள் மீதுள்ள பிரியத்தின்படி வரிசைக்கிரமமாக அவரவர் பெயருக்கு நேரே 2,3,4,5,6, என்று எழுதுவதும்தான் இந்த வோட்டு முறையில் வோட்டர்கள் கவனிக்க வேண்டிய விஷயம். எழுத்தறிவு சிறிது பரவிய பிறகு இந்த முறையை அமுலுக்குக் கொண்டு வருவதில் அதிக சிரமம் இருக்காது. அதற்கான பிரசாரம் இப்போதே நடப்பது நலம்.

அதிகார மாற்றம்

கிராமப் பிரதேசத்தில் ஸ்தல ஸ்தாபனங்கள் மூலம் நடக்க வேண்டிய அல்லது ஸ்தல ஸ்தாபனங்களின் ஆலோசனையுடன் நடத்த வேண்டிய காரியங்கள் என்ன என்பதை விவரிப்பது இக்கட்டுரையின் எல்லைக்குப் புறம்பானது. அந்த வசதிகளைப் படிப்படியாகத்தான் அதிகரிக்க வேண்டும் என்பதை மட்டும்தான் இங்கு குறிப்பிட முடியும். வரி விதித்துக் கொள்ளும் பொறுப்பை எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ளக் கிராமங்கள் தயாராயிருக்கின்றனவோ அதற்குத் தகுந்தபடிதான் வசதிகள் பெருகமுடியும். அதுதான் ஸ்தல சுயாட்சிப் பொறுப்பின் ரகசியம்.

அதிகமான பொறுப்புக்களை ஸ்தல ஸ்தாபனங்களிடம் மாற்றும்போது மாகாண சர்க்காரின் வரிக் கொள்கையில் பல மாறுதல்கள் அவசியமாகலாம். உதாரணமாக நிலவரி முழுவதையும் ஸ்தல ஸ்தாபனங்களிடம் விட்டுவிட வேண்டியிருக்கும். உணவுக் கட்டுப்பாடு, வர்த்தகக் கட்டுப்பாடு இரண்டும் ஒழிந்து, நிலைமை நிதானப்படாத வரையில், சர்க்காரின் நிலைமையைத் திடீரென்று மாற்றி விடக்கூடாது.

இன்னும் நாலைந்து வருஷங்களுக்கு, சிறிய ஸ்தல ஸ்தாபனங்களிடம் அதிகமான "விஷயங்களை" ஒப்படைக்காமலிருப்பதுதான் நலம். ஆனால் எந்த விஷயங்களை

ஸ்தல ஸ்தாபனங்களிடம் விட்டுவிடுகிறோமோ அவை சம்பந்தமாக மாகாண சர்க்கார் "பாதுகாப்பு அதிகாரங்கள்" வைத்துக் கொள்ளக் கூடாது.

மாகாண சர்க்காரிடமிருந்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரத்தைச் "சில பாதுகாப்பு ஏற்பாடுகளுடன்" மாற்றுவது என்பது பயன்படாது. "பாதுகாப்புடன் கூடிய சுயாட்சி" உண்மையில் சுயாட்சிக்குப் பகையே. அவசியமானால் இப்போதுள்ள உணவு நெருக்கடியையும் வர்த்தகக் கட்டுப்பாடுகளால் ஏற்பட்ட "ஒழுக்க நெருக்கடியையும்" உத்தேசித்து ஸ்தல சுயாட்சியைத் தாமதப்படுத்தலாம்; சில குறிப்பிட்ட விஷயங்களை மட்டும்தான் இப்போது மாற்ற முடியும், மற்ற விஷயங்களை இப்போது ஸ்தல ஸ்தாபனங்களிடம் வரக்கூடாது என்று கருத நியாயம் இருக்கலாம். ஆனால் மாற்றிக் கொடுக்கின்ற விஷயங்களில் பூரண அதிகாரம் கொடுக்க வேண்டும்.

சுயநிர்ணய உரிமை

அமெரிக்காவில் சில மாகாணங்களில் பெரிய நகரங்கள் தமது நகரசபையின் அமைப்புச் சட்டத்தையும் தாமே தயாரித்துக்கொள்ள உரிமை அளிக்கப்படுகிறது. ஜனங்களே ஓர் "அமைப்பு நிர்ணய கமிஷன்" நியமித்து ஒரு நகல் சட்டத்தைத் தயாரித்து, அந்தத் திட்டத்தைச் சர்வஜன வோட்டுக்குச் சமர்ப்பிக்கிறார்கள். சர்வஜன வோட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அந்த அமைப்புச் சட்டத்தை மாகாண சட்டசபை ஊர்ஜிதம் செய்து கொடுக்கிறது. இதே போன்ற ஒரு முறை இந்நாட்டில் இப்போது சாத்தியமில்லையென்றாலும், பிற்காலத்தில் இம்மாதிரி சுயநிர்ணய உரிமை கொடுப்பது பற்றி யோசிக்க வேண்டும். இந்த ஸ்தல சுயாட்சி சம்பந்தமான சுயநிர்ணய உரிமைக்கு அமெரிக்காவில் "ஹோம் ரூல்" 'உள்ளூர் ஆட்சி உரிமை' என்று பெயர் கொடுக்கிறார்கள். சர்க்கார் ஏற்படுத்தும் ஓர் அமைப்பு பல ஊர்களுக்கு முற்றிலும் பொருத்தமாக இருக்கலாம்.

சில ஊர்களில் அதே அமைப்பு பல ஊழல்களுக்கு இடம் தரக்கூடும். அப்போது தமது நகர சபையின் அமைப்பில் தேவையான மாறுதல்கள் பற்றி சிபார்சு செய்ய நகர வோட்டர்களுக்கு உரிமை கொடுக்கலாம்.

சர்க்காரின் பொறுப்பு

“ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பூரண சுதந்திரம் கொடுத்து விட்டால், பிறகு அங்கு என்ன நடக்கிறதென்று தெரிவதற்கே சர்க்காருக்கு வழியில்லாது போய்விடுமே” என்று கவலைப்பட வேண்டியதில்லை. அவ்வப்போது அறிக்கையனுப்பும்படி சர்க்கார் கோரலாம். தவிரவும் ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்துக்கும் சர்க்கார் மானியம் கொடுக்கும்போது, அந்த மானியம் எவ்வாறு உபயோகிக்கப் படுகிறது என்பதை கவனித்துக் கொள்ள சர்க்கார் உரிமை வைத்துக் கொள்ளலாம். ஊழல்கள் பற்றிய புகார்வரும்போது மாகாண சட்டசபை ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்து, ஒரு கோர்ட்டின் அதிகாரத்துடன் பரிசீலனை செய்து கொள்ளலாம். இறுதியில் நிலைமை படுமோசமாகி, சர்க்கார் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், சர்க்கார் தனது “ராஜாங்க உரிமை” மூலம் தலையிட முடியும். அதற்கு ஸ்தல ஸ்தாபன சட்டத்தில் ஷரத்துகள் சேர்க்க வேண்டிய அவசியமே கிடையாது. ஏனென்றால் அந்த உரிமை சர்க்காருக்கு எப்போதுமே உண்டு. அந்த உரிமையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு அவ்வப்போது அவசரமாக தனிச்சட்டம் இயற்றிக்கொள்வதை எந்த ஸ்தல ஸ்தாபனமும் தடுத்துவிட முடியாது. ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள் ஒழுங்காக நடக்கின்றனவா என்று பார்ப்பதில் மட்டும் சர்க்காருக்கு விசேஷப் பொறுப்பு இருக்க வேண்டும்.

முக்கியமான தேவை

ஸ்தல ஸ்தாபனங்களின் வெற்றிக்கு முக்கியமான தேவை ஒன்றே ஒன்றுதான். “தமது ஊர் நல்ல வசதியுள்ளதாக இருக்க வேண்டும்” என்ற ஆசையும்,

அதன் நிர்வாகத்தில் அக்கறையும் பொதுஜனங்களிடையே பரவ வேண்டும். தமக்குப் பதவி வேண்டும் என்ற ஆசை இருந்தால் போதாது; தமது ஊரை நன்கு அமைத்துக் கொள்வதில் தாமும் சேவைசெய்ய வேண்டும் என்ற ஆசையுடன்தான் "பதவியில்" ஆசைகொள்ள வேண்டும். இந்தப் பொதுநலப்பற்று இருக்குமாயின், எழுத்தறிவு நன்கு பரவாத இடங்களிலும் ஸ்தல சுயாட்சி திருப்திகரமாகச் செயல்பட முடியும். ஆனால் ஒரே ஊரில் ஒரு பகுதியினர் மட்டும் நன்கு படித்துக் கல்வியறிவுடையவர்களாகவும், பெரும்பாலான மக்கள் கல்வியறிவில்லாதவர்களாகவும் இருந்தால் பரஸ்பர சந்தேகத்தின் காரணமாக ஸ்தல சுயாட்சி பாதிக்கப்படும். கல்வியறிவற்றவர்கள் ஆதிக்கத்துக்கு வந்தால், மற்றவர்கள் நிர்வாகம் திறமையற்றது என்று மனதில் குறைப்படுவார்கள்; படித்த வகுப்பினர் பதவிக்கு வந்தால், மற்றவர்கள் அந்த நிர்வாகத்தை "படித்த வகுப்பினரின் சூழ்ச்சி" என்று பொறாமைப் படுவார்கள்.

ஆகவே "கல்வி" எல்லா வகுப்பினரிடையேயும் ஓரளவு பரவியிருப்பது அவசியம். பூர்ண சுயாட்சியுள்ள ஸ்தல ஸ்தாபனங்களை நிறுவுவதற்கு முதற்படியாகச் செய்யவேண்டிய வேலை, கல்வி விஷயத்தில் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதுதான். இதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

இந்த அத்தியாயத்திலுள்ள சில யோசனைகள் பரஸ்பரம் முரண்பட்டிருக்கலாம். ஆனால் அவற்றில் வற்புறுத்தும் அடிப்படைக் கொள்கைகளில்தான் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும். பிரச்னையின் பல அம்சங்களையும் விளக்குவதே இந்த அத்தியாயத்தின் நோக்கம்.

இந்நூலில் மேற்கோளாகக் கொள்ளப்பட்ட ஆங்கிலப் பிரசுரங்கள்.

1. Local Government in England and Wales: W. Eric Jackson.

2. A short Sketch of English Local Government Administration: B. Sen.

3. City Manual—City of Bridgeport—Connecticut.

4. Annual Report of the Town of Fairfield—Connecticut.

5. Report of the County Commissioners, County of Fairfield—Connecticut.

6. Report Board of Finance of the Town of Stamford.

7. Budget Estimate of City of Stamford—Connecticut.

8. Annual Report of the Board of Education and Superintendent of Schools.

9. Town of Stamford-Annual Report.

10. Composite Copy of Proposed Strong Mayor Charter and Council Manger Charter for the City of Stamford: Referendum for choice of same to be held—May 16, 1932.

11. Annual Report of the City of Stamford-1934.

12. New York City Charter Adopted at the General Election held—November 3, 1936.

13. Guide to the Municipal Government, City of New York—Fifth Edition: Rankin)

14. State of New York–Report of the Commission on Municipal Revenues and reductions of Real Estate Taxes.

15. City of New York—Manual of the Council.

16. Public Assistance in New York City Annual Report.

17. Montgomery County Survey.

18. Annual Report of the Board of Sinking Fund Trustees of the City of Dayton, Ohio.

19. Comprehensive Muncipal Plan Lancaster, Pennsylvania.

20. A progress Report of the Henry County Demonstration.

21. American Local Government: Roger Hewes Wells.

22 Statistical Abstract of the United States—1946.

23. America's Needs and Resources: J. Frednic Dewhurst and Associates.

24. A Guide to Panchayat Administration: K. Viswanathan.

25. Notice to Taxpayers of Clark County, Ohio—Rate of Taxation for 1946.

26. Notice—Auditors Report to Taxpayers New Holland Brough School District—County of Lancaster—1946.

"குமரி மலர்" வெளியீடுகள்

ரவீந்திரநாத டாகுர்

கி. சந்திரசேகரன்

விலை ரூ. 2-0-0

(தபால் செலவு தனி.)

தமிழ்ச் சுடர்மணிகள்

எஸ். வையாபுரிப் பிள்ளை

(விரைவில் வெளிவரும்.)